2017 ஜூன் 09-11
விலை: 30/-

■ ஹிஜ்ரி 1438 ■ ஷஃபான் பிறை 14 - 16 ■ பக்கங்கள் 16 ■ மணி 10 ■ ஒளி 023

QD / 154 / NEWS / 2017

நவமணி சுதி அந்த
NAVAMANI WEEKLY
# நவமணி
தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 14 - ஜூன் 09, வெள்ளி

## ரமழான்
### தொழுகை நேரங்கள்

| ஸ.முடிவு | சுபஹ் | சூ.உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|---|
| 04:17 | 04:31 | 05:55 | 12:11 | 03:39 | 06:26 | 07:43 |

## வளைகுடா நெருக்கடி: மீளுமா கட்டார்
08



# மருதானை முஸ்லிம் ஹோட்டலில் தீ



■ பீ.எப்.எம் றிஷாட்

மருதானை, மாளிகாகந்தை வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான ஹோட்டல் ஒன்று நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் திடீரென தீப்பிடித்துள்ளது. குறித்த ஹோட்டலின் பின்புறமாக உள்ள பூட்டு உடைக்கப்பட்டுள்ளதால், ஏதேனும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

கண்டி - தெல்தோட்டை பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான

15 »»»»

# பாடசாலைக்கு சென்றிராத 51,000 பிள்ளைகள்

இலங்கையில் இதுவரை ஒருநாளேனும் பாடசாலைக்கு செல்லாத 51,249 பிள்ளைகள் காணப்படுகின்றனர் என்றும் பாடசாலை செல்லும் வயதான 5-17 வயதுகளிலுள்ள 4 இலட்சத்து 52 ஆயிரத்து 661 மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர் என்றும் அதிர்ச்சித் தகவலொன்று வெளிவந்துள்ளது. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் பொருளாதார அலுவல்கள்

15 »»»»

# பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைக்கு தீர்வு
## கட்டார் வெளிவிவகார அமைச்சர் திட்டவட்டம்

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரேன் ஆகியன எகிப்தின் அனுசரணையுடன் கட்டாருடனான உறவுகளைத் துண்டிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என கட்டார் வெளிவிவகார அமைச்சர் அஷ்ஷெய்க் முஹம்மத் பின் அப்துர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அல் ஜஸீராவுக்கு அளித்த பேட்டியிலே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன் ஆகிய வளைகுடா நாடுகள் எகிப்தின் அனுசரணையுடன், கட்டாருடனான உறவுகளை துண்டிப்பதற்காக மேற்கொண்ட தீர்மானம் தொடர்பில் தனது கவலையை தெரிவித்துள்ள கட்டார் வெளிவிவகார அமைச்சர் அஷ் ஷெய்க் முஹம்மத் பின் அப்துர் ரஹ்மான் ஆல் தானி, முன்னொப்போதும் இல்லாதவாறு இந்த பிரச்சினைகள் ஊதிப் பெரிதாக்கப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

சர்வதேச ஊடகமான அல் ஜஸீராவுக்கு அவர் வழங்கிய நேர்காணலில், நாம் அறியாத வகையில் இந்த பிரச்சினைகளுக்கான உண்மையான காரணங்கள் இருக்கின்றனவா? அல்லது இல்லையா? என்பது பற்றி எமக்கு தெரியாது. எனினும் எமக்கு எதிரான ஊடகப் பிரச்சாரம் மற்றும் கட்டுக் கதைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை அப்படி ஏதேனும் உண்மையான காரணங்கள் இல்லை என்பதை ஊர்ஜிதப்படுத்துவதோடு, இவ்வாறான

15 »»»»

# திருமலை பள்ளிக்கு தீ வைத்த நபரும் கைது





திருகோணமலை பெரிய கடை மனையாவெளி ஜும்ஆப் பள்ளிவாசல் மீது தீ வைத்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை மிஹிந்தபுரத்தைச் சேர்ந்த சதிஸ் குமார் (வயது 22) என்பவராவார். இவரை துறைமுகப் பொலிஸார் திருகோணமலை மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் சித்திரவேலு சுபாசின் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக

15 »»»»

## முஸ்லிம் வர்த்தக நிலையங்களுக்கு தீ வைத்த சந்தேகநபர் கைது: தீவிர விசாரணைகள் ஆரம்பம்

■ பீ.எப்.எம் றிஷாட்

மஹரகம மற்றும் நுகேகொட பகுதிகளில் முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்களை இலக்கு வைத்து நாசகார வேலைகளில் ஈடுபட்டு வந்த நபர் நேற்றுமுன்தினம் இரவு மிரிஹான விசேட பொலிஸ் பிரிவின் உதவியுடன் இரகசிய

15 »»»»

## கட்டார் மீது பொருளாதார தடை: யு.ஏ.ஈ எச்சரிக்கை

குவைத் அமீரின் தீவிர முயற்சிகளுக்கு மத்தியில் கட்டார் தரப்பிலிருந்து சாதகமான சமிக்ஞைகள் இல்லாத நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை பொருளாதாரத் தடையாகவே இருக்கும்

15 »»»»

## கட்டார் நெருக்கடியால் இலங்கைக்கு தாக்கம்

கட்டார் அரசுக்கு எதிராக தற்போது எழுந்துள்ள நெருக்கடியானது இலங்கையின் கற்றுலாத்துறைக்கும் பாரிய தாக்கத்தை செலுத்தும் என்று சுற்றுலாத் துறை அமைச்சரான ஜோன் அமரதுங்க தெரிவித்தார். இதுவிடயம் குறித்து கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அவர்,

15 »»»»

## இராஜதந்திர உறவு துண்டிப்பால் பாரிய அடிப்படை மீறல்கள்

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரைன் ஆகிய மூன்று நாடுகளும் கட்டாருடனான இராஜதந்திர உறவுகளை துண்டித்துள்ளமையால் பாரிய அடிப்படை மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுவருவதாக கட்டார் தேசிய மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட கட்டார் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் கலாநிதி அலி பின்

15 »»»»





NOVEMBER UMRAH
PAY IN 12 MONTH INSTALLMENTS!!
First Choice for Pilgrims,
MOULANA TRAVELS & TOURS
IATA
நம்பிக்கையின் நட்சத்திரம்
"சென்றவரை கேளுங்கள் செல்வோம் வாருங்கள்"
No 195, Galle Road, Bambalapitiya
E: info@moulanatours.com W: www.moulanatours.com
Colombo 0720 999 555
Kandy 0720 999 777
Batticaloa 0720 999 666

2x உங்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டுப் பணத்தை இரட்டிப்பாக்கிடுங்கள்
2017 மே 01 முதல் 2017 டிசெம்பர் 31 வரை மாத்திரமே
உங்கள் வெளிநாட்டுப் பணத்தினை அமானா வங்கியூடாக பெற்று பணத்தினை இரட்டிப்பாக்கும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்
(அதிகபட்ச சலுகைத் தொகை ரூ. 50,000/-)
ALZAMAN EXCHANGE
WESTERN UNION WU
Money Master
LANKA MONEY TRANSFER
Ceylon Exchange
அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk
இது உங்கள் வங்கி Amãna Bank

# திரைக்குப் பின்னால்

- சஞ்சாரி

# வெள்ளத்தால் மக்களை மேலும் நெருங்கிய பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும

## நியூயோர்க்கில் தலைமுதல் கால்வரை பரிசோதிக்கப்பட்ட பிரதமர்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வைத்திய பரிசோதனைக்காக அமெரிக்கா சென்றிருந்தார். பிரதமர் மூன்று நாட்கள் நியூயோர்க்கிலுள்ள பிரஸ்பைடீரியன் பல்கலைக்கழக வைத்தியசாலையில் அனுமதி பெற்று வைத்திய பரிசோதனையை எதிர்கொண்டார். மூன்று நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்த பிரதமர் விசேட வைத்தியர்களால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டார். பிரதமரின் தலை முதல் கால் வரை பரிசோதனைகள் செய்யப்பட்டதன் பின்னர் பிரதமர் தேகாரோக்கியமிக்கவராக இருக்கிறார் என டாக்டர்கள் அறிக்கை வழங்கியுள்ளனர். பிரதமர் தங்கியிருந்த பிரஸ்பைடீரியன் வைத்தியசாலை ஓர் உல்லாச ஹோட்டலை விட சிறந்ததாக இருந்ததாக பிரதமர் தெரிவித்துள்ளார். ஹட்சன் நதியை நோக்கி இந்த வைத்தியசாலை உள்ளது.

பிரதமர் வைத்தியசாலையிலிருந்து வெளியான அடுத்த தினமே உலக சுற்றாடல் தினத்தன்று நடைபெற்ற ஐ. நாடுகள் சபையின் சமுத்திரம் தொடர்பான மகாநாட்டில் உரையாற்றினார். வைத்தியப் பரிசோதனையின் பின் பிரதமர் இன்னும் வைத்தியசாலையில் கண்காணிக்கப்பட்டு வருகிறார். இதனால் நியூயோர்க்கிலே தங்கியிருக்கும் பிரதமர் பல முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து வருகிறார். பிரதமர் கடுமையான நோயுற்றே அமெரிக்கா செல்கிறார். பிரதமருக்கு புற்றுநோய் என சில வெப்தளங்கள் வெளியிட்ட செய்திகளைப் பொய்ப்பித்தே பிரதமர் நியூயோர்க்கிலிருந்து பணிகளை மேற்கொண்டிருக்கிறார். பிரதமர் இன்னும் ஓரிரு தினங்களில் நாடு திரும்பவுள்ளார்.

## கபீர் ஹாசிம் பதவியை ராஜினாமாச் செய்யப் போவது ஏன்?

இரு வாரங்களுக்கு முன் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்துடன் பிரதி அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் பதவிகளிலும் மாற்றங்கள் கடந்த வாரம் இடம்பெற்றன. அமைச்சரவை மாற்றம் இடம்பெற்று இரு வாரங்கள் கழிந்தும் அமைச்சர்களுக்கான பொறுப்புக்களை குறிப்பிடும் வர்த்தமானி அறிவித்தல் இதுவரை வெளியிடப்படவில்லை. நிதி அமைச்சர் பதவியை வகித்த ரவி கருணாநாயக்கவின் விருப்பமின்றியே அவரது அமைச்சு மாற்றம் இடம்பெற்றுள்ளது. ரவி கருணாநாயக்கவின் வெளிவிவகார அமைச்சுக்கு பல புதிய நிறுவனங்கள் சேர்க்கப்படும் என செய்திகள் வெளியாகியிருந்தன. அமைச்சர் கபீர் ஹாசிமுக்குரிய சில நிறுவனங்கள் அமைச்சர் ரவியின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதாக கூறப்பட்டது. அமைச்சர் கபீர் ஹாசிமின் பொது முயற்சிகள் அமைச்சின் நிறுவனங்களை வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கப்படும் செயற்பாட்டைக் கண்டித்து அமைச்சர் கபீர் ஹாசிம் தான் அமைச்சுப்பதவி மற்றும் ஐ.தே.க. செயலாளர் பதவிகளிலிருந்து இராஜினாமாச் செய்யத் தயாராகினார். இந்த தகவல் கிடைத்ததும் ஜனாதிபதி கபீரை அழைத்துப் பேசியுள்ளார். ஜனாதிபதியின் சந்திப்பினையடுத்து கபீர் ஹாசிம் இராஜினாமாச் செய்யும் தீர்மானத்தைக் கைவிட்டுள்ளார். ஜனாதிபதியுடன் பேசும்போது ஒரு கட்டத்தில் கபீர் ஹாசிமிற்கு மிஞ்சும் நிறுவனங்களிலிருந்து அகழ்வு வேலைகளை மட்டுமே செய்ய வேண்டியிருக்கும் எனத் தெரிவித்திருந்தார்.

## அறைக்கு சண்டை பிடிக்கும் கபீரும் யாப்பாவும்

இதேநேரம், அமைச்சர் கபீர் ஹாசிமுக்கும் அவரது அமைச்சிற்கு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள லக்ஷ்மன் யாப்பாவிற்குமிடையிலான உறவிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு உலக சந்தைக் கட்டடத்திலே அரச தொழில் முயற்சிகள் அமைச்சு இருக்கின்றது. இங்கு இராஜாங்க அமைச்சருக்கு ஆறு அறைகளே ஒதுக்கப்பட்டிருந்தன. ஏற்கனவே இருந்த இராஜாங்க அமைச்சருக்கு ஒன்பது அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. புதிய இராஜாங்க அமைச்சருக்கு 6 அறைகளே ஒதுக்கப்பட்டிருந்தன. இதனால் இது தனது பணியாளர்களுக்கு போதாது என்று குறிப்பிட்டுள்ள லக்ஷ்மன் யாப்பா இன்றும் பதவி ஏற்காது இருக்கிறார். இதேநேரம் லக்ஷ்மன் யாப்பாவுக்கு புதிய இராஜாங்க அமைச்சு ஒன்று வழங்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## கரு பரணவிதான ஊடக அமைச்சிலிருந்து மாற்றப்பட்டது ஏன்?

ஊடகத்துறை பிரதி அமைச்சராக இருந்த கரு பரணவிதான ஊடக அமைச்சிலிருந்து தொழிற் பயிற்சி பிரதி அமைச்சர் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஊடக முழுமையாக ஐ.தே.க. வசம் இருப்பதனை விரும்பாததாலே கரு பரணவிதானவுக்கு அந்தப் பதவி மாற்றத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இதற்கு முன்பு பல ஊடக நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகித்த கருவுக்கு அத்துறையில் நல்ல அனுபவம் உள்ளது. நிதி, ஊடக அமைச்சராக மங்கள சமரவீரவும் இராஜாங்க அமைச்சராக இரான் விக்கிரமரத்னவும் பிரதி அமைச்சராக கரு பரணவிதானவும் இருந்தால் இங்கு சுதந்திரக் கட்சி பிரதிநிதித்துவம் இல்லாமல் போவதனைத் தடுக்கவே ஸ்ரீ.ல.சு.க. கட்சியைச் சேர்ந்த லசந்த அலகியவன்னவுக்கு அப்பதவி வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி இது பற்றி அறிவூட்டிய பின்பே கரு பரணவிதானவுக்கு புதிய பிரதி அமைச்சர் பதவியை வழங்கியுள்ளார். கூட்டு அரசுக்குள் இப்படியும் பனிப்போர் நடக்கின்றது.

## வெள்ள நிவாரணம் திரட்ட உதவி வழங்கும் நாடுகளது கூட்டம்

வெள்ளம் மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது அவர்களது துயரைக் கேட்டறிவது தொடர்பாக அரசாங்க அங்கத்தவர்களும் எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் தொடர்ந்து விஜயங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரத்தினபுரி, களுத்துறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டு நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக உயர்மட்ட மகாநாடுகளை நடத்தி அதிகாரிகளை அறிவூட்டி வருகிறார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி வழங்கும் நாடுகளின் மகாநாடொன்றை கூட்டப் போவதாக தெரிவித்துள்ளார். வெள்ளத்தினால் ஏழு இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## வெள்ளத்தால் மக்களை மேலும் நெருங்கிய பிரதி அமைச்சர் பாலித

துயரங்களின் போது மக்களுக்கு உதவுவதனை தன் உயிரிலும் மேலாகக் கருதும் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும இந்த வெள்ளத்தின் போது முழு நாட்டினதும் அவதானத்தை ஈர்த்த ஓர் அரசியல்வாதியாக திகழ்ந்தார். பாலித தெவரப்பெரும மண் சரிவினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்ற முதலாவது அரசியல்வாதியாவார். சாரத்தை அணிந்து கொண்டு மக்களோடு மக்களாக நின்று நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டார். சமூக ஊடகங்களில் கூடுதலாக பாராட்டப்பட்ட ஓர் அரசியல்வாதியாக அவர் திகழ்கிறார்.

## சைக்கிளில் சென்று வெள்ளம் பார்த்த நாமல் ராஜபக்ஷ

இதேநேரம், கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கு விஜயம் செய்தார். அம்பாந்தோட்டையிலிருந்து மாத்தறைக்கும் மாத்தறையிலிருந்து காலிக்கும் சென்ற நாமல் ராஜபக்ஷ இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்தார். பல்மதுல்லைக்குச் சென்ற நாமல், பவித்ரா வன்னிஆராச்சியுடன் சிரிபாகல மலையில் மண்சரிவு ஏற்பட்டதனால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திப்பதற்குச் சென்றார். அங்கு நாமல் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவுடன் துவிச்சக்கர வண்டி ஒன்றிலே பயணித்து பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தார். பவித்ரா வன்னிஆரச்சியும் முச்சக்கர வண்டி ஒன்றிலே சென்றார். இரத்தினபுரியில் எவருக்கும் போக முடியாதிருந்த ஊர் ஒன்றுக்கு நாமல் அயலூரின் ஓர் இளைஞனின் சைக்கிளில் சென்றார். எவ்வித போக்குவரத்து வசதியும் இல்லாத அக்கிராமத்துக்குப் போக வேண்டாம் என்றும் எல்லோரும் கூறியும் நாமல் பயணித்தார்.

## பிக்குகளின் பாராட்டைப் பெற்ற றிஷாத்

வெள்ள நிவாரணம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் பலர் அடுத்தடுத்த தினமே தமக்கு ஒப்படைக்கப்பட்ட தொகுதிகளுக்குச் சென்று நிவாரண நடவடிக்கைகளை கண்காணித்தனர். கடந்த திங்களன்று அமைச்சர் றிஷாத் பதியுதீன் இரத்தினபுரிக்கு விஜயம் செய்தார். இரத்தினபுரிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள றிஷாத் பதியுதீனே முதலாவதாக தம் பணியை ஆரம்பித்தவராவார். வெள்ளத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதியே இரத்தினபுரி. அமைச்சர் தொழில் அதிபர்கள் சிலரை அழைத்துக் கொண்டே அங்கு சென்றார். பிரதேசத்திலுள்ள பௌத்த பிக்குகளை அமைச்சர் சந்தித்தார். இரத்தினபுரியில் 14 விகாரைகளும் இரு பள்ளிவாசல்களும் ஒரு இந்துக் கோவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. இரத்தினபுரி ஸ்ரீ சுமணராம விகாரை, ஸ்ரீபோதிராஜாராம விகாரை, இரட்ணேஸ்வரன் சிவன் கோவில் மற்றும் ஜன்னத் பள்ளிவாசல், கொடிகமுவ பள்ளிவாசல் ஆகியவற்றுக்கும் விஜயம் செய்து விகாராதிபதிகள் மற்றும் தர்மகர்த்தாக்களிடமும் நிதி உதவிகளை கையளித்தார்.

அமைச்சர் றிஷாதினைப் பற்றி இதுவரை நாம் தப்பபிப்பிராயம் கொண்டிருந்தோம் இப்போதுதான் அவர் ஒரு நல்ல மனிதராக இருக்கிறார் என்பதனை அறிகிறோம் என ஸ்ரீ சுமணராம விகாரை அதிபதி தெரிவித்தார். அமைச்சருடன் சென்றிருந்த தொழில் அதிபர் முஸ்லிம் சலாஹுதீன் பாதிக்கப்பட்ட சகல இனங்களைச் சேர்ந்த சுமார் 950 குடும்பங்களுக்கும் நிதி உதவியை வழங்கினார்.

## முஸ்லிம் எம்.பிக்களை ஒன்றுகூட்டிய றஹ்மான்கள்

கடந்த சில தினங்களாக முஸ்லிம்கள் மீது அதிகரித்து வரும் தாக்குதல் சம்பவங்கள் பாராளுமன்றத்திலுள்ள முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு பெரும் தலையிடியைக் கொடுப்பதாகவே அமைந்திருந்தன. அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 21 பேர் இருந்தும் தமது கோரிக்கைகளை செவிமடுக்கப்படாதிருப்பது குறித்து பெரும் கவலை கொண்டிருந்தனர். இவர்களுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களும் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற கேள்வியாகவே இருந்தது. இளம் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் றஹ்மான், இசாக் றஹ்மான் மற்றும் எஸ்.எம். மரிக்கார் ஆகியோருக்கு இச்சம்பவங்கள் பெரு மனவேதனையை அளித்தன. கொலன்னாவையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார், இந்த விடயத்தில் அரசுக்கு ஒரு கடுமையான செய்தியைத் தெரிவிக்க வேண்டும். 21 பேரும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தெரிவித்தார். இவ்வாரத்தில் தொடர்ந்து மூன்று நாட்களும் கடைகள் எரிக்கப்படுவதனை அவதானித்த பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் மற்றும் இசாக் றஹ்மான் ஆகியோர், அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆராய்வதற்காக முஸ்லிம் எம்.பிக்களது அவசர கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தனர். அமைச்சர் ஹலீமைச் சந்தித்து முஸ்லிம் எம்.பிக்களது கூட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். இரு றஹ்மான்களும் இணைந்து 21 எம்.பிக்களையும் சந்தித்து இக்கூட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். புதனன்று பாராளுமன்றத்திலுள்ள அமைச்சர் ஹலீமின் அலுவலகத்தில் கூடிய முஸ்லிம் எம்.பிக்கள் கூட்டத்தில் ஒரு சிலரைத் தவிர, 15 பேர் கலந்து கொண்டனர். எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி இவர்கள் இக்கூட்டத்தில் தீவிரமாக ஆராய்ந்துள்ளனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் அவரை உடன் சந்திப்பதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டது. அது தவிர, இப்பிரச்சினைக்கு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக கடுமையான சில நடவடிக்கைகளை எடுப்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

அனர்த்தம் பற்றி ஆராய்ந்த குழுக் கூட்டத்தில் குறுக்கிட்ட முஜிபுர் றஹ்மான், இக்கூட்டம் நடந்து முடிந்து ஒரு மணி நேரத்தில் அனர்த்த நிவாரணம் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி தலைமையில் அரச பாராளுமன்றக் குழு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. வெள்ளியன்று பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள அனர்த்த நிவாரணம் தொடர்பான விவாதம் பற்றியே இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. ஜனாதிபதி கூட்டத்தை முடிப்போமா என்று கூறியதும் முஜிபுர் றஹ்மான் குறுக்கிட்டு அனர்த்தம் போன்றே மற்றொரு முக்கிய விடயம் பற்றியும் குறிப்பிட ஒரு நிமிடம் அவகாசம் கோரியுள்ளார். ஜனாதிபதி அனுமதி வழங்கியதும் முஜிபுர் றஹ்மான் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் தாக்குதல்கள் பற்றி ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார். அதனையடுத்து இசாக் றஹ்மான் அமைச்சர் றிஷாத் பதியுதீன், பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா ஆகியோரும் விடயங்களை ஜனாதிபதியின் அவதானத்துக்கு கொண்டு வந்தனர். பொலிசாரால் இதனை கட்டுப்படுத்த முடியாவிட்டால் இராணுவத்துக்கு ஒப்படைப்பது பற்றி அடுத்து சில தினங்களில் தீர்மானம் எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல் நடத்துவோரை பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கண்டு பிடிக்க முடியாவிடின் இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு ஒப்படைப்பதாகவும் கூறினார்.

## இளைஞர்களுக்கு அரசியல் அலர்ஜி என்கிறார் மஹிந்த தேசப்பிரிய

இவ்வளவு காலமும் பதவி வகித்த தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு மாற்றமாக தற்போதைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் இருப்பதற்கு பதிலாக களத்துக்கு விஜயம் செய்து தேர்தலின் முக்கியத்துவம் பற்றி இளைய தலைமுறையினருக்கு அறிவூட்டி வருகிறார். கடந்த வெள்ளியன்று இப்பாகமுவ மத்திய கல்லூரியில் நடைபெற்ற வாக்குரிமை நமது உரிமை என்ற தொனிப்பொருளில் உரையாற்றினார். இதில் உரையாற்றிய அவர் கள்ளவாக்குப் போடுவது பெண் கற்பழிப்புக்கு சமமானது என்று தெரிவித்தார். அங்கு பேசிய மஹிந்த தேசப்பிரிய, இன்று எமது இளைஞர்களுக்கு அரசியல் அலர்ஜியாக உள்ளது. அதற்குக் காரணம் இன்றுள்ள அரசியல்வாதிகள் பற்றிய விரக்தியாகும். அரசியல்வாதிகள் கள்வர்கள், சண்டாளர்கள், பேய்கள் என்ற எண்ணமே அவர்களிடையே இருக்கின்றது. ஆனால், நான் சொல்வது அரசியல்வாதிகளும் மனிதர்களே. அவர்களுக்கு வாக்களித்தது பப்புவா நியூகினியாவிலிருந்தோ மெக்சிகோவிலிருந்தோ வந்தவர்கள் அல்ல எமது நாட்டு மக்களே என்றும் அவர் கூறினார்.

எமது நாட்டில் 35 வயதுக்கு குறைந்த வாக்காளர்கள் 35 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அந்த விகிதாசாரப்படி பாராளுமன்றத்தில் 90 இளைஞர்கள் இருக்க வேண்டும் இருப்பதோ 10 - 12 பேரே. இனி அவர்கள் அரசியலை வெறுப்பது புதினமாக இல்லையா எனக் கேள்வி எழுப்பிய தேசப்பிரிய, இன்று மரண வீடொன்றுக்குச் சென்றால் அமரத் தரும் கதிரையின் பின்புறத்தில் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று எமக்குத் தேவைப்படுவது சாமான் பங்கிடும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்ல, கொள்கைகளை வகுப்போரே என்றும் அவர் கூறினார்.

## காவியுடை அணிந்தோருக்கு கை வைக்குமுன்...

பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஹோமாகம நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளது. கடந்த 31ஆம் திகதி தேரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததனால் வழக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது. இதேநேரம், அல்குர்ஆனை அவமதித்ததாக அவரை விசாரிப்பதற்கு பொலிசார் தயாராகி வரும் வேளையில் அவர் தலைமறைவாகியுள்ளார். இந்தப் பின்னணியில் ஞானசார தேரர் கைதாவதைத் தடுப்பதற்கு பலமட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில தினங்களுக்கு முன் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் சியம் நிகாயவின் பதிவாளர் கலாநிதி மதகம தம்மானந்த தேரர் மைத்திரிபால சிறிசேனவை பதவிக்கு கொண்டு வர உழைத்த சில அரச சார்பற்ற இயக்கங்கள், பௌத்தர்கள் மீது இனவாத, மதவாத லேபல்கள் ஒட்டப்படுவதற்கு முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளார். ஞானசார தேரரின் நடத்தை வசனங்களைப் பயன்படுத்துவதில் பிரச்சினைகள் இருக்கின்றன என்றும் அவரை இனவாதியாக மதவாதியாக கைது செய்வது குறித்து மேலும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கூறிய அவர், காவியுடைக்கு கை வைக்க முன் இருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்காக இப்தார் நடத்திய புரவலர் ஹாசிம் உமர்

நூல்களின் முதற் பிரதிகளை வாங்குவதில் சாதனை நிலைநாட்டியுள்ள புரவலர் ஹாசிம் உமர் முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்காக மட்டும் பிரத்தியேகமான இப்தார் நிகழ்வு ஒன்றை கடந்த செவ்வாயன்று கொழும்பில் நடத்தினார். கொள்ளுப்பிட்டி குவின்ஸ் கபே ஹோட்டலில் நடைபெற்ற இந்த இப்தாரில் நாட்டின் சகல ஊடகங்களிலும் பணி புரியும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் சுமார் 75 பேரளவு கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் போது புரவலர் சில பதிவுகள் நூலும் ஊடகவியலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.



புரவலர் ஹாசிம் உமர் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்களுக்கான முதலாவது இப்தார் நிகழ்வும் இராப்போசன விருந்தும் கொள்ளுப்பிட்டியிலுள்ள குவின்ஸ் கபே ஹோட்டலில் நடைபெற்றது. இப்தாரில் பங்கு கொண்ட ஊடகவியலாளர்களை படங்களில் காணலாம். (படம் - அஷ்ரப் ஏ சமத்)

# பிரதமரின் தேக சுகத்திற்கு முஸ்லிம்கள் பிரார்த்தனை




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தபால், தபால் சேவைகள் முஸ்லிம் கலாசார அமைச்சு மற்றும் முஸ்லிம் கலாசார திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உடல் ஆரோக்கியத்திற்காக துஆப் பிரார்த்தனையும் மற்றும் இப்தார் நிகழ்வும் புதன்கிழமை மருதானை பெரியபள்ளிவாசலில் இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் தபால் சேவைகள் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் ஏற்பட்டிலும் முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர்.எம். மலிக் (நளீமி) ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற இந் நிகழ்வில், மௌலவி அல்-காரி பைஸலினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உடல் ஆரோக்கியத்திற்காகவும் மற்றும் நாட்டு நலனுக்காவும் சிங்கள மொழியில் துஆப் பிரார்த்தனை செய்யப்பட்டது.

நிகழ்வில், அமைச்சர்களான ரஊப் ஹக்கீம், ஏ.எச்.எம்.பௌஸி, பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், இம்ரான் மஹ்ரூப், அப்துல்லாஹ் மஹ்ரூப், காதர் மஸ்தான், தபால் மற்றும் முஸ்லிம் கலாசார அமைச்சின் செயலாளர் ஹப்புஆராச்சி, முஸ்லிம் கலாசார திணைக்கள அதிகாரிகள், அரச உயர் மட்ட அதிகாரிகள், மற்றும் ஏராளமான பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நோர்வே நிவாரணம்

வெள்ளத்தாலும் நிலச்சரிவாலும் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கான மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கு நோர்வே 10 மில்லியன் நோர்வேஜியன் குரோனர்களை (இலங்கை மதிப்பில் 180 மில்லியன் இலங்கை ரூபா) வழங்குகின்றது என நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் பர்கே பிரெண்டே அறிவித்துள்ளார்.

இவ்வுதவியானது ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் ஊடாகச் செயற்படுத்தப்படும். இயற்கை அனர்த்தங்களாலும் பருவநிலை மாற்றங்களாலும் ஏற்படும் அழிவுகளைத் தடுக்கவும் அதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்குமான நீண்டகால நோக்கின் தேவையை வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தியதோடு 'மட்டுப்படுத்தல் செயன்முறையானது நஷ்டஈட்டை வழங்குவதைவிடப் பயனுள்ளதென்பதோடு மனித உயிர்களையும் காக்கவல்லது' என வெளியுறவு அமைச்சர் பர்கே பிரெண்டே தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கான உதவியினூடாக நீர் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் சேகரிப்பு நிலையங்களின் தரத்தை அதிகரித்தல், கிணறுகளைச் சுத்தம் செய்தல், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையை மீளத் தொடங்குவதற்கான அடிப்படையான வாழ்வாதார வசதிகளை வழங்குதல் ஆகியன இடம்பெறவுள்ளன.

கொழும்பில் உள்ள நோர்வேஜியத் தூதரகமானது தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் நோர்வேஜிய நிலவியல் தொழிநுட்ப நிறுவனம் ஆகியவற்றுக்கிடையேயான தொழிநுட்பக் ஒத்துழைப்புக்கு நிதியுதவி அளிக்கிறது. அதன் மூலம் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் திறன் மேம்பாடு, அவ்வமைப்புக்கு நிலச்சரிவைத் தடுக்க உதவும் மேன்மையான தொழிநுட்ப உபகரணங்களை வழங்குவதோடு முன்னெச்சரிக்கையையும் நிலச்சரிவைச் தடுக்கும் வழிகளை அறியும் திறனும் மேம்படுத்தப்படும்.

## அனர்த்தங்களை ஆராய ஜப்பான் குழு இலங்கையில்

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு தொடர்பில் ஆராய்வதற்காக ஜப்பான் இடர்முகாமைத்துவ நிலையத்தின் விசேட குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

இலங்கையின் அழைப்பின் பேரிலேயே இந்தக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளுக்கு தரை மற்றும் ஆகாய மார்க்கமாக விஜயம் செய்து இந்தக்குழுவினர் ஆராயவுள்ளனர்.

ஆராய்வு செய்த அறிக்கை இந்த குழுவினரால் இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## மியன்மார் விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிப்பு

மியன்மாரில் 116 பேருடன் காணாமற்போன விமானத்தின் பாகங்கள் என சந்தேகிக்கப்படும் சில தடயங்கள் அந்தமான் தீவுக் கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மியன்மாரின் தென்பகுதியான மயாக்கில் இருந்து யான்கன் பிரதேசம் நோக்கி நேற்று முன்தினம் பயணித்த இராணுவ விமானமே அந்தமான் தீவுக் கடற்பரப்பில் வைத்து காணாமல் போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதில், 105 பயணிகளும் 11 சேவையாளர்களும் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த விமானத்தின் பாகங்கள் என சந்தேகிக்கப்படும் தடயங்கள் தற்போது கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இதில் பயணித்தவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரை தெரியவரவில்லை என்றும் விமானத்தை தேடும் பணியில் கப்பல்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் தொடர்ந்தும் இயங்கிவருகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பிலியந்தலை துப்பாக்கிச்சூட்டு சம்பவம்:

## சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

பிலியந்தலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவர் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 34 மற்றும் 27 வயதுகளையுடைய சந்தேகநபர்கள் இருவரும் நேற்று கெஸ்பேவா நீதிபதி சுனில் வீரசிங்க முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவர்களில் ஒருவர் தர்காநகரையும், மற்றவர் அஹங்கல்ல பிரதேசத்தையும் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி போதைப்பொருள் சுற்றி வளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இச்சம்பவத்தில் பொலிஸ் அதிகாரியொருவரும் பாதையில் இருந்த சிறுமி ஒருவரும் உயிரிழந்ததுடன், மேலும் இரு பொலிஸாரும், சிவிலியன்கள் இருவரும் படுகாயமடைந்தனர்.

மிரிஹான பொலிஸ் பிரிவினால் இந்த சந்தேகநபர்கள் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இப்தார் நிகழ்வு

(கியாஸ் ஏ. புஹாரி)

சம்மாந்துறை மனித நேய நற்பணி பேரவையின் முதலாவது நிகழ்வான இப்தார் வைபவம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, சம்மாந்துறை தாருல் ஈமான் கலபீடத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வானது இ.ஒ.கூ. பிறை எப்.எம். இல் மாலை 5 மணி முதல் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளதுடன்.

நிகழ்வில் அதிதிகள் பலரும் கலந்து கொள்வார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பத்து அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்கள்

சுகாதாரம், பெற்றோலிய வளங்கள், நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள், மகாவலி உள்ளிட்ட பத்து அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தார்.

அந்தவகையில், போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளராக ஜீ.எஸ் விதானகே, சுகாதார, போஷணை, சுதேச மருத்துவத்துறை அமைச்சின் செயலாளராக உதய ஆர். செனவிரத்ன, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக உபாலி மாரசிங்க, பெருந்தோட்டத்துறை அமைச்சுக்கு ஜே.ஏ. ரஞ்சித், விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சித்துறை அமைச்சின் செயலாளராக சிராணி வீரகோன், தொழில், தொழில் உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சுக்கு எஸ்.ஏ.என். சரணதிஸ்ஸ, நீர்ப்பாசன, நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் செயலாளராக ஜயந்த விஜேரத்ன, பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக ஏ.பீ.ஜீ. கித்சிறி, அபிவிருத்திப் பணிகள் அமைச்சின் செயலாளராக எல்.டீ. சேனாநாயக்க, மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளராக அநுர திசாநாயக்க ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



# சரிவை நோக்கி நகரும் நல்லாட்சியின் நல்லிணக்கம்

எம்.எஸ். அமீர் ஹுசைன்



இலங்கையில் புதிதாக எழுச்சி பெற்றுள்ள பௌத்த தீவிரவாதத்தால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த தமிழ்த் தரப்பினரும் கவலையடைந்திருக்கின்றனர். முஸ்லிம்களுக்காக வடக்கில் இருந்தும் குரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றது.

இந்த மாற்றத்துடன் புதிய யுகம் ஒன்று மலர்ந்துவிட்டதாகவும் இனி நிம்மதியாகவும் அமைதியாகவும் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று முஸ்லிம்கள் கருதினர்.

குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன நல்லுறவை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மும்முரமாக முன்னெடுத்தமை இதற்கு முக்கிய காரணமாகும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது துயர வாழ்க்கைக்கு முடிவு கட்ட தேவையான நடவடிக்கைகளை எடுத்தும் சக வாழ்வை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தும்

திகள் செய்து கொடுக்கப்படுவதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

அவர்கள் 25 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த காணிகளுக்கு மீண்டும் குடியேறுவதற்காக சென்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முற்படும் போது முஸ்லிம்கள் சிங்களவர்களதும் தமிழர்களதும் காணிகளை சூறையாடுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதன் எதிரொலியாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய சில இடங்களில் தமிழ் கிராமவாசிகள் சிலருடன் ஆங்காங்கே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறே வில்பத்தை அண்டிய பிரதேசங்களிலும், நீகவாபிய பகுதிகளிலும் ஏற்கனவே குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்து வரும் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள தீவிரவாதம் வன்முறைகளைப் பிரயோகித்து முஸ்லிம்களை அச்சுறுத்தி வருகின்றது.

அத்துடன் கடந்த சில மாதங்களாக முஸ்லிம்களுக்கு எதிரான சிங்கள தீவிரவாத செயற்பாடுகள் அதிகரித்த வண்ணமுள்ளன. பொதுபல சேனா, இராவணா பலய, சிங்ஹலே அமைப்பு, சொஹொன் பலகாய என்ற புதிதாக உருவாகிய அமைப்பு, ஐக்கிய பிக்கு முன்னணி ஆகிய அமைப்புக்கள் கூட்டாக ஒன்றிணைந்த முஸ்லிம் விரோத செயற்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ளன. கடந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் சிங்கள பௌத்த மக்கள் செறிவாக வாழும் பிரதேசமான மஹரகம, நுகேகொட, எம்பிலிபிட்டிய, பதுளை, கடவத்தை, காலி மற்றும் மாத்தறை போன்ற பிரதேசங்களில்

தன்னப்படடிருக்கின்ற ஒரு யுகம் உருவாகியிருக்கின்றது. எதிர்காலத்தில் வன்முறையாளர்கள் காவி உடையில் தெருவுக்கு இறங்கி முஸ்லிம்களது பொருளாதாரத் திற்கும் சொத்துக்களுக்கும் கை வைத்தால் இந்த அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

எல்லாம் முடிந்த பின்னர் பத்திரிகையில் செய்தி வந்தவுடன் அதனைப் பார்த்து ஜனாதிபதியும் பிரதமரும் பாதுகாப்புத் துறையினருக்கு கட்டளையிடும் நிலை ஏற்படுமானால் மக்கள் வாக்களித்து எதற்காக அரசாங்கமொன்றை பதவிக்கு கொண்டு வந்தார்கள் என்று கேட்க வேண்டியிருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷ அவரது ஆட்சியில் 2011 ஆம் ஆண்டில் இருந்து இந்த அமைப்புக்களுக்கு தீனி போட்டு முஸ்லிம் விரோதத்தை முன்னெடுப்பதற்கு அனுமதித்திருந்தார். அந்த பலத்தால் வளர்ச்சியடைந்த முஸ்லிம் விரோத சக்திகள் இந்த ஆட்சியின் நலிவடைந்த போக்காலும் பலவீனமான செயற்பாடுகள் காரணமாகவும் மேலும் தீவிரமடைந்திருக்கின்றன. இந்த அரசாங்கம் இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவிக்கவில்லை. ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் தயங்குகின்றது என்பதே முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள சந்தேகமாகும்.

இவ்விடயங்களின் பாரதூரத்தன்மை பற்றியும் எதிர்காலத்தில் எத்தகைய நிலை ஏற்படும் என்பதுபற்றியும் கடந்த 2017 ஜூன் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பேசிய அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெளி

சமூகத்திற்கு எதிரானவையாகவே உள்ளன. இவை தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதியின் செயற்திட்டத்திற்கு பாரிய சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் அமைந்து கொண்டிருப்பதை ஆட்சியாளர்கள் உணராமல் உள்ளனர். நாட்டின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் வகையிலும் அதனை இன, மத ரீதியான வன்முறைகளைத் தூண்டாத வகையிலும் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி அரசியல் அமைப்பின் பிரிவு 15 (1- 7) வரையில் வலியுறுத்தப்பட்டிருந்தாலும் அவை வெளிப்படையாகவே இத்தகைய ஊடகங்களாலும் பௌத்த தீவிரவாத செயற்பாட்டாளர்களாலும் மீறப்படுகின்றன.

இந்நிலை தொடருமானால் நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக கடந்த ஆட்சியில் முஸ்லிம்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டு அந்த ஆட்சியாளர்கள் வெறுப்படைந்தார்களோ அதே நிலைதான் இந்த ஐ.தே.க. தலைமையிலான நல்லாட்சியிலும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

அதனால் யதார்த்த நிலையை சரியாகப் புரிந்துகொண்டு இந்த ஆட்சியில் முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகளுக்கும் இழிவுபடுத்தல்களுக்கும் இடமளிக்காது அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் நல்லிணக்க செயற்பாடு என்பது தமிழர்களோடு சம்பந்தப்பட்டது என்ற அடிப்படையிலான போக்கே நிலவிவருகின்றது. முஸ்லிம்க

முஸ்லிம்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள், வன்முறைகள், வெறுப்பூட்டும் நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் இத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வட மாகாண சபையில் 2017 ஜூன் 06 ஆம் திகதி பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது. இந்த பிரேரணையை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாது நாட்டின் எதிர்காலத்தில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் வன்முறை உணர்வு ஏற்படாதிருப்பதற்கும் அழிவு ரீதியான சிந்தனைக்கு பதிலாக இளைஞர்கள் மத்தியில் ஆக்க பூர்வமான சிந்தனையை புகுத்தி நாட்டின் அபிவிருத்திக்காக இளம் தலைமுறையினரை ஊக்கப்படுத்துவதோடு மக்கள் மத்தியில் நல்லிணக்க உணர்வை மேலிடச் செய்வதற்கு அடித்தளமிடுவதற்குமாக தேசிய நல்லிணக்க கற்கைநெறியை இலங்கையில் பல்கலைக்கழகங்களில் ஒரு பாடமாக கற்பிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இதன் ஒருகட்டமாக மட்டக்களப்பு, தென்கிழக்கு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம் உட்பட பல உயர் கல்வி நிறுவனங்களில் தேசிய நல்லிணக்க கற்கை நெறியை 2018 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது.

2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் அடிப்படை ஆட்சித் தத்துவமாக இருந்து வரும் நல்லாட்சியின் ஒரே குறிக்கோள் இன நல்லுறவும் சக வாழ்வுமாகும். குறிப்பாக வடக்கையும் தெற்கையும் இணைத்து தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான இன நல்லுறவை பலப்படுத்துவதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றார். அதற்கு ஏற்ற வகையில் கடந்த 30 வருடகால யுத்த கொடூரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது வாழ்வில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதியின் வழிகாட்டலில் அரச உயர்மட்டம் மேற்கொண்டு வருகின்றது.





இந்த இன நல்லுறவு குறித்து சிந்திக்கின்ற போது இன மற்றும் மத ரீதியான சக வாழ்வு இந்நாட்டில் தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் உறுதியாக பலப்படுத்தப்பட வேண்டிய அதே நேரம் ஏற்கனவே ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ்ந்து வரும் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான ஒற்றுமை சின்னாபின்னப்பட்டு விடாமலும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருந்து வருகின்றது. முன்னைய மஹிந்தவின் ஆட்சியில் தொடர்ச்சியாக 04 வருடங்களாக இந்நாட்டு முஸ்லிம்கள் மிக மோசமான துன்பத்தை அனுபவித்தனர். முஸ்லிம்கள் மானசீகமான முறையில் துன்புறுத்தல்களுக்குட்படுத்தப்பட்டனர்.

மஹிந்தவின் ஆட்சியில் பலம் பெற்ற சிங்கள, பௌத்த தீவிரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தேசப்பற்றாளர்களது அடக்குமுறையாலும் துன்புறுத்தல்களாலும் முஸ்லிம் சமூகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அதனால் புதிய ஆட்சி மாற்றம் ஒன்று நிகழ வேண்டும் என்ற அடிப்படையில் அதற்கான சந்தர்ப்பத்தை பயன்படுத்தியதால் மஹிந்தவும் அவரது இத்தகைய மதவாத மற்றும் தேசப்பற்றாளர்களும் ஆட்சி அதிகாரத்தை இழக்க நேரிட்டது.

வருவது இந்த ஆட்சியின் சிறப்பு அம்சமாக அமைந்திருக்கின்றது.

ஆனாலும் இந்த சகவாழ்வு நடவடிக்கைகளின் போக்கை அவதானிக்கையில் முஸ்லிம் சமூகம் முழுமையாக புறக்கணிக்கப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கின்றது. வடக்கு கிழக்கில் நடைபெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட முஸ்லிம்களது பிரச்சினைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படாத நிலை காணப்படுவதோடு யுத்தம் காரணமாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முன்னர் வாழ்ந்த இடங்களில் தற்போதைய சகவாழ்வு சூழலைப் பயன்படுத்தி மீண்டும் குடியேறியுள்ள முஸ்லிம்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைப் போன்றே மிகவும் மோசமான நிலையில் அடிப்படை வாழ்க்கை வசதிகள் அற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதேபோன்று வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அவர்கள் முன்னர் வாழ்ந்த பிரதேசங்களில் மீண்டும் குடியேறுவதில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் நிலவுகின்றன. அந்த பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் முன்வைக்கப்பட்டு அவர்களை நிரந்தரமாக குடியேற்றுவதற்கான வச

இத்தகைய முஸ்லிம் விரோத போக்கு உக்கிரமடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. இதன் எதிரொலியாக ஒருசில இடங்களில் இதுவரையில் முஸ்லிம்களுக்கு சொந்தமான 06 வர்த்தக ஸ்தலங்கள் நள்ளிரவில் தீ வைத்து எரிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய சம்பவங்களின் பின்னால் திட்டமிடப்பட்ட வன்முறைச் சம்பவம் இடம்பெற்றிருப்பதை காண முடிகின்றது.

ஆனாலும் இவ்வாறான சம்பவங்களின் பின்னால் யார் இருக்கின்றார்கள் என்பது இதுவரையில் கண்டறியப்படாத மர்மமாகவே இருந்து வருகின்றது. முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் எதிர் நடவடிக்கைகள்தான் ஆமை வேகத்தில் உள்ளன. அதனால் நாட்டில் சட்டம் உறங்குகின்றதா விழித்திருக்கின்றதா என்பதை சரியாக உணர முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. நீதிமன்றத்திற்கும் சட்டத்திற்கும் சவால் விட்டுக்கொண்டிருக்கும் ஞானசார தேரரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் அவர் சட்டத்தையும் நீதிமன்றத்தையும் மிகவும் கீழ்த்தரமான முறையில் விமர்சித்தும் சவால் விட்டுக்கொண்டும் இருக்கின்றார். காவி உடை மீது கைவைத்தால் நடப்பது வேறு ''தன்னை கைது செய்தால் ஒரு மணித்தியாலத்திற்குள் நாட்டை வன்முறைக்குள் தள்ள முடியும்'' என்றும் அரசாங்கத்திற்கே சவால் விட்டுக் கொண்டிருக்கின்றார். ஒரு ஞானசார தேரரும் அமித்தும் டான் பிரியசாதும் அரசாங்கத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இந்த வன்முறை உணர்வை விதைத்து வரும் தீவிரவாத செயற்பாட்டு அமைப்புக்கள் வன்முறையை கட்டவிழ்த்து விட்டால் இந்த அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது என்ற கேள்வியே இப்போது முஸ்லிம் சமூகத்தினருக்கு ஏற்பட்டிருக்கின்றது. காவி உடை என்றவுடன் நாட்டில் சட்டமும் பாதுகாப்பும் அஞ்சும் அளவிற்கு மிக மோசமான நிலைக்கு

வாக அரசாங்கத்திற்கு கூறியுள்ளார். ஆட்சியாளர்களாகிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் நிவடயா, பொன்னயா, தக்கடியா என்றெல்லாம் அமித்தும் டான் பிரியசாதும் ஞானசாரரும் இழிவாக பேசவிட்டு பார்த்துக்கொண்டிருக்கும் அரசாங்கம் இந்த வன்முறையாளர்கள் சட்டத்தை கையில் எடுக்கும் வரையில் காத்திருக்கின்றதா என்று கேட்க வேண்டியிருக்கின்றது.

மிகவும் சிறிய ஒரு கும்பல் சட்டத்தை கையிலெடுத்து ஆட்சிக்கு சவாலாக செயற்பட்டு முஸ்லிம்களது அரசியல், பொருளாதார, மத, சமூக, கலாசார மற்றும் பண்பாட்டு செயற்பாடுகளை ஸ்தம்பிதமடையச் செய்யவும் முடக்கவும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாயின் இந்நாட்டில் சட்டம், நீதி, நிர்வாகம் என்ற ஆட்சித் தத்துவங்கள் உயிரோட்டம் உள்ளவைகளாக இருக்கின்றன என்பதில் எவ்வித அர்த்தமும் அற்ற நிலை உருவாகியிருக்கின்றது. இந்த ஆட்சியின் பலவீனமான நிலையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தளர்வுப் போக்கும் முன்னைய ஆட்சி

லுக்கு எதிரான செயற்பாடுகள் குறித்து முன்னைய ஆட்சியில் இருந்து வந்த அதே போக்கே ஜனாதிபதியின் புறத்தில் இருந்து நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. ஜனாதிபதி பௌத்த தீவிர போக்கில் செயற்படும் காவி உடையினரையோ அல்லது முஸ்லிம் விரோத செயற்பாட்டாளர்களையோ பகைத்துக்கொள்வதற்கு விரும்பாதவர் போன்றே செயற்பட்டு வருகின்றார். அண்மையில் முஸ்லிம் தரப்பினர் இது தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்தபோது தெளிவாக புரிய வைத்துள்ளனர். ஆனாலும் செயற்பாடுகள்தான் முடங்கியுள்ளன.

நல்லிணக்கம் என்று வெளி உலகிற்கு காட்டி ஐரோப்பிய நாடுகளை ஏமாற்றி சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கான தந்திரோபாயமாக அரசாங்கம் செயற்படுமானால் அது உண்மையில் வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயலாகும். 1983 ஆம்



யில் முஸ்லிம்களுக்கு எதிரான சக்திகளை மீண்டும் பலமடையச் செய்து கொண்டிருப்பதை தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

தேசிய இன நல்லிணக்கம் பற்றி பேசப்படுகின்ற நிலையில் நல்லிணக்கம் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் மட்டும் உரியதல்ல. இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களையும் அரசாங்கம் சமமாக நடத்த வேண்டியது அவசியமாகின்றது. ஒரு பக்க சார்பான நிலையில் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதால் நாட்டின் அமைதியை நிலைநாட்ட முடியாது என்பதை அரசாங்கமும் ஆட்சியாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இன்று முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்கள் பரப்பப்பட்டும் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதன் மூலமும் நாட்டின் வன்முறையொன்றை ஏற்படுத்தி மீண்டும் இழந்த ஆட்சியை கைப்பற்ற முடியும் என்ற மனப்போக்கில் முன்னைய ஆட்சியாளர்கள் சிலர் திரைமறைவில் முயற்சிகளை மேற்கொண்டு வருவது தெளிவாகத் தெரிகின்றது. இதற்காக மஹிந்த ராஜபக்ஷவிற்கு சார்பான சமூக ஊடக செயற்பாட்டாளர்கள், ஒருசிலர், தனியார் வானொலி சேவையாளர்கள், குறிப்பிட்ட சில தொலைக்காட்சி நிறுவனங்கள் என்பன இத்தகைய செயற்பாடுகளுக்கு அனுசரணையாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவை ஒலி, ஒளிபரப்புகின்ற நிகழ்ச்சிகள், நேர்காணல்கள், கட்டியெழுப்ப முயற்சி செய்கின்ற பொதுமக்கள் அபிப்பிராயங்கள் அனைத்தும் முஸ்லிம்

ஆண்டு ஏற்பட்ட ஜூலைக் கலவரம் தொடர்பாக குற்றம் சுமத்தும் தரப்பினர் இன்றும் கூட அன்றைய ஐ.தே.க. ஆட்சியை குறை கூறுகின்றனர். அன்றைய ஆட்சியாளர்கள் வன்முறையாளர்களுக்கு மூன்று நாள் கால அவகாசம் வழங்கியே தமிழர்களது சொத்துக்களை அழித்தார்கள் என்ற குற்றச்சாட்டு அழிக்க முடியாத வரலாறாக பதிவாகியிருக்கின்றது

இன்றைய நிலையில் முஸ்லிம்களுக்கு எதிராக 1983 ஆம் ஆண்டு போன்ற ஒரு நிலையை முஸ்லிம் விரோத மற்றும் எதிர்ப்பு இயக்கங்கள் மேற்கொள்வதற்கு முன்னர் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கின்றது. யாழ் நூலகம் எரிக்கப்பட்டமை, 1983 இல் 60.000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டமை உட்பட அன்றைய ஐ.தே.க. ஆட்சி மீது சுமத்தப்பட்ட பல கசப்பான குற்றச்சாட்டுக்களை இன்றும் கூட வரலாற்றில் இருந்து அழிக்க முடியாத நிலை இருந்துகொண்டிருக்கின்றது.

அத்தகைய ஒரு வரலாற்றை பொதுபல சேனா, ராவணா பலய போன்ற தீவிரவாத அமைப்புக்கள் இந்த ஆட்சியிலும் எழுதச் செய்யும் நாள் வெகு தொலைவில் இருக்காது என்ற நிலையே தற்போது உருவாகிக் கொண்டிருக்கின்றது. அதற்கு முன்னர் அரசாங்கம் முன்னேற்பாடாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது. இன்றேல் நல்லிணக்கம் என்பது வெறும் வாய் வார்த்தையாக பேசவும் கற்பிக்கவும் முடிந்த பாடமே தவிர யதார்த்தரீதியாக பிரயோசனமற்றதாகும். முஸ்லிம் சமூகத்திற்கு அது எட்டாக்கனியாகும் என்பதில் சந்தேகமில்லை.







# இஸ்லாமிய தீவிரவாதம் இங்கிருப்பதாக பெரும்பான்மை உணர்வை கிளற முயற்சி

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு



இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதம் அல்லது தீவிரவாதம் புகுந்திருப்பதாக மிகவும் விஷமத்தனமான பிரசாரங்களை செய்து கொண்டு திரிகின்ற சில குழுக்கள் கடந்த சில வருடங்களாக அவ்வாறான ஓர் உணர்வை நாட்டின் பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு தொடர்ந்து எத்தனித்து வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தமது அலுவலகத்தில் கடந்த அரச இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அமைச்சர் இதனைக் கூறினார்.

அப்பொழுது அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

எங்களைப் பொறுத்தமட்டில், எங்களுடைய நாட்டில் இவ்விதமான அடிப்படைவாதமோ, தீவிர வாதமோ வேரூன்றுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. குறிப்பாக முஸ்லிம்கள் என்ற பெயரில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத, அடிப்படைவாத அமைப்பொன்று செயல்பட்டு வருவதாக சொல்லப்படுவதை கூட நாங்கள் கோட்பாட்டு ரீதியாகவும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனென்றால் பயங்கரவாதத்தோடு தொடர்புபடுத்தி இவர்கள் கூறுகின்ற அடிப்படை வாதம் என்பது இஸ்லாத்திற்கு முரணான விடயமாகும். இஸ்லாத்தில் அவ்வாறான அடிப்படை வாதம் என்று ஒன்று கிடையாது. இஸ்லாம் என்பது ஒரே மார்க்கம் என்பதைத் தவிரவும், அதற்கு வியாக்கியானம் செய்பவர்கள் தாங்கள் விரும்பியவாறு தீவிரப் போக்கில் சில விடயங்கள் குறித்து தங்களுடைய விளக்கங்களை கொடுப்பதன் மூலம் முஸ்லிம்களை திசை திருப்புவதற்கு முடியாது.

இந்த நாட்டில் முஸ்லிம்கள் தொடர்ந்தும் சமாதான விரும்பிகளாக இருந்து வருகின்றனர். நாட்டில் யுத்தம் நடந்த கால கட்டத்தில் அதனால் முஸ்லிம்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.

இவ்வாறான சூழ்நிலையில் இந்த நாட்டில் மீண்டும் ஒரு கலவரத்தை தூண்டுவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சி களை முறியடிக்கின்ற நோக்கத்தில் முஸ்லிம்கள் அமைதி பேணுகின்றார்கள், பொறுமைகாக்கின்றார்கள், சகிப்புத் தன்மையை உச்சகட்டத்தில் பேணுகின்றார்கள் என்பதையெல்லாம் மறந்து மிக மோசமாகவும் கேவலமாகவும் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் நிந்தித்து வசைபாடித்திரிகின்ற ஒரு கும்பல் முஸ்லிம்களுக்கு மத்தியில் இருந்து தீவிரவாதக் குழுவொன்று இந்த நாட்டிலிருக்கின்ற ஸ்திரத்தன்மையைப் பாதிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றதென்று பிரசாரம் செய்வது அப்பட்டமான பொய்யாகும்.

அதேவேளை, முஸ்லிம்கள் மீது அக்கிரமங்களைக் கட்டவிழ்த்துக் கொண்டிருக்கின்ற சில தீய சக்திகளை சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸார் உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற விநயமான வேண்டுகோள் நீண்ட நாட்களாக விடுக்கப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற அசம்பாவித சம்பவங்க ளுக்கு மிக இறுக்கமான தீர்வுகளை காண வேண்டிய கடப்பாடு இந்த ஆட்சியாளர்களுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் மிகவும் திட்டவட்டமாக சொல்லி வருகின்றோம்.

எனவே, முஸ்லிம்கள் இந்த விடயத்தில் இதுவரையும் மிக பொறுப்புணர்ச்சியோடு, பொறுமை காத்து வருகின்றார்கள் என்பதைவிட்டு அவர்களை நாங்கள் பாராட்டுகின்ற அதேவேளையில், அரசாங்கத்தை பொறுத்தமட்டில் எந்தவிமான பாரபட்சமோ, பக்கச்சார்போ இல்லாமல் நீதியையும், சட்டத்தையும் நிலைநாட்டுகின்ற கடமையை செய்கின்ற பொறுப்பை அவர்கள் ஏற்றாக வேண்டும் என்பதை மிகவும் வலியுறுத்தி சொல்லி வைக்க விரும்புகின்றோம் என்றார்.

## கம்பஹா மாவட்ட உணவகங்கள் பரிசோதனை

( மினுவாங்கொடை நிருபர் )

மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் கம்பஹா மாவட்டக் காரியாலயம், கம்பஹா மாவட்டத்திலுள்ள உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் என்பனவற்றின் சுகாதாரத் தரத்தினைப் பரிசோதனை செய்வதற்கான அதிரடி நடவடிக்கைகளை, தற்போது முன்னெடுத்துள்ளது.

இந் நடவடிக்கையின் முதற் கட்டமாக மாவட்டத்திலுள்ள உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பன, மாவட்ட மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை அலுவலகத்தில் கட்டாயம் பதிவு செய்யப்படல் வேண்டுமென, அலுவலகப் பணிப்பாளர் சதுரியினால் பதிவுத் தபால் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனங்களில் உணவு தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தண்ணீரின் சுகாதாரத் தன்மை, உணவு தயாரிப்பின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் பிரதான வடிகான்களில் தேங்கியிருத்தல் போன்றவை தொடர்பாக முக்கிய கவனத்திற்கு எடுத்த பின்னரே, மத்திய சுகாதார அதிகார சபையின் நிறுவன அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

மினுவாங்கொடை நகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சோதனை நடவடிக்கைகளின் பின்னரே நகர சபையின் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமென, மினுவாங்கொடை நகர ஆணையாளர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கலவான பிரதேச மக்களுக்கு அரநாயக்க வில்பொல அல்-மனார் ஜும்ஆ பள்ளிவாசல், திப்பிடிய ராஜகிரிய மல்பா விகாரை மற்றும் அரநாயக்க பொலிஸார் இணைந்து நிவாரண உதவிகளை வழங்கிவைத்தனர். அல்-மனார் நிர்வாக சபைத் தலைவர் எம்.யூ.பர்ஹான் முஹம்மத், ராஜகிரிய விகாராதிபதி கடயாபதனே ஆனந்த தேரர் மற்றும் அரநாயக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சஜீவ குணதிலக ஆகியோரை படத்தில் காணலாம்.

(அரநாயக்க பிரதீப் குமார)

## எட்டு கோடி ரூபா செலவில் மல்கம்பிட்டியில் பாலம்



(எம்.சி. அன்சார்,எஸ்.எல்.சலீம் )

கிராமங்களை நகரங்களுடன் இணைக்கும் வேலைத்திட்டத்திற்கு அமைய உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள கிராமிய பாலங்கள் நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் 8கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டின் கீழ் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான எம்.ஐ.எம். மன்சூரின் அயராத முயற்சியின் பலனாக இப்பிரதேச விவசாயிகளின் மிக நீண்டகாலத் தேவையாக இருந்த சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் பிரிவிற்குட்பட்ட பட்டம்பிட்டி மல்கம்பிட்டி அணைக்கட்டிற்கு அருகாமையில் அமையவுள்ள பாலத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் எம்.எஸ். றிப்னாஸ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இப்பாலத்திற்கான அடிக்கல்லினை நட்டு வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். இதில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையின் இணைத்தலைவர் யு.எல்.மஹ்ரூப் (மதனி), விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சல்மடு கண்டம், பெரிய பள்ளிக்கண்டம், கந்தன்வெளி மற்றும் மல்கம்பிட்டி போன்ற வட்டைகளில் விவசாயம் மேற்கொள்ளும் 1000ற்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரிதும் நன்மையடையவுள்ளனர்.

## பெண்களுக்கான இஸ்லாமிய மாநாடு

(அட்டாளைச்சேனை நியாஸ் ஆதம்)

அட்டாளைச்சேனை ஜம்மிய்யத்துத் தர்பிய்யத்தில் இஸ்லாமிய்யா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பெண்களுக்கான இஸ்லாமிய மாநாடு (11) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி முதல் மதியம் 12 மணிவரை ஜம்மிய்யா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஏ.முபீன்(ஸஹ்வி) தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் தலைசிறந்த உலமாக்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றவுள்ளனர்.

அந்தவகையில் அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல்.முபாறக்(மதனி) உளத்தூய்மை எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க் நஜ்முல் ஹுஸைன்(அப்பாஸி) நோன்பு எதிர்பார்க்கும் இறையச்சம் எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க் இத்ரீஸ் ஹசன்(ஸஹ்வி) மரணத்திற்கு முன் தர்மம் செய்வோம் எனும் தலைப்பிலும், சொற்பொழிவாற்ற வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இப்தார் நிகழ்வு

(எம்.எப். நவாஸ் - அட்டாளைச்சே னை )

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் பேரவையின் இப்தார் நிகழ்வு 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று கிங் ஆசிய செப் ஹோட்டலில் பேரவையின் தலைவர் எம்.ஏ. பகுர்தீன் தலைமையில் இடம் பெறவுள்ளது. இதன்போது மார்க்க அறிஞர்களின் இப்தார் சிறப்புரை இடம் பெறவுள்ளது. இதில் உலமாக் கள்,அரசியல் பிரதி நிதிகள் என பலரும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

உதவுங்கள்! உதவும் கரங்களுக்கு!!

புனித ரமழானில்

உங்கள் ஸகாத், ஸதகா,
நன்கொடைகளை திஹாரிய இஸ்லாமிய
அங்கவீனர் நிலையத்திற்கு வழங்வீர்களாக.

பொருளாலர்,
இஸ்லாமிய அங்கவீனர் நிலையம்
தூல்மலை, திஹாரிய, ஸ்ரீ லங்கா
காசோலையில்,
"Islamic Centre for the Physically Handicapped"
என்று எழுதவும்.

AMANA BANK - COLOMBO 3 - A/C NO : 0010145351001
NDB - MAIN BRANCH - A/C NO : 101000066002
SEYLAN BANK - YAKKALA - A/C NO : 035003110956001
HNB - NITTAMBUWA - A/C NO : 025010001879

Tel : 033 2287840 | 033 2296231
haniffaicph@yahoo.com www.disableinsrilanka.org

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்

கேள்விமனு அழைப்பிதழ்

ச.தொ.ச. தலைமையக கட்டிடத்தில்
சுத்திகரிப்பு சேவை வழங்கல்

இல. 27 வொக்ஷோல் வீதி கொழும்பு - 02 இல் உள்ள ச.தொ.ச. தலைமையக கட்டிடத்தில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக இந்தப் பணி தொடர் பான சான்றிதழ் மற்றும் மனித மற்றும் பௌதீக வளங்கள் கொண்ட நிறுவனங் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முழுமையான விபரங்களை உள்ளடக்கிய டெண்டர் பத்திரத்தை ச.தொ.ச காசாளருக்கு மீளளிக்கப்படாத 5,000 ரூபா பணத்தைச் செலுத்தியதன் பின் ச.தொ.ச. தலைமையகத்தின் 7ஆவது மாடியிலுள்ள வழங்கல் பிரிவில் 2017/06/23 - 13.00 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

முத்திரையிடப்பட்ட கேள்விமனு பத்திரத்தை 2017/06/23 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்பு ச.தொ.ச தலைமையகத்தின் ஏழாம் மாடியில் வைக்கப்பட் டுள்ள இல.20 என்ற பெட்டியில் இட வேண்டும். இச் சந்தர்ப்பத்திலேயே கேள்விமனு பத்திரங்கள் திறக்கப்படும்.

தலைவர்
கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்
27,வொக்ஷோல் வீதி, கொழும்பு-2.

மாகொல முஸ்லிம் அநாதை நிலையம்

மல்வானைக் கிளை - யதாமாப் பாடசாலை

பதவிகள் வெற்றிடம்

கீழ்வரும் பாடங்களில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு, தகைமையுள்ள வர் களிடமிருந்து (ஆண்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆரம்பக் கல்வி தவிர்ந்த ஏனைய ஆசிரியர்கள் க.பொ.த. சாதாரண வகுப்பு வரை கற்பிப்பதற்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும். புதிதாக ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். உணவும் தங்குமிட வச தியும் வழங்கப்படும்.

தமிழ் மொழி மூலம்:

1. கணிதம்
2. ஆங்கிலம்
3. தமிழ் மொழி
4. அரபு / இஸ்லாம்
5. சுகாதாரம்
6. விஞ்ஞானம்
7. வரலாறு
8. குடியுரிமைக் கல்வி
9. ஆரம்பக் கல்வி

ஆங்கில மொழி மூலம்:

1. கணிதம்
2. சுகாதாரம்
3. விஞ்ஞானம்
4. குடியியல்

விண்ணப்பங்கள் யாவும் "Secretary, Board of Management, Makola Muslim Orphanage, 6th Floor, 142, Galle Road, Colombo -03" என்ற முகவரிக்கு 23.06.2017க்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவத்தில் கல்வித் தகைமை, கற்பித்தல் அனுபவம், ஏனைய தகைமைகள், வயது போன்றவற்றோடு, விண்ணப்பதாரியின் பூரண விபரங்கள் (தொலைபேசி இலக்கம் உட்பட) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும் தபாலு றையின் இடது பக்க மேல் மூலையில் **'ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்'** என்று குறிப்பிடவும்.

செயலாளர்
முகாமைத்துவ சபை,
மாகொல முஸ்லிம் அநாதை நிலையம்
6ஆம் மாடி, 142, காலி வீதி,
கொழும்பு - 03.

NAVAMANI WEEKLY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
11th JUNE 2017 - SUNDAY

# நெருக்கடி நிலையிலிருந்து முஸ்லிம்களை மீட்டெடுப்பது அரசின் பொறுப்பு இல்லையா?

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இந்நாட்டு மக்கள் குறிப்பாக சிறு பான்மை மக்கள் நல்லாட்சி அரசினை பதவியில் அமர்த்தியது நாட்டின் சகல பிரஜைகளுக்கும் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்புடனாகும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசு காலத்தில் சிறு பான்மை இனத்தவர்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்பட்ட வெறுப்பு சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தமிழர்களும், முஸ்லிம்களும் தம் உயிர்களைக் கூட துச்சமாக மதித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு நாட்டின் சிறுபான்மை மக்கள் குறிப்பாக முஸ்லிம்கள் தமது ஆதரவினை வழங்குவதற்கு காரணம் ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஜனாதிபதி வேட்பாளராக அவர் இருந்தது என்றால் தவறிருக்காது.

இன்று, நல்லாட்சி அரசினைப் பதவிக்கு கொண்டுவருவதற்கு பெரும் பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமூகம் நிம்மதியிழந்து எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் வாழ்ந்து வருகின்றது.

சில நேரங்களில் நல்லாட்சிக்கு எதிரானவர்கள் இது உங்களுக்குப் போதுமா? என்று கேட்குமளவிற்கு நிலைமை மிக மோசமாக இருக்கின்றது.

நாம் இதனை எழுதும் போது பள்ளிவாசல்கள், முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்ட 25 சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நாளை விழிக்கும் போது கிடைக்கும் முதல் தகவல் முஸ்லிம்களுக்குரிய பள்ளிவாசலோ வர்த்தக நிலையம் ஒன்றோ எங்காவது தாக்கப்பட்ட செய்தியாக இருக்கும் என்ற நிலை தொடர்கின்றது.

இந்நாட்டு முஸ்லிம் சமூகம் இந்த அரசின் கீழ் இவ்வாறான தண்டனை ஒன்றைப் பெறுவதற்கு அவர்கள் செய்துள்ள தவறு என்ன? என்று முஸ்லிம்கள் கேட்கிறார்கள். குறிப்பாக முஸ்லிம்களின் வருடத்துக்கொருமுறை வரும் மிகப் புனிதமான நோன்பு மாதத்தில் இச்சம்பவங்கள் தொடர்கின்றன.

இந்தப் பீதி நிலை காரணமாக இரவு நேர வணக்கங்களுக்கு சில பிரதேசங்களில் பள்ளிவாசல்களுக்குக் கூட போக முடியாத நிலை உருவாகியுள்ளது.

இந்த நெருக்கடி நிலையிலிருந்து முஸ்லிம் சமூகத்தை மீட்டெடுப்பது இந்த அரசின் பொறுப்பு இல்லையா?

அதேநேரம் இந்த விவகாரத்தில் முஸ்லிம் சமூகம் மீது சில பௌத்த பிக்குகள் குற்றஞ்சுமத்தியிருப்பது கவலையை அளிக்கின்றது. இது பெரும்பான்மைச் சமூகத்தவரிடையே முஸ்லிம்கள் பற்றி தப்பபிப்பிராயங்களை வளர்ப்பதற்குக் காரணமாக அமையலாம். இந்த அரசு உருவாக்க முயற்சிக்கும் சமூகங்களுக்கிடையிலான நல்லெண்ணத்திற்கு இது நிச்சயமாகத் தடையாக அமையும்.

இந்த விடயங்களில் முஸ்லிம் சமூகத்தவர்களிடையே தவறுகள் இருந்தால் அது பற்றி கலந்து பேசுவதற்கு வாய்ப்புக்கள் உள்ள நிலையில், இதனை நீடிப்பதற்கு இடமளிப்பதன் மூலம் நாடு எதிர்பார்க்கும் நல்லிணக்கத்தை கட்டி எழுப்ப முடியாது போகலாம்.

இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பாரிய பொறுப்புள்ளது. ஐ.தே.க. தலைவர்களும் அமைதிகாக்காது இந்த விடயத்தில் தலையிட்டு தொடரும் தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிக்கலான ஒரு விடயமாக இருப்பதனால் சிங்களத் தலைவர்களது தலையீடு இன்றுள்ள நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கு நிச்சயமாக உதவும்.



லண்டனிலிருந்து
இர்பான் இக்பால்

## முஸ்லிம்களிடையே தாக்கம் செலுத்திய சித்திலெவ்வையின் கல்விப்பணிகள்

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் அடக்குமுறைகளால் முற்றாகத் துவண்டு போயிருந்த முஸ்லிம் சமூகத்தை ஆங்கிலேயர் ஆட்சியில் மீளக் கட்டியெழுப்புவதில் 19ஆம் நூற்றாண்டில் பல முக்கியஸ்தர்களின் பங்களிப்பு இருந்தது.

இந்த சமூகத்தின் இருப்பையும் தனித்துவத்தையும் பேணுவதில் ஒவ்வொருவரும் தம்மாலான வழிகளில் போராடினார்கள். இப்பின்னணியில் முஸ்லிம் சமூகத்தின் கல்வி முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்து அளப்பெரும் சேவையாற்றி இன்று மறக்கப்பட்டவர்களில் இன்னொருவர் பேரறிஞர் எம்.சி. சித்திலெப்பை.

சித்திலெப்பை எனும் பெயரில் அறியப்படும் இவரின் முழுப்பெயர் முஹம்மத் காசிம் சித்தி லெப்பையாகும். அவரது தந்தை எம்.எல். சித்தி லெப்பையென அறியப்பட்டிருந்தார்.

முன் சென்ற உரைகளில் நாம் பார்த்தது போன்று மலைநாட்டுப் பக்கம் குடியேறிய அரேபியர்களின் வம்சாவழியோடு பேரறிஞர் சித்திலெப்பையின் குடும்பம் தொடர்பு கொண்டது. அத்துடன் அவரது மூத்த சகோதரன் ஒரு ஆலிமாகவும் இருந்துள்ளதுடன் அவரிடமே சித்திலெப்பை அல்-குர்ஆனைக் கற்றுக்கொண்டிருந்தார்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலமான கல்வியைத் தொடர்ந்த அவர் 1862ஆம் ஆண்டு மாவட்ட நீதிமன்றில் இணைந்து பின் உச்ச நீதி மன்றிலும் பணியாற்றியதுடன் இமாம் கஸ்ஸாலியின் ஆய்வுகள் பால் அதீத ஆர்வமும் காட்டியிருந்தார்.

மார்க்கக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தவராக சமூகத்தின் கல்வி வளர்ச்சியின் பால் கவனத்தைத் திருப்பிய அவர், அன்றைய காலத்தில் முஸ்லிம் சமூகம் மீது நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த வரைமுறைகள் குறித்து பகிரங்கமாகப் பேசலானார்.

அவரது போராட்டத்தின் ஆரம்பம் சமூக மத்தியிலாகவே அமைந்தது. சமூகத்தின் கல்வி வளர்ச்சி தொடர்பில் உலமாக்கள் போதிய அக்கறை காட்டவில்லை என்பதோடு அதற்குத் தடையாகவும் இருப்பதாக அவர் கருதியதன் விளைவாக இது பற்றிப் பேசலானார். அத்துடன் நிறுத்திவிடாது வாப்பாச்சி மரிக்காருடன் இணைந்து கொழும்பு முஸ்லிம் கல்விக்கான அமைப்பு என ஒரு அமைப்பை உருவாக்கி சமூகத்தின் கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தினார்.

கொழும்பு நகருக்கு அழகு சேர்த்த கட்டிடங்களை நிறுவிய பெருமை கொண்ட வாப்பாச்சி மரிக்கார் கட்டிட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்ததோடு சித்திலெப்பை மற்றும் ஐ.எல்.எம். அப்துல் அசீஸ் போன்றோருக்கு மிக நெருக்கமானவராகவும் தேவையான ஒத்துழைப்பையும் வழங்குபவராக இருந்தார்.

கொழும்பு நூதனசாலை, தபால் நிலையம், சுங்கத் திணைக்களம், நகர மண்டபம், கோல் பேஸ் ஹோட்டல், விக்டோரியா ஆர்கேட் என இன்றும் அவர் பெயர் நிலைத்து நிற்கும் அளவுக்கு அன்றே கட்டிட நிர்மாணத்துறையில் வாப்பாச்சி மரிக்கார் கொடி கட்டிப் பறந்தார்.

இவர்களில் எவரும் தாம் உழைத்து முன்னேறியதோடு நிறுத்தி விடாமல் சமூகத்தின் பால் கவனம் செலுத்தி சமூக முன்னேற்றத்துக்கும் பங்களித்ததனாலேயே இன்றளவும் போற்றக் கூடிய மனிதர்களாகத் திகழ்கிறார்கள்.

சித்திலெப்பையின் கல்வி நிறுவனப் பணிகளைத் தொடர்ந்து செல்வதானால் அவர் கொழும்புக்கு இடம்பெயர வேண்டிய ஒரு தேவையும் அக்கால கட்டத்தில் உருவானது. இந்நிலையில் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கல்வி மற்றும் சமூக விடயங்கள் தொடர்பில் விழிப்புணர்வை உருவாக்க முஸ்லிம் நேசன் எனும் பத்திரிகையொன்றையும் Torch of Wisdom எனும் ஆங்கில இதழையும் ஆரம்பித்தார்.

மார்க்கக் கல்வியை வலியுறுத்துவதோடு அரபு மொழியைக் கற்பதற்கும் சமூக மத்தியில் பிரசாரம் செய்யலானார். அன்னாரின் இலக்கியப் படைப்புகளுள் அசன்பே சரித்திரப் புதினம் ஒரு மைல் கல்லாகும்.

ஒரு காலம் வரை தமிழ் மொழியில் எழுதப்பட்ட முதல் புதினமாகக் கருதப்பட்டு வந்த அசன்பே சரித்திரம் பின்னாளில் தமிழில் எழுதப்பட்ட இரண்டாவது புதினமாக அங்கீகரிக்கப்பட்டது. அதனடிப்படையிலும் இலங்கையில் முதலாவது தமிழ்ப் புதினப் படைப்பு இதுவாகவே அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

பரந்துபட்ட விடயங்களில் கவனம் செலுத்திய சித்திலெப்பை அக்காலத்தில் சமூகத்தில் நிலவிய பிற்போக்கு சிந்தனைகளை மாற்றியமைக்கத் தம் எழுத்தாற்றலைப் பயன்படுத்தி பல்வேறு படைப்புகளை உருவாக்கியிருந்தார்.

இதன் போது ஒரு கட்டத்திலேயே இலங்கை சோனக சமூகத்தின் இருப்பை நிராகரித்த பொன் இராமநாதனுக்கு எதிராகப் போராடிய ஐ.எல்.எம் அப்துல் அசீஸுக்கு ஆதரவாக முஸ்லிம் நேசனில் பகிரங்க விவாத அழைப்பும் விடுக்கலானார்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் வரலாறு குறித்தும் சித்திலெப்பை ஆர்வம் காட்டியிருந்தார். பெரும்பாலான அவரது படைப்புகள் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டிருந்தன.

அத்துடன் கல்வி முன்னேற்றம் குறித்தும் பிற்போக்கு சிந்தனைகள் குறித்தும் அவர் முன் வைத்த மாற்று சிந்தனைகள் சமூக மட்டத்தில் எதிர்ப்பலைகளையும் கூடவே உருவாக்கியிருந்தது.

பல சந்தர்ப்பங்களில் உலமாக்கள் அவரது சிந்தனை வடிவங்களோடு முரண்பட்டுக்கொண்டதாக முஹம்மத் சமீர் பின் ஹாஜி இஸ்மாயில் எபெண்டி தனது குறிப்பில் தெரிவித்திருக்கிறார்

அதேவேளை தனது இறுதிப் படைப்பான அஸ்ராருல் அஸ்லத்தில் இது குறித்து கருத்துரைத்த பேரறிஞர் சித்திலெப்பை, உலமாக்கள் என்னை எதிர்க்கிறார்கள், ஆனால் நான் அறிவுடையோரை (இல்ம்) நம்புகிறேன், அவர்களுக்கு என் பணியின் பெறுமதி புரியும் என (அஸ்ராருல் அஸ்லம், பக்கம் 193) தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு மார்க்க விவகாரங்களில் பல முரண்பாடுகளை அவர் சந்தித்திருந்த போதிலும் அவரது நோக்கம் என்னவோ முஸ்லிம சமூகத்தின் கல்வி வளர்ச்சி பற்றியதாகவும் சமூக அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டதாகவுமே அமைந்திருந்தது.

இன்றளவும் இம்மனிதரின் பெயரில் (சித்திலெப்பை ஆய்வு மன்றம்) எம் சமூகத்திற்குப் பயன்தரும் பணிகள் சிறிய அளவிலாவது இடம்பெறுகிறது. பெருவாரி மக்கள் மறந்து போனார்கள் என்றால் கூட மிகையில்லை.

அதேநேரம், முஸ்லிம் சமூகத்தின் கல்வி அபிவிருத்தியின் பால் கவனம் செலுத்தியதில் சித்திலெப்பை போன்றே வாப்பாச்சி மரிக்கார் மற்றும் ஐ.எல்.எம். அப்துல் அசீசுக்கும் உண்டு.

பின்னாளில் முஸ்லிம்களின் கல்வித்துறைச் சொத்தாகக் கணிக்கப்பட்ட அல்மத்ரசதுல் சாஹிரா (கொழும்பு சாஹிரா கல்லூரி) இம்மனிதர்களின் காலத்திலேயே தோற்றம் பெற்றது.

இக்கால கட்டத்தில் எகிப்திலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு இலங்கை முஸ்லிம் சமூகத்தோடு வந்து கலந்து கொண்டார் அரபி பாஷா. (10-01-1883)

இவரது பெயர் ஓராபி பாஷா, உராபி பாஷா போன்ற உச்சரிப்புகளிலும் அறியப்படுகிறது.

ஒரு புரட்சி வீரனுக்குரிய மரியாதையுடன் இலங்கை சோனக சமூகம் அவரை வரவேற்றுக்கொண்டதோடு மாத்திரமில்லாமல் அவருக்குத் ஒத்தாசையாக இருந்து வசதி வாய்ப்புகளையும் செய்து கொடுத்திருந்தது.

இலங்கைக்கு அவர் நாடு கடத்தப்பட்டிருந்த கால கட்டத்தில் இலங்கையிலிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்ற ஒரு குழு பயணிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. பின்நாளில் ஹரினீ இஸ்மாயில் எபெண்டி என அறியப்பட்ட இஸ்மாயில் லெப்பை மரிக்கார் ஆலிம் என்பவரது தலைமையிலேயே இக்குழு பயணிக்கத் தயாராகியது.

இவர்கள் ஊடாகவே ஓராபி பாஷாவின் மேன்முறையீடும் எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்டதோடு உறவினர்களுக்கான கடிதங்களும் மிகக் கவனமாக தலையணை உறையொன்றுக்குள் வைத்துப் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

உள்நாட்டு முஸ்லிம் சமூகத்துடன் ஒன்றாக கலந்து கொண்ட ஓராபி பாஷா, வாப்பாச்சி மரிக்காரின் கல்வித் திட்டங்களுக்கும் தன்னாலான ஒத்துழைப்பை வழங்கலானார். மரியாதை நிமித்தம் வாப்பாச்சி மரிக்காரை, அல்-வாப்பாச்சி என்று ஓராபி பாஷா அழைத்ததாக குறிப்புகள் உள்ளன.

இக்கால கட்டத்தில் அவரது எண்ணங்களை முஸ்லிம் சமூகத்திடம் எடுத்துச் சொல்லும் பாரிய மொழிபெயர்ப்புப் பணியினை ஹாஜி இஸ்மாயில் எபெண்டி முன்னெடுத்திருந்தார். அரபு மொழியில் நல்ல புலமை உள்ளவராக இருந்ததனால் ஹாஜி இஸ்மாயிலின் பங்கு இக்காலத்தில் மிகவும் முக்கியமானதாக அமைந்திருந்தது.

அக்கால கட்டத்தில் வாழ்ந்தோர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் திரட்டி ஆவணப்படுத்துவதில் அவரது புதல்வர் சமீர் முக்கிய பங்களித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

ஏனெனில், முஸ்லிம் சமூகத்தில் எப்போதுமே வரலாறு குறித்த அசமந்தப் போக்கு நிலவி காணப்பட்டு வரும் நிலையில் அவர் போன்றோரின் பங்களிப்பினால் அக்கால கட்டத்தின் சமூக விபரங்கள் ஆவணப்படுத்தப்படக்கூடியதாக இருந்தது.

1901ஆம் ஆண்டு பொது மன்னிப்பைப் பெற்று ஓராபி பாஷா நாடு திரும்பும் நிலை ஏற்பட்ட போது சமூக ஆர்வலர்கள் மத்தியில் அது தாக்கத்தை உருவாக்கியிருந்தது. எனினும்,

அல்மத்ரசதுல் சாஹிராவின் முக்கிய நிகழ்வுகள் சிலவற்றில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்ட ஓராபி பாஷா அக்கால கட்டத்தில் கல்வித்துறையில் நாட்டமுள்ளவர்களினாலும் நன்கு அறியப்பட்டிருந்தார்.

இவ்வாறு இலங்கை முஸ்லிம் சமூகத்தில் ஒருவராகவே தன்னை மாற்றிக் கொண்டிருந்த ஓராபி பாஷா 1901ம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் திகதி எகிப்து திரும்பினார். இதன் போது தற்போதைய கொழும்பு ஹமீதியா கல்லூரி வளாகத்தில் அவருக்கு உணர்வுபூர்வமான பிரியாவிடை நிகழ்வொன்றையும் முஸ்லிம்கள் நடாத்தியிருந்தனர்.

எனினும், இலங்கைக்கும் எகிப்துக்குமான தொடர்புகள் அதைவிடவும் அறுநூறு ஆண்டுகள் பழமையானதாகும்.

வரலாற்று ரீதியாக, இத்தொடர்பினை ஆதாரபூர்வமாக 1283ஆம் ஆண்டு காணலாம்.

ஜே.ஏ. வில் பெரேரா எனும் வரலாற்றாசிரியர் இலங்கை இளவரசன் அல்வாண்டின் ஏப்ரல் மாதம் 14ஆம் திகதியளவில் எகிப்திய சுல்தானுடன் கை கோர்ப்பதற்கான தன் எண்ணப்பாட்டை வெளிப்படுத்தி பரிசுப் பொருட்களுடன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். . [Maqrizi Ed. Quatremore II Part II] வாரல்யமாக, குறித்த இளவரசின் பெயர் அபு நக்பா லெப்பை அல்லது அபு நப்கா லெபாதல் எனும் உச்சரிப்பைக் கொண்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது இலங்கையின் வரலாற்றோடு ஒப்பிடுகையில் புவனேகபாகுவைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

இக்கால கட்டத்தில் சைலான், செரண்டிப் போன்ற பெயர்களினால் இலங்கை அரபுலகிலும் அறியப்பட்ட ஒரு நாடாக இருந்தது. அது மாத்திரமன்றி, புவனேகபாகுவின் குடும்பம் இலங்கை முஸ்லிம்களுடன் உறவைக் கொண்ட ஒரு குடும்பமாகும்.

இது பற்றி ஆராய 13ஆம் நூற்றாண்டிலிருந்து மீண்டும் நாம் பின்நோக்கிப் பயணிக்க வேண்டும்.

குருணாகல் இராச்சியத்தில் ஆட்சி புரிந்த வத்ஹிமி ராஜா எனும் மன்னன் ஒருவன் பற்றி நம்மில் சிலர் அறிந்தும், பலர் அறியாமலும் இருக்கிறோம். எனினும், அவர் தந்தை முதலாம் புவனேகபாகு பற்றி இலங்கை வரலாற்றுப் புத்தகங்களும், பாடப்புத்தகங்களும் ஆகக்குறைந்த அளவுக்காவது பிரஸ்தாபிப்பதால் அவரது பெயரையாவது நாம் ஓரளவுக்கு அறிந்திருக்கிறோம்.

முதலாம் புவனேகபாகுவிற்கும் அவர் படைத்தளபதியொருவருடைய மகளுக்குமான மண உறவில் பிறந்தவரே வத்ஹிமி ராஜா. கலேபண்டார எனும் பெயரையும் கொண்டு அறியப்படும் இவர் குறுகிய காலம் ஆட்சிப்பீடமேறிப் பின் சூழ்ச்சியால் கொலையான முஸ்லிம் மன்னராவார்.

இது தொடர்பில் சற்று கவனம் செலுத்துவோம்.

தொடரும்...



# XI யார் இந்த இலங்கை முஸ்லிம்கள்?

நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

என்.எம்.அமீன்

# பாலையை பயன்படுத்தி வருவாயீட்டும் ஜோர்தான்





படங்கள் - கின்னியா முஜிப் வதுத்

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் 12 வயது சிறுவராக இருக்கும் போது அபூதாலிப் அவர்களால் வியாபாரத்திற்காக ஷாம் தேசம் செல்லும் போது போகும் வழியில் ஜோர்தானின் அவருக்கு நிழல் வழங்கிய மரம் பற்றி எனது முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

றஸூலுல்லாஹ்விற்கு நிழல் கொடுத்த அந்த மரம்

அபூதாலிப் அவர்களின் தலைமையில் சிறிய வணிகக் குழு ஒன்று ஹிஜாஸில் இருந்து (சவூதியின் மேற்குப் பகுதி ) சிரியாவின் தலை நகரம் டமஸ்கசை நோக்கி ஜோர்தானின் மேற்குப் பகுதியினூடாக அல் ஷஃபாவிய்யா என்ற இடத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தது.

எரிக்கும் வெயிலில் அந்தக் குழு வந்து கொண்டிருக்கையில் அவர்களின் தலைக்கு மேலாக இரண்டு மேகங்கள் தொடர்ந்து குடை பிடித்து வருவதையும், இளைப்பாற ஒரு மரத்தடியில் தரித்த பின்னரும் அம்மேகங்கள் விலகாமல் நின்று நிழல் வழங்கிக் கொண்டிருப்பதை கூம் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் தன் வீட்டு வாசலின் நின்று கண்ணுறுகின்றார்.

பாதிரியார் பழுத்தவர். இறுதித் தூதரின் வருகை பற்றிய இன்ஜீலின் செய்தியை முழுமையாக நம்பியவர். இந்தக் குழுவில் அந்த இறுதித் தீர்க்க தரிசியும் இருக்க வேண்டும் என்ற விசுவாசிப்புடன் அவர்கள் அனைவரையும் தன் வீட்டுக்கு விருந்திற்கு அழைக்கிறார்.

வீட்டுக்குள் நுழையும் தருவாயில் விருந்தாளிகள் ஒவ்வொருவரினதும் முகத்தையும், யாரோ ஒருவரின் வருகையை விசேடமாக எதிர் பார்த்த வராக கூர்ந்து நோக்கி வந்தார். இறுதி விருந்தினரும் வீட்டுக்குள் புகுந்தாகி விட்டது ஆனால் பாதிரியாரின் எண்ணத்தில் நிறைந்திருந்தவர் வந்திருக்கவில்லை.

சிறிது ஏமாற்றம் அடைந்த பாதியார் நீங்கள் இத்தனை பேர்தானா? என அபூதாலிப் அவர்களிடம் வினவ, அவரோ. இல்லை, முகம்மது எனும் ஒன்பது வயது சிறுவர் ஒருவர் அதோ அந்த மரத்தடியில் இளைப்பாறுகிறார் எனக்கூறவே, பாதிரியாரும், அவரையும் அழைத்து வாருங்கள் எனக் கேட்க அப்படியே செய்யப்பட்டு அவர் தன் வீட்டினுள் நுழையும் வரையும் காத்திருந்த பாதிரியார் அச்சிறுவரும் வீட்டினுள் புகுந்தவுடன் அவரது முதுகுப் பக்க சட்டையை விலக்கி அப்பகுதியில் இருந்த நபித்துவத்தின் முத்திரையை அடையாளம் கண்டு அதில் முத்தமிட்டு, அந்த ஞானம் நிறைந்த பாதிரியார் அச்சிறுவர் நம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம் அவர்களைவரவேற்கின்றார்.

றஸூலுல்லாஹ் தனது ஒன்பது வயதில் இளைப்பாறிய அந்த மரம் பாலை வனத்தில் தனி மரமாக இன்னும் பசுமையாக வாழ்ந்து நிழல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

அபூதாலிப் சிரியாவுக்கு வர்த்தகத்துக்காகச் சென்ற போது, பன்னிரெண்டு வயதை அடைந்திருந்த முஹம்மது நபி (ஸல்) அவர்களும் உடன் சென்றார்கள். சிரியாவின் தென்பகுதியை அடைந்த போது புஸ்ரா எனும் இடத்தில் வாழ்ந்த பஹீரா என்னும் மதகுரு, கிறிஸ்தவ மத நூல்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள, எதிர் காலத்தில் தோன்றவுள்ள இறுதி நபிக்குரிய அடையாளங்கள் சிறுவர் முஹம்மதிடம் இருப்பதை அவதானித்தார். அச் சிறுவருக்கு மேகம் நிழல் கொடுத்ததையும் மரக்கிளைகள் வளைந்து கொடுத்ததையும் அவர் அவதானித்தார். இதனால் அம்மதகுரு இளைஞர் முஹம்மதை அழைத்து, கௌரவித்து, விருந்தளித்து உபசரித்தார். விருந்து வைபவத்தின் போது நபுவத்தின் அடையாளம் முதுகுப் புறத்தில் இருப்பதை அவதானித்தார் என்றும் யூதர்களின் அபாயம் இருப்பதால் சிறுவர் முஹம்மதை மக்காவுக்கு அழைத்துச் செல்லுமாறு அபூதாலிபுக்கு ஆலோசனை வழங்கினார் என்றும் சீறத் இப்னு ஹிஸாம், தாரீக் அத்தபரி, தபகாத் இப்னு ஸஅத் போன்ற ஆரம்பகால வரலாற்று நூல்கள் மூலம் அறிய முடிகிறது.

ஜோர்தானின் தலை நகர் அம்மானின் இருந்து சுமார் நூற்றி அறுபது கிலோ மீற்றர் தூரத்தில் அல் ஷஃபாவிய்யா என்ற இடத்தில் இருக்கும் இம்மரத்தை பார்வையிடச் சென்று அதில் நிழலாடும் அரிய சந்தர்ப்பமும் எங்களுக்குக் கிடைத்தது.

எமது விஜயத்தின் இறுதி நாளுக்கு முன்னைய தினம் இந்த மரத்தைப் பார்ப்பதற்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். அம்மானில் ஏழு நட்சத்திர ஹோட்டலான ரொடான்டோவில் மூன்று நாட்களாகத் தங்கியிருந்து நாம் இப்பயணத்தை மேற்கொண்டோம். அம்மானிலிருந்து சுமார் ஒன்றரை மணி நேரப் பயணம் இந்த இடத்தைப் பார்த்து விட்டு ஜூம்ஆவுக்கு மீண்டும் ஜோர்தானின் மிகப்பெரிய பள்ளிவாசலுக்கு வருவதற்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாம் அங்கு செல்லும் போது முன்னைய நாள் பெய்த கடும்மழை காரணமாக அந்த மரமுள்ள வீதியில் நீர் நிரம்பிக் காணப்பட்டது. எமது வாகனத்திற்கு அந்த இடத்திற்கு செல்ல முடியவில்லை. சுமார் இரு மைல் தூரம் நீரில் நடந்து செல்ல வேண்டும். நீரும் கடும் குளிராக இருந்தது. நடந்து சென்றால் ஜூம்ஆவை இழந்துவிடுவோம். ஜூம்ஆவைத் தொழுவது கட்டாயம் என்பதனால் அந்த மரத்தடிக்குச் சென்று நிழலாடும் வாய்ப்பு இல்லாமல் போனது. 1500 வருடங்களுக்கு முன்னரான இந்த மரம் இன்னும் பசுமையாக காணப்படுகின்றது.

நான் இதற்கு முன், ஜோர்தானில் என்னைக் வனமும் இல்லை காவ்வாயும் இல்லை. ஆனால் ஆனால் கஸ்கவர் சுற்றுலா மையங்களை வைத்து அந்நாட்டுக்கு வருமான வழியை இறைவன் அமைத்துள்ளான் என்று குறிப்பிட்டேன்.

எங்களுடன் இந்த விஜயத்தில் இணைந்து கொண்ட ஊடகவியலாளரும் புவியில் பட்டதாரி ஆசிரியருமான கின்னியா முஜீப் வதுத் எமது விஜயத்தில் கண்ட விடயங்களை விபரிக்கிறார்,

அழகை இரசிப்பது வயது வேறுபாடு இன்றி நடைபெறும் ஓர் உளவியல் நிகழ்வாகும். இயற்கை காட்சிகளும், பௌதிக உறுப்புக்களும் கண்களையும் மனதையும் ஈர்க்கின்றன. நாடுகள் இயற்கை அம்சங்களான காடுகளையும் காடுசார்ந்த இடங்களையும், மலைகளையும் மலைசார்ந்த நிலங்களையும், கடல்களையும் கடல் சார்ந்த வனங்களையும் வைத்து சுற்றுலா துறையை ஊக்குவித்து அந்நியச் செலாவணியை தேடுகின்றன. இதே போன்று ஜோர்தான் நாடும் இவ்வியற்கை அம்சங்களை கொண்டுள்ள போதும் ஒரு படி மேலாக பாலை வனங்களையும் பாலை வனம் சார்ந்த நில உருவங்களையும், மணல் மேடுகளையும், மலைகளையும் வைத்து சுற்றுலா துறையை ஊக்குவித்து அந்நியச் செலாவணியைக் குவிக்கின்றன.

சில நாடுகள் சுற்றுலா துறையை நாட்டின் அபிவிருத்தியின் முதுகெலும்பாக கருதி செயற்றிட்டங்களை முன்வைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

ஜோர்தான் நாட்டின் முக்கிய சுற்றுலா தளங்களில் ஒன்றான இயற்கை பௌதிக அம்சமே பாலைவன பிரதேசங்களாகும். நாம் நினைப்பது பாலை வனம் என்றால் வெப்பமும், மணலும், சுற்றாந்தரைகளும், முட்புதர்களும் என்றே! ஆனால் அது அப்படியல்ல. இதமான காற்றுக்களையும், வெப்பத்துடனான குளிர் உணர்வையும் வரலாற்றுப் பொக்கிஷங்களையும், இஸ்லாமிய பாரம்பரியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன. இதனை ஒரு மனிதன் நேரடியாகச் சென்று அனுபவிப்பதன் ஊடாக அதன் உண்மைத்தன்மைகளை கண்டு கொள்ள முடியும்.

278 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட வாடிரம் பாலைவன வெளியானது ஜோர்தான் நாட்டின் அகபா எனும் பிராந்திய ஆளுகைக்குட்பட்ட பிரதேசமாகும். வாடிரம் மலை பிரசேங்கள் வாடிரம் சம வெளியின் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ளது. வாடிரம் பல்வேறு மனித கலாசாரங்களை பிரதிபலிப்பதாக அமைவதுடன் நபேத்தியன்கள் விட்டுச் சென்ற தடயங்களாக கல்லில் செதுக்கப்பட்ட பல்வேறு கலை அம்சங்களையும் எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு பல வரலாற்று அம்சங்களை சுமந்துள்ளதால் இதனை யுனெஸ்கோ 2011 ஆம் ஆண்டு உலக மரபுரிமை பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

'ஜோர்தானில் சில நாட்கள்' பயணக் கட்டுரை வெகுசிறப்பாக அமைந்திருந்தது. அரிய பல தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. தொடர்கதையொன்றை வாசிப்பது போன்ற உணர்வையே ஏற்படுத்தியது. அடுத்த தொடர் எப்போது வரும் எனக் காத்திருக்கின்றேன். அதனால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.
றப்கா மன்சூர்
உதவி அதிபர்
முஸ்லிம் மகளிர் கல்லூரி
கொழும்பு

வாடிரம் பாலைவனத்தில் மிக உயரமான மலைத் தொடராக ஜபல் உம் அத்தாமி விளங்குகின்றது. 1840 மீற்றர்/6040 அடி உயரத்தையும் கொண்டுள்ளது. குகீகூஹ் தகவலின் படி 1854 மீற்றர் எனவும் குறிப்பிடப்படுகின்றது. இது தெற்கு வாடிரம் இலிருந்து 30 கிலோ மீற்றர் ஆகும். சரியான கால நிலை நிலவும் காலங்களில் மலை உச்சியில் இருந்து செங்கடலையும். அரேபிய நாட்டின் எல்லைகளையும் தெளிவாக பார்வையிட முடியும்.

அகபாவில் இருந்து வாடிரம் பாலைவனத்திற்கு செல்லும்வழியில். இஸ்லாமிய பாரம்பரியங்களையும், மந்தை மேய்த்தல், ஒட்டக சவாரி என்பன அரேபிய கலாசாரத்தை தொட்டுச் சென்றன. பாலைவன பட்டுமணலில் பாதங்கள் பதியும்போது பண்ணைகளில் பணிபுரிபவர்களின் வேதனைகளும் மெலிதாக உணரப்பட்டன.

காற்று, மணல் என்பன பிரதான பாத்திரங்களாகும். கல்வி பொதுத்தராதர உயர் தரபிரிவில் காற்றரிப்பு நிலவுருவங்கள் பாலைவனத்தில் உருவாகும் என கற்றதை நேரடியாக அனுபவிக்க முடிந்தது.காற்றானது.

1.அரித்தல் 2.படிதல் 3.அரைந்து தேய்தல் ஆகிய செயற்பாட்டை மேற்கொள்ளும் இதனால் பல நிலவுருவங்கள் அங்கு தோற்றம் பெறும். உதாரணமாக: காளான் வடிவ பாறை, யாடாங்கு, பீடைக்கிடைத்தினிவு, மணல் குன்று, பிறைவுரு மணற்குன்று, வாரிவிரக்கள் பள்ளம் என்பவற்றை படங்கள் மூலம் கற்றதை நேரடியாக பார்க்க கிடைத்தது பாக்கியம் என்றே கூற வேண்டும்.

மேலும் வாடிரம் பாலைவனத்தினை மையமாக வைத்து ஜீப் சபாரி, ஒட்டக சபாரி என்பன அதிக வருமானத்தை ஈட்டும் தொழிலாக காணப்படுகின்றன. 5டொலர் செலுத்தினால் 100 மீற்றர் சுற்றுவட்டம் ஒட்டக சபாரி மேற்கொள்ள முடியும். ஆகாய நீச்சல் SKYDIVE, மலை ஏறுதல், சூரிய அஸ்தமனம் பார்வையிடல் என்பனவும் பிரசித்தி பெற்ற பொழுதுபோக்கு விடயங்களாகும். குறிப்பாக நிலாக்காலங்களில் மேற்கில் சூரிய அஸ்தமனம் முடிய கிழக்கில் சந்திர உதயம் ஆரம்பிக்கும் இது உல்லாசப்பயணிகளை வெகுவாக கவரும் அம்சமாகும். இந்நேரம் இதமான தென்றல் காற்று களைப்புற்ற உடலை வருடிச்செல்லும் விதமே அலாதி தான்.

[தொடரும்...]





# வளைகுடா நெருக்கடி: மீளுமா

இன்று சர்வதேச அரங்கின் கழுகு பார்வை கட்டாரை வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றது. தீவிரவாதத்திற்கு நிதி போடுவதாகக் கூறி நட்பு நாடுகள் முறுக்கிக் கொண்டுள்ளன. இன்று கட்டாரோ நட்பு நாடுகளின் உறவு துண்டிப்பால் விழிப்பிதுங்கிபோயுள்ளது. இந்த துன்பத்தில் தோள் கொடுக்கும் தோழனாக பல நாடுகள் நட்பு கரம் நீட்டிக்கொண்டிருக்க, இன்னும் சில நாடுகளோ உள்வீட்டு விவகாரத்தை ஊதி பெருப்பித்து குளிர்காயத் தொடங்கியுள்ளன.

இத்தனை அதிர்ச்சிகளுக்கும் காரணம் கடந்த திங்களன்று(05.06.2017) விடியும் பொழுது மகிழ்ச்சிகரமான அமையவேண்டும் என்ற அனைவரதும் பிரார்த்தனையையும் பொய்யாக்கும் விதமாக அதிகாலையிலேயே தீவிரவாதத்திற்கு துணைப்போவதாகக் குற்றம்சாட்டி சவூதி, பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எகிப்து, லிபியா, மாலைதீவு மற்றும் யெமன் உள்ளிட்ட நாடுகள் கட்டாருடனான உறவை துண்டித்துக்கொண்டன. எவ்விதமான தூதரக உறவுகளும், வணிகம் மற்றும் தரை மற்றும் வான் போக்குவரத்து உறவுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று அறிவித்தன.

வளைகுடா நாடுகளின் இந்த முடிவின் பின்னர், அந்த நாடுகளுடன் கட்டாருக்கு ஏற்பட்ட பதற்றங்கள் மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளன. இந்நிலையில் கட்டாருடனான வளைகுடா நாடுகளின் பிளவு குறிப்பிட்ட அந்நாடுகளையே பாதிக்கும். இதில் எமக்கு என்ன நட்டம் ஏற்படபோகின்றது என்ற கேள்வி எழுகின்றதல்லவா? ஆம். கட்டாரில் எம் நாட்டைச் சேர்ந்த 5.6 விகிதமானோர் அங்கு தொழில்புரிந்து வருகின்றனர். அதையும் தாண்டி கட்டாரே உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் நாடாகும்.

உலகின் கிடைக்கக்கூடிய வளங்களில் எண்ணெய் மிக அரிதான ஒரு வளம் என்பதால், அதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எண்ணெய் சந்தையில் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் மேம்பாடுகள் காரணமாக, பெரும்பாலான நாடுகள் பாதிக்கப்படுகின்றன. எவ்வாறு சில நாடுகளில் பல கடற்கரைகள், மலைகள் மற்றும் ஆறுகள் உள்ளனவோ அதேபோன்று, கடவுளின் கொடையாக எண்ணெய் உற்பத்தியில் பணக்கார நாடுகளும் உள்ளன. இத்தகைய அரிய வளம் உடைய நாடுகளை அமெரிக்க போன்ற வளம் படைத்த நாடுகள் போர் தொடுத்து கைப்பற்றியும் உள்ளன என்கிறது வரலாறு.

இதில் எண்ணெய் வளத்தில் உலகின் மூன்றாவது இடத்தை பெற்றுள்ள கட்டார் 26.75 இலட்சம் மக்கள் தொகையை கொண்டுள்ளது. இந்த பாரசீக வளைகுடா நாடு, தனிநபர் வருமான அடிப்படையில் உலகின் பணக்கார நாடு என்ற இடத்தை பிடித்துள்ளது. எண்ணெய் விலை மீளுகர்வு மற்றும் அந்த நாட்டின் பிரமாண்டமான இயற்கை எரிவாயு வளங்கள் ஆகியவை இதற்கு காரணங்களாகும். வாங்கும் சக்தி அடிப்படையில், 2010இற்கான கட்டாரின் மொத்த உள்நாட்டு உற்பத்தித் தலாவருமானம் 88,000 டொலருக்கும் அதிகமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கட்டார் மத்திய கிழக்கின் மற்றும் மேற்காசியாவிலுள்ள ஓர் அமீரக நாடாகும். இது அராபியக் குடாவின் வடகிழக்குக் கரையிலுள்ள சிறிய கட்டார் குடாநாட்டைக் கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி இது ஒரு தீபகற்ப நாடாகும். இதன் தெற்கே சவூதி அரேபியா உள்ளது. மற்றைய பகுதிகள் பாரசீக வளைகுடாவை அண்டியுள்ளன. மக்கள் தொகையிற் பெரும்பான்மையினர் 99 வீதம் சுன்னி முஸ்லிம்கள் ஆவார்கள்

இது 1971 செப்டம்பர் 3ஆம் திகதி பஹ்ரைனிடமிருந்து விடுதலை பெற்றது. பஹ்ரைன் என்பது பாரசீக வளைகுடாவில் உள்ள ஒரு சிறிய மேற்கு ஆசியத் தீவு நாடு ஆகும். இது 33 தீவுகளில் பெரிய தீவாகும். சவூதி அரேபியாவுடன் மேற்குப் பகுதியில் மன்னர் பகுது பாலம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இதன் வடக்கே 200 கி.மீ தொலைவில் ஈரானும், தென் கிழக்கே கட்டாரும் உள்ளன.

பஹ்ரைன் ஒரு முடியாட்சி நாடாகும். இதன் மன்னராக ஹைமது ஹம்மாத் இப்னு ஈசா அல்-கலீபா இருக்கிறார். 19ஆம் நூற்றாண்டில் மிக சிறந்த முத்து ஆபரணங்கள் கிடைக்கும் இடமாக பஹ்ரைன் இருந்தது. இங்கு சியா பிரிவு முஸ்லிம்கள் அதிகமாக உள்ளனர். அதுமட்டுமன்றி இது முடியாட்சி நாடாகும். இதன் மன்னர் சுன்னி பிரிவை சேர்ந்தவர்.

பாரசீக வளைகுடாவில் எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் வளம் பெற்ற நாடுகளில் பஹ்ரைன் முதலாவது நாடாகும். பஹ்ரைனின் தலைநகரிலேயே நிதி நிறுவனங்கள் உள்ளன.

ஆரம்பத்தில் பஹ்ரைன்- கட்டார் ஆகிய நாடுகள் ஒன்றாக இருந்தன. நாட்டில் உள்ள ஆட்சியாளருக்கு மத்தியில் ஏற்பட்ட மோதல் கட்டார் பிறக்க காரணமாகியது. அதுவே ஹவார் என்ற தீவை உரிமைகொண்டாடியதில் இருவருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது. இறுதியில் சர்வதேச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஹவார் தீவு பஹ்ரைனுக்கு சொந்தமானது. இருநாடுகளிலும் தன் கடற்படை முகாமை அமைத்திருக்கும் அமெரிக்கா இருநாட்டு மோதலில் தன்னை பார்வையாளனாக வடிவமைத்து கொண்டது. தற்போதும் தன் இராணுவ முகாமை இந்நாட்டில் அமைத்திருக்கும் அமெரிக்கா இதனை தன் முழுக்கட்டுப்பாட்டில் ஒரு பகுதியை வைத்திருக்கிறது.

18ஆம் நூற்றாண்டிலிருந்து கட்டார் அல்-தனி குடும்பத்திடமிருந்தது வருகின்றது. இவர்கள் சவூதியின் நஜ்த் பகுதியிலிருந்து கட்டாரில் குடியேறியவர்கள். முன்னாள் சவூதி ஆட்சியாளர் ஏகத்துவ மனிதர் அப்துல் வஹ்ஹாபை பின்தொடர்ந்தவர்கள்.

தற்போது ஆட்சி செய்யும் அல் தானி பரம்பரை கட்டாரில் ஆரம்ப தொழில் வர்த்தகம் முத்து பவளம், மீன் மற்றும் மண்பாண்ட வர்த்தகத்தை செய்து வந்துள்ளனர். அதனால் இன்றும் அல் லூலூ என்றால் பெயரில் மிக பெரிய தொழில்பேட்டை உள்ளது, லூலூ என்றால் அரபியில் முத்து பவளம் என்பதையும் மற்றும் கடல் தொழில் சார்ந்தவைகளை குறிக்கின்றது.

1939இல் இங்கு பெட்ரோல் மற்றும் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னர் கட்டார் பெட்ரோலிய கழகம் உருவாக்கப்பட்டது.

தற்போது சுமார் 27 இலட்சம் பேர் வாழும் மிகச் சிறிய நாடான கட்டார், உலகிலேயே மிக அதிகளவு இயற்கை எரிவாயுவை ஏற்றுமதி செய்யும் நாடாகவுள்ளது. போர்ப்ஸ் பத்திரிகை கணிப்பின் படி, தனிநபர் வருவாய் அடிப்படையில் உலகின் பணக்கார நாடு கட்டாராகும். மத்திய கிழக்கின் அமெரிக்கா என்று அழைக்கப்படும் கட்டார், தமது தாராளமயமாக்கல் கொள்கையால் முதலீட்டாளர்களின் சொர்க்கமாகவும் திகழ்கிறது. தற்போது, அரபு நாடுகள் கூட்டமைப்பான அரபு லீக்கின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் கட்டாருக்கு, அரபு எழுச்சியில் முக்கியப் பங்குண்டு.

மன்னர் ஷெய்க் பின் கலிபா அல்-தானி பதவி விலகி, குடும்பத்தினருடன் ஆலோசித்த அவர், கடந்த 2013 ஆண்டு ஆட்சிப் பொறுப்பை தமது மகனும் பட்டத்து இளவரசருமான ஷேக் தமீம் பின் ஹமாத் அல்-தானியிடம் ஒப்படைத்தார்.

வளைகுடா நாடுகளைப் பொறுத்தவரை, மன்னர் உயிருடன் இருக்கும் போதே சுமுகமாக ஆட்சி மாற்றம் நடந்தது இதுவே முதல் முறையாகும்.

2022ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்து போட்டி அறிவிக்கப்பட்டவை வளைகுடா நாடுகளில் கட்டாரின் முதல் தடவை.

ஆனால் பெரும்பாலும் கட்டார் பொதுவாக செய்திகளில் இடம்பெறுவதில்லை. எனவே 2022 ஆம் ஆண்டு உலக கோப்பை கிண்ண போட்டியை கட்டார் நடத்துகிறது என்பதை தவிர அந்நாட்டை பற்றி உங்களுக்கு வேறென்ன தகவல்கள் தெரியும்? இதுதொடர்பான சுவாரஸ்ய தகவல்களை பார்க்குமிடத்து

## கட்டார் மக்கள் தொகை


மக்கள் தொகையில் அதிகப்படியாக ஆண்கள்: 2.5 மில்லியன் மக்கள் இருக்கும் நாட்டில் வெறும் 7 இலட்சம் பெண்கள் தான் உள்ளனர். இந்த அதிகபட்ச சமச்சீரின்மைக்கு காரணம், கட்டார் மக்கள் தொகையில் எழுந்த திடீர் எழுச்சியாகும். கட்டாரில் அதிகப்படியான குடியேறிகள், அதுவும் அதிகபட்சமாக இளம் ஆண்கள் உள்ளனர். கட்டாரில் வேலைவாய்ப்புகளில் உத்தரவாதம் இருப்பதால் சமீப வருடங்களாக மக்கள் அதிகமாக கட்டாருக்கு படையெடுத்து வருகின்றனர். இதில் உள்நாட்டினர் (கட்டார் வாசிகள்) 12.1 விதமானோரே உள்ளனர். 25 வீதமான இந்தியர்களும், 10.7 வீதமான பங்களாதேஷியரும், 5.6 வீதமான இலங்கையரும், 4.8 வீதமான பாகிஸ்தானியரும் 52.5 வீதமானோர் பிற நாடுகளையும் சேர்ந்தவர்களுமாக உள்ளனர்.

எனவே 2003 ஆம் ஆண்டில் 7 இலட்சமாக இருந்த மக்கள் தொகை 2016 ஆம் ஆண்டு 2.5 மில்லியனாக உயர்ந்துள்ளது. கட்டாரில் பெண் குடியேறிகளும் இருக்கிறார்கள். ஆனால் 2022ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் உலக கோப்பை போட்டிகளுக்கான கட்டட வேலைகளில் ஈடுபடுவதற்காக அதிக எண்ணிக்கையிலான ஆண்கள் கட்டாருக்கு வந்துள்ளனர். அவர்கள் உலகமுழுவதிலிருந்து குறிப்பாக இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து வருகிறார்கள். இஸ்லாம் மற்றும் கிறித்துவர்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் இந்துக்கள் உள்ளனர். வேலைக்கான உத்தரவாதம் மற்றும் நல்ல எதிர்காலம் இருப்பினும் வேலைக்காக வந்தவர்கள் மோசமான நிலைகளில் பணிபுரிய வற்புறுத்தப்படுவதாகவும் அதில் பாதிக்கும் அதிகமானோர் நாட்டைச் சுற்றியுள்ள தொழிலாளர் முகாம்களில் தங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## லண்டனில் பெரிய சொத்துகளின் உரிமையாளர்கள்?

கடந்த 10 வருடங்களில், லண்டனில் இடங்கள் வாங்குவதில் கட்டார் அதிக கவனம் காட்டி வருகிறது. லண்டனின் வானுயர்ந்த கட்டங்களான ஷார்ட், ஹரார்ட்ஸ், செல்சி பாரக்ஸ், ஒலிம்பிக் கிராமம் மற்றும் கேனரி வார்ஃப் ஆகிய கட்டங்கள் கட்டாருக்கு சொந்தமானவை.

கட்டார், 35 பில்லியன் டொலரிலிருந்து 40 பில்லியன் டொலர் வரையில் பிரித்தானியாவில் முதலீடு செய்துள்ளதாக நாட்டின் நிதியமைச்சர் அல் ஷரீஃப் அல் எமாடி தெரிவித்துள்ளார். மேலும் அடுத்த 3 அல்லது 5 வருடங்களில் மேலும் 5 பில்லியன் டொலர்கள் முதலீடு செய்யவுள்ளதாகவும் எமாடி தெரிவித்தார்.




## கலைகளுக்கு முக்கியத்துவம்

கட்டார் ஒரு பழமைவாத நாடாகக் கருதப்பட்டாலும் கடந்த சில வருடங்களாக பல கண்காட்சிகளுக்கு நிதி ஆதரவு வழங்கியுள்ளது. அதில் 2013ஆம் ஆண்டு மத்திய கிழக்கில் சர்ச்சைக்குரிய கலைஞரான டேமியன் ஹேர்ட்ஸின் பழைய கலைப் படைப்புகளின் முதல் கண்காட்சியை நடத்தியது. அதே சமயத்தில் கட்டார் அரசரின் சகோதரி மற்றும் கட்டார் அருங்காட்சியகத்தின் தலைவருமான ஷேக்கா-அல் -மயசா -பிண்ட் -ஹமத் பின் -காலிபா-அல் -தனி ஆர்ட் ரெவ்யூ என்ற இதழ் வெளியிட்ட சக்தி வாய்ந்த 100 கலைப் பிரமுகர்கள் பட்டியலில் முதலிடம் பெற்றார்.

மேலும் இந்த கலைப் படைப்புகளை வாங்கி சேகரிக்க, அவர் 1 பில்லியன் டொலர் செலவிடுகிறார் என்றும் கிசுகிசுக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு, டோஹாவில் இஸ்லாமிய கலைகளின் அருங்காட்சியகத்தை பெருமையுடன் திறந்து வைத்தது கட்டார். மூன்று கண்டங்கள் மற்றும் 1400 வருடங்கள் பழமையான, உலகிலுள்ள முக்கிய இஸ்லாமிய கலை பொருட்கள் அதில் இடம் பெற்றுள்ளன.

## 23 அடி வெண்கல கரடி பொம்மை (டெட்டி பேர்)

கட்டாருக்கு கலையில் அதிக நாட்டமிருந்த போதிலும், அருங்காட்சியகத்தில் மட்டுமின்றி அது பொது இடங்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. டோஹாவிலுள்ள ஹமத் சர்வதேச விமான நிலையத்தில், சென்ற எவரும் அங்கு விமான நிலையத்தின் நடுவில் வைக்கப்பட்டிருக்கும் 23 அடி மஞ்சள் நிற டெட்டி பேரை (கரடி பொம்மை) கவனிக்காமல் இருந்திருக்க முடியாது.

20 டொன் எடையுள்ள வெண்கலத்தாலான அந்த பொம்மை ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த உர்ஸ் பிஷர் என்ற கலைஞரால் உருவாக்கப்பட்டது. ஹமத் விமான நிலையத்தின் அதிகாரபூர்வ குறிப்புப்படி, அந்த கரடி பொம்மை விளையாட்டுத்தனத்தை கட்டுக் காட்டுவதாகவும், அதை கண்டால் மனிதர்களுக்கு தங்களின் குழந்தைப்பருவம் அல்லது தங்களின் இல்லத்திலுள்ள சிறப்பான பொருட்களின் நினைவில் வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விளையாட்டு பொம்மை, 2011 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் ஏலம் ஒன்றில் 6.8 மில்லியன் டொலர்கள் மதிப்பில் வாங்கப்பட்டது. பணக்காரர்கள் வாழும் நாடு? ஒரு சிறிய நாடு எவ்வாறு இவ்வளவு செலவுகளை செய்ய முடியும்? அதற்கு காரணம் அதன் எண்ணெய், எரிவாயு வளம் மற்றும் சில நல்ல முதலீடுகள் ஆகும். உலகிலேயே அதிகமான உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதத்தை கொண்ட நாடு கட்டாராகும். 2016 ஆம் ஆண்டு கத்தாரின் உள்நாட்டு உற்பத்தி விகிதம், 1,29,700 டொலர்களாக இருந்தது என சி.ஐ.ஏவின் உலக நாடுகளின் குறிப்புகள் அடங்கிய தகவல் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையும் தாண்டி அமெரிக்காவின் மிகப்பெரிய இராணுவ தளம் கட்டாரிலுள்ள அல் உத்தெய்த் நகரில் அமைந்துள்ளது. இங்கு சுமார் 10 ஆயிரம் அமெரிக்க படை வீரர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உறவு முறிவு

இந்நிலையிலேயே தங்களுடைய பிராந்தியத்தை ஸ்திரமற்றதாக ஆக்குவதாக கட்டார் மீது குற்றஞ்சாட்டி, சவூதி, எகிப்து,

**எல்லைப் பாதுகாப்பு**

கட்டார் அதன் எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது. 24 மணிநேரமும் கட்டாரின் கடல், வான் தரை எல்லைகள் 360 பாகை அனுகு முறையில் கண்காணிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சர் நேற்று தெரிவித்துள்ளார்.

**பிரான்ஸ் ஜனாதிபதியின் அழைப்பு**

பிரான்ஸின் ஜனாதிபதி மாக்ரோன் இமானுவேல் 24 மணிநேரங்களில் இரண்டு தடவைகள் கட்டார் மன்னர் ஷெய்க் தமீம் பின் ஹம்மாத் அல் தானியைத் தொடர்புகொண்டு சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணும் படி வலியுறுத்தியுள்ளார். பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து உறுதிப்படுத்த பிரான்ஸ் மத்தியஸ்தம் வகிக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் ஜனாதிபதி சவூதி மன்னன் மற்றும் ஈரான் ஜனாதிபதி ஆகியோருடனும் உரையாடியுள்ளார்.

**தபால் சேவைகள் தடைப்பட்டது**

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து கட்டாருக்கான தபால் சேவைகளையும் அந்நாடு மறு அறிவித்தல் வரும்வரை நேற்றுடன் நிறுத்திவிட்டது. இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள தபால்கள் மாத்திரம் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

**பங்கு சந்தை மீட்சி**

கட்டாரின் பங்குச் சந்தைகள் நேற்று 9.7 வளர்ச்சியைக் காட்டியிருந்தது. வளைகுடா நாடுகளின் தடையைத் தொடர்ந்து திங்கள் செவ்வாய் தினங்களில் கட்டாரின் பங்குகள் சரிவை எதிர்கொண்டிருந்தது. கட்டார் தடையைத் தொடர்ந்து கட்டாரின் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியைக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**பாகிஸ்தான் உறவு தொடரும்**

பாகிஸ்தான் கட்டாரிலிருந்து தொடர்ந்தும் இயற்கை வாயுக்களை பெற இருப்பதாக நேற்று தெரிவித்தது. காட்டார் பாகிஸ்தான் இடையே 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இவ்வொப்பந்தம் கடந்த ஆண்டே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**பஹ்ரைனின் நிபந்தனை**

கட்டார் பஹ்ரைனுடனான உறவை மீட்டிக்கொள்வதற்கு ஈரானுடனான உறவுகளையும் தீவிரவாதத்தை ஆதரிப்பதையும் கைவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளது. கட்டாரின் ஊடக பரப்புரைகளும் நிறுத்தப்பட வேண்டும் என்று பஹ்ரைன் தெரிவித்துள்ளது.

ஆதரித்தால் அபராதம்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் பிரஜைகள் கட்டாரை ஆதரித்து அல்லது கட்டாருக்கு அனுதாபம் தெரிவித்து கருத்துக்களை வெளியிட்டால் 15 வருட சிறைத்தண்டனை மற்றும் 136,000 அமெரிக்க டொலர்களை வரை அபராதம் விதிப்பதாக அறிவித்துள்ளது.

# கட்டார்?

பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், யெமன், லிபியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளும் தங்களுடைய இராஜ்ஜிய தொடர்புகளை துண்டித்துக்கொண்டன. அதுமட்டுமன்றி சிறிய தீபகற்பமான கட்டாரோடு நிலம், கடல் மற்றும் வான்வழிகளில் செயற்படும் தொடர்புகளையும் துண்டித்து கொண்டன.

இதனை நேர்மையற்ற முடிவு என்று குறிப்பிட்டிருக்கும் கட்டார், இதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்கிறது.

அமெரிக்காவுக்கு நெருங்கிய நட்பு நாடுகளாகவும் இருக்கும் சக்தி மிக்க வளைகுடா நாடுகளுக்கு இடையில், முக்கியமான பிளவாக இந்த எதிர்பாராத திடீர் நடவடிக்கை பார்க்கப்படுகிறது.

வளைகுடா நாடுகளுக்கும், அவற்றின் அருகிலிருக்கும் ஈரானுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்திருக்கும் பின்னணியில் இந்நடவடிக்கையுள்ளது. ஈரானின் ஆதரவோடு செயற்படும் ஆயுதப்படைகளோடு கத்தார் ஒத்துழைப்பதாக சௌதியின் அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது.

## நடந்தது என்ன?

திங்கள்கிழமை அதிகாலையில் கட்டாருடனுள்ள இராஜ்ஜிய உறவுகளை முறித்துக் கொள்ள பஹ்ரைன் எடுத்த நடவடிக்கைக்கு பின்னர், சவூதி அரேபியவும் இராஜ்ஜிய உறவை முறித்துக்கொண்டது. இதனை தொடர்ந்து அவற்றின் நட்பு நாடுகளும் இதே நடவடிக்கையை எடுத்தன.

'தீவிரவாதம், கடும்போக்குவாதம் போன்ற ஆபத்துகளிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்ளவே'' இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சவூதி அரச சார்பில் தெரிவிக்கப்பட்டது. தங்களுடைய எல்லைகளில் வாழும் கட்டார் மக்கள் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியேற வேண்டும் என்று மூன்று வளைகுடா நாடுகள் காலக்கெடு வழங்கியுள்ளன.

கட்டார் இராஜ்ஜிய அதிகாரிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸை விட்டு வெளியேற 48 மணி நேரம் வழங்கப்பட்டுள்ளது. தீவிரவாதம், கடும்போக்குவாதம் மற்றும் பிளவுகளை ஏற்படுத்தும் அமைப்புகளை ஆதரிப்பது, நிதி ஆதரவளிப்பது மற்றும் அவற்றின் கொள்கைகளை தழுவி கொள்வதாக அபுதாபி கட்டார் மீது குற்றஞ்சாட்டியது.

## மூடப்பட்ட தரை/வான்வழிகள்

அதுமட்டுமன்றி செவ்வாயன்று அதிகாலை தொடக்கம் கட்டார் தலைநகர் தோஹாவுக்கு இருக்கின்ற விமானப் பயண சேவையை இடைநிறுத்துவதாக, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் விமான நிறுவனங்களான எத்திஹாட் ஏர்வேஸ், எமிரேட்ஸ் மற்றும் ப்ளைதுபாய் விமான நிறுவனங்கள் அறிவித்திருக்கின்றன.

## வான் தடை

கட்டாருக்கு விதிக்கப்பட்டுள்ள வான் தடையால் நேரம் சில மணித்தியாலங்கள் வீண்விரயமாகும். போக்குவரத்து செலவு குறித்தோ, எரிபொருள் விரயம் குறித்தோ கட்டார் அலட்டிக்கொள்ளப்போவதில்லை.

ஈரானும், ஓமானும் தனது வான்பரப்பை பயன்படுத்த அனுமதிக்குமிடத்து, சவூதியிலும் தடைவிதித்த ஏனைய அரபு நாடுகளினதும் நோக்கம் பிழைத்துப்போகலாம். மேலும் அவர்களது சொந்த விமான சேவையின் விமானங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் மூலம் போக்குவரத்துப் பிரச்சினையை சீர்செய்ய திட்டமிட்டுள்ளனர். சீனா, ரஷ்யா, துருக்கி, ஈரான் போன்ற நாடுகள் மூலம் ஏனைய இறக்குமதி தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு கட்டார் பொருளாதார ரீதியாக பலம்பெற்றுள்ளது.

## பின்னணி

கட்டாரோடு ஏற்பட்டுள்ள இந்த இராஜ்ஜிய சர்ச்சையில் திடீரென இந்த உறவை முறிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், இம்முடிவு எதிர்பாராத ஒன்றல்ல. பல ஆண்டுகளாகவே பதற்றம் நிலவி, குறிப்பாக சமீபத்திய வாரங்களில் அது அதிகரித்த பின்னணியில் இது வருகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இதே நான்கு நாடுகளும் அல் ஜசீரா உட்பட கட்டார் செய்தி இணையப் பக்கங்களை தடை செய்தன.

கட்டார் அரசர் தமீம் பின் ஹமாட் அல்-தானி, சவூதி விமர்சிப்பதாகக் கூறப்பட்ட கருத்துகள் கட்டார் அரச ஊடகத்தில் வெளியானது.

இந்த தகவலை ''வெட்கக்கேடான இணைய குற்றம்'' என்று கூறி, இந்த கருத்துக்கள் போலியானவை என்று கட்டார் அரசு நிராகரித்தது.

2014 ஆம் ஆண்டு, தங்களுடைய விவகாரங்களில் கட்டார் தலையிட்டதாகக் கூறி, அதற்கு எதிராக கட்டாரிலிருந்த தங்களின் தூதர்களை சவூதி, பஹ்ரைன் மற்றும் ஐக்கிய அரசு எமிரேட்ஸ் பல மாதங்கள் திரும்ப அழைத்து கொண்டன.

## முக்கிய இரு அம்சங்கள்

பரந்த அளவில், திங்கட்கிழமை எடுக்கப்பட்ட இந்த முடிவில், தீவிரவாத குழுக்களுடன் கட்டாருக்கு இருக்கும் உறவுகள் மற்றும் சவூதின் போட்டியாளரான ஈரானின் பங்கு என இரண்டு முக்கிய அம்சங்களை தெரிவிக்கலாம்.

தீவிரவாதிகளுக்கு எதிராக போரிடுவதில் அமெரிக்காவோடு கட்டார் இணைந்துள்ள நிலையிலும், தீவிரவாதிகளுக்கு கட்டார் நிதி ஆதரவளித்தது என்று ஈராக்கின் ஷியா தலைவர்களிடமிருந்து வருகின்ற குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து கட்டார் மறுத்துள்ளது.

இருப்பினும், இங்குள்ள செல்வந்தர்கள் நன்கொடைகளை கொடுத்தனர் என்றும், சிரியாவில் செயற்பட்டுவரும் தீவிரவாத குழுக்களுக்கு பணத்தையும், ஆயுதங்களையும் கட்டார் அரசு வழங்கியிருக்கிறது என்றும் நம்பப்படுகிறது.

அதுமட்டுமன்றி அல் - கைதாவோடு தொடர்புடைய நுஸ்ரா முன்னணி என்று முன்னதாக அறியப்பட்ட ஒரு குழுவோடு தொடர்பு வைத்திருப்பதாகவும் கட்டார் குற்றஞ்சாட்டப்படுகிறது.

பயங்கரவாத அமைப்பு என்று வளைகுடா நாடுகளில் தடை செய்யப்பட்ட, இஸ்லாமியவாத முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பையும், இந்த குழுக்களையும் கட்டார் ஆதரிப்பதாகவும், அதனுடைய ஊடகங்கள் மூலம் இந்த குழுக்களின் கருத்துக்களையும், திட்டங்களையும் பரப்பி வருவதாவும் சவூதி அரச செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது. ஈரானோடு தொடர்பு வைத்துள்ளதை கத்தார் தொடர்ந்து மறுத்து வந்துள்ளது. அதுமட்டுமன்றி கட்டார், இந்த முடிவை பற்றி அல் ஜெஸீரா கருத்துக்களில் விமர்சித்துள்ளது.

## உறவுகள் தொடரும் - அர்தூகன்

உறவுகள் முறிவால் கட்டாருடனான வளைகுடாக்களின் விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தூதர்கள் திரும்ப பெறப்பட்டனர். மேலும் மசகு எண்ணெய் விலை உயரும் அபாயம் நிலவுகிறது. கட்டாரில் உணவு பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. எனவே இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளன.

இந்நிலையில், துருக்கி ஜனாதிபதி அர்தூகான், ''கட்டார் மீதான வளைகுடா நாடுகளின் தடை நல்லதல்ல என்று நாங்கள் நினைக்கிறோம். கட்டாரை தனிமைப்படுத்துவதால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படாது. எங்களது துயரமான நேரங்களில் எங்களுக்கு கட்டார் நண்பர்கள் துணையிருந்துள்ளனர். கட்டாருடனான துருக்கியின் உறவு தொடரும்'' என்றார்.

இதனையடுத்து, கட்டாருக்கு தேவையான உணவுப்பொருட்கள் மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்கான இராணுவ உதவிகள் வழங்க துருக்கி முடிவு செய்துள்ளது. எனினும், அர்தூகான் சவூதியின் நிலைப்பாடு குறித்த கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கவில்லை.

அதேபோன்று குவைத்தும் தூதரக உறவை துண்டித்த அரபு நாடுகள் உடனான பிரச்சினையை சரிசெய்ய குவைத் மத்தியஸ்தம் செய்யும்முகமாக கட்டாருக்கு ஆதரவு கரம் நீட்டியுள்ளது.

இந்நிலையில் சவூதி மன்னர் சல்மானை தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கட்டார் மீதான தடையால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிராக போராட, பிராந்திய ரீதியிலான ஒற்றுமையை நிலைநாட்டவும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலிலுள்ள நாடுகளின் ஒற்றுமையை உறுதிப்படுத்துங்கள் என்று சவூதி மன்னரிடம் டிரம்ப் கூறினார்.

அதுமட்டுமன்றி தனது டுவிட்டர் பக்கத்தில் ''நான் சமீபத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சுற்றுப் பயணம் சென்றேன். அப்போது, தீவிரவாத சிந்தனை கொண்டவர்களுக்கு இனிமேலும் நிதி வழங்கப்படக் கூடாது என்று வலியுறுத்தினேன். இதை நான் கூறியபோது, தலைவர்கள் கட்டாரை நோக்கி கையைக் காட்டினர். தீவிரவாதத்துக்கு ஆதரவாக செயற்படுவோர் மீது நாங்கள் கண்டிப்பாக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று உறுதியளித்தனர். கட்டாரின் நிலைமையை இப்போது பாருங்கள். இதுவே தீவிரவாதத்தின் முடிவின் தொடக்கமாக இருக்கலாம்.'' என்று பொங்கி தீர்த்துள்ளார்.

முன்னதாக கட்டார் நாட்டுடனான உறவை 4 அரபு நாடுகள் துண்டித்துள்ளதற்கு டிரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## உணவுத் தட்டுப்பாடு ஏற்படுமா?

சவூதி அரேபியா உட்பட நட்பு நாடுகள் எல்லைகளை மூடிவிடுமிடத்து கட்டாரில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்று அரசியல் ஆய்வாளர்கள் எதிர்வுகூறியிருந்தனர். அதுபோலவே, முதலாவது நாள் கட்டார் சந்தைகளில் உணவுப் பொருட்கள் தீர்ந்துபோயின. எனினும் அடுத்தநாள் அவைகள் சீராகின.



சவூதி கூட்டு நாடுகளின் தடை அறிவிக்கப்பட்டு 22 மணிநேரங்களுக்குள் துருக்கி மற்றும் ஈரானிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

சவூதியின் தடை தொடருகின்ற வேளையில், கட்டாரின் வர்த்தக, வாணிப அமைச்சு பல உணவுப் பொருட்களை கட்டாரில் தயாரிக்கப்பட்டது என்ற இலட்சினையுடன் சந்தைப்படுத்தியிருந்ததையும் காணக்கூடியதாக உள்ளது. 48 மணி நேரங்களில் கட்டார் பல உணவுப் பொருட்களை தயாரித்து சந்தைப்படுத்தியுள்ளது.

கட்டாரில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுமா? என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பியிருந்த கேள்விக்குப் பதிலளித்த கட்டாரின் வர்த்தக வாணிப துறை, கட்டாரில் உணவுத் தட்டுப்பாடொன்று ஏற்படாது. மேலும் 12 மாதங்களுக்கு தாக்கிப்பிடிக்கக்கூடிய உணவு வளத்தை கட்டார் கொண்டுள்ளது. கட்டாருக்கு 40 வீதமான இறக்குமதிகளே சவூதியில் இருந்து வருகின்றது. ஏனைய 60 வீதம் எஞ்சியுள்ளது. இவ்விடயங்களால் உணவுப் பொருட்களின் விலைகளிலும் எவ்வித மாற்றமும் ஏற்படாது. தாம் துருக்கி, ஈரான் ஆகிய நாடுகளுடன் உணவு இறக்குமதி குறித்து தொடர்ந்தும் பல தீர்மானங்களை எடுக்கவுள்ளதாகவும் கட்டார் தெரிவித்துள்ளது.

## கட்டாருக்கான நிபந்தனைகள்

கட்டாருடனான இராஜதந்திர உறவுகளை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் சவூதி உள்ளிட்ட வளைகுடா நாடுகள் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. கட்டார் உடனடியாக ஈரானோடு உள்ள அனைத்து இராஜதந்திர உறவுகளையும் துண்டித்துக் கொள்ள வேண்டும், கட்டாரில் வசிக்கும் ஹமாஸ் தலைவர்கள் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும், கட்டாரை தலைமையகமாக கொண்டியங்கும் அல் ஜஸீரா ஊடக நிறுவனம் முழுமையாக மூடப்பட வேண்டும், வளைகுடா மற்றும் ஏனைய நாடுகளிடம் தான் செய்த தவறுகளுக்காக மன்னிப்புக் கோறல், வளைகுடா நாட்டு அரசியலுக்கு அப்பால் வேறொன்றிலும் ஈடுபடாமல் இருப்பதாகவும், தன்னிச்சையாக எந்தவொரு முடிவையும் எடுக்கப் போவதில்லை எனவும் உறுதியளித்தல், கட்டாரில் வசிக்கும் இஹ்வானுல் முஸ்லிமூன் எனும் இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பின் தலைவர்களை வெளியேற்றல், எகிப்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது, சர்வதேச மட்டத்தில் செயற்படும் ஒருசில அரசசாரா சேவை நிறுவனங்கள் மூடிவிடல், அவற்றின் வங்கிக் கணக்குகளை பதிமுதல் செய்தல், சிரியா, லிபியா, யெமன் போன்ற நாடுகளில் அரசுக்கெதிராக போராடும் குழுக்களுக்கு வழங்கும் உதவிகளை நிறுத்திக்கொள்ளல், கட்டாரிலுள்ள சில பத்திரிகை நிறுவனங்களை மூடிவிடல் போன்ற நிபந்தனைகளை அமெரிக்கா சார்பு வளைகுடா நாடுகள் முன்வைக்கவுள்ளது.

மேற்படி நிபந்தனைகளில் சிலவற்றை சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் ஆதில் ஜுபைர் ஏற்கனவே வெளியிட்டிருந்தார். மேலும், நிலை நிபந்தனைகளை சமாதான முயற்சிகளில் ஈடுபடும் குவைட் மன்னர் ஷெய்க் சபா அல் அஹ்மத் அல் சபாவிடம் சவூதி நட்பு நாடுகள் வெளியிட்டுள்ளன.

கட்டாருக்கு முன்வைக்கப்படும் நிபந்தனைகளை ஏற்கனவே இஸ்ரேல், அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரல்களில் உள்ள விடயங்களாகும். கட்டார் இஸ்லாமிய வாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதை பலவாறும் எதிர்த்துவந்த இஸ்ரேல், டிரம்பின் வருகையைத் தொடர்ந்து வளைகுடா நாடுகளை வைத்தே கட்டாரை அடக்கும் திட்டத்தை அரங்கேற்றியுள்ளது. வளைகுடா நாடுகளின் கட்டாருக்கான நிபந்தனைகளால் பயனடையப்போவது இஸ்ரேலின் எதிரிகளேயன்றி வேறேதுமில்லை.

உலக இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் தலைவர் யூசுப் அல் கர்ளாவிக்கு புகலிடம் வழங்கி, சுதந்திரமாகக் கருத்துச் சொல்ல, செயற்பட அனுமதியளித்திருக்கிறது. இஸ்லாமிய உம்மத்தின் முதல் கிப்லாவும் புனித ஸ்தலமுமான பைத்துல் முகத்திஸை பாதுகாக்கப் போராடும் ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவளிக்கிறது. சிரியாவின் அஸதுக்கெதிராக போராடும் இஸ்லாமிய போராளிகளுக்கும் அந்நாட்டில் அகதிகளான மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டுகின்றது. மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மதிக்கக் கூடிய ஜனநாயக முறையிலான இஸ்லாமிய ஆட்சி எகிப்துக்கு தேவை எனக் கருதும் இஃவானுல் முஸ்லிமூன் அமைப்புக்கு ஆதரவு வழங்குகின்றது. இஸ்லாமிய உம்மத்தின் தன்மானமுள்ள ஆட்சியாளராகத் திகழும் ரஜப் தைய்யிப் அர்தூகானின் நெருங்கிய நண்பராக செயற்படுகின்றது. இஸ்லாமிய சமூகத்தின் உண்மைக் குரலாகத் திகழும் சக்திமிக்க ஊடகமாகிய அல்ஜெசீராவை செயற்படுத்திவருகின்றது.

இவையனைத்தும் கட்டாரை மத்திய கிழக்கின் உயர்வடையச் செய்கின்றது. தமது பிராந்திய அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவும், மத்திய கிழக்கில் தொடர்ந்தும் இஸ்ரேலின் சட்டவிரோத இருப்பை பாதுகாக்கவும், அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்தவுமே கட்டார் நெருக்கடி.

## டொனால்ட் ட்ரம்பின் ஆரவாரம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வளைகுடா நாடுகளின் நெருக்கடி இராஜதந்திர நிலை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். அவர் அண்மையில் மத்திய கிழக்குக்கு மேற்கொண்ட உத்தியோக பூர்வ பயணத்தை தொடர்ந்தே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், கட்டாருக்கெதிரான செயற்பாட்டிற்கான மதிப்பும் அவரையே சாரும் என்றும் தெரிவித்துள்ளார். தான் பயங்கவாதத்துக்கு எதிராக போராட மத்திய கிழக்கு தலைவர்களுக்கு விடுத்த அழைப்பின் பிரதிபலனே கட்டார் தனிமைப் படுத்தப்பட்டது. அமெரிக்க அதிபர் தனது தனிப்பட்ட டுவிட்டர் பதிவுகளிலே மேற்படி தெரிவித்துள்ளதால் இவை அமெரிக்காவின் கருத்தா? அல்லது அவரின் தனிப்பட்ட கருத்தா? என்பது தெளிவில்லை என்று சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.





அம்னா இஷ்னான், தரம் 4ஏ
அல் பஹ்ரியா மத்திய கல்லூரி,
தொட்டவத்தை, பாணந்துறை




எழுதப்படும் சொல்லை
விட பேசப்படும் சொல்லே
வலிமையானது.
- ஹிட்லர்.

# இரண்டு முட்டாள் ஆடுகள்

அது ஓர் அடர்ந்த காடு. அந்த காட்டின் நடுவே குறுகிய பாலம் ஒன்று ஆற்றின் நடுவில் இருந்தது. ஒரு நாள் அந்த பாலத்தை கடப்பதற்காக இரண்டு ஆடுகள் பாலத்தின் அருகில் வந்து நின்றன. ஓர் ஆடு பாலத்தின் ஒரு முனையிலும் மற்றொன்று மறுமுனையிலும் வந்து நின்றன.

அந்த பாலத்தால் ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே கடக்க முடியும். இது தெரிந்திருந்தும் இரண்டு ஆடுகளும் பாலத்தை கடப்பதற்காக ஒரே நேரத்தில் ஏறி பாலத்தின் நடுவில் வந்து நின்றன.

முதலாவது ஆடு 'எனக்கு வழி விடு நான் செல்ல வேண்டும்' என்றது. உடனே, இரண்டாவது



ஆடு 'நான் தான் முதலில் வந்தேன்; எனக்கு நீ தான் வழி விடவேண்டும்' என்றது. இப்படியே இரண்டு ஆடுகளும் விட்டுக்கொடுக்காமல் சண்டை விடத் தொடங்கின. சண்டையிடும் போது இரண்டு ஆடுகளின் கால்களும் பிடிமாணம் இன்றி இரண்டு ஆடுகளும் ஆற்றில் விழுந்தன. ஆற்றில் விழுந்தவுடன் இரண்டு ஆடுகளும் தாங்கள் செய்த தவறை நினைத்து வருந்தின. இறுதியில் இரண்டு ஆடுகளும் நீரில் மூழ்கி இறந்தன.

விட்டுக் கொடுக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பாக விட்டுகொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆடுகளுக்கு நேர்ந்த கதியே ஏற்படும்.

## மலரும் மொட்டு



பாணந்துறை, தொட்டவத்தை ராஸிக் வீதியைச் சேர்ந்த தாரிக் - ஷியாமா தம்பதியரின் ஏக புதல்வன் முஹம்மது அஃஜாத் தனது எட்டாவது பிறந்த தினத்தை 06.06.2017 இல் தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறையருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

## பள்ளி செல்லும் தம்பி...!



குர்ஆன் தூக்கி பள்ளி செல்லும் தம்பி - நாளை
ஏற்றங்காண வேண்டும் உன்னை நம்பி
எண்ணிப்பாரு நாட்டையும் வீட்டையும் - தம்பி
நல்லன கூறு நன்றாக ஓதி.....!

சாதி, மத, பேதமெல்லாம் தள்ளு - தம்பி
சாந்தநபி வழியதை வாழ்வில் கொண்டு
குர்ஆன் வழியில் புறப்படு - தம்பி
குறைகாணா ஷஹாபா வாழ்வையும் பார்!


மறுமை வாழ்வை எண்ணிடு - தம்பி
எந்நாளும் வாழ்வில் ஓதிடனும் கலிமா
அனுதினமும் ஐவேளை தொழுதிடு - தம்பி
உயர்ந்திடுவோம் என்றும் வாழ்வினிலே!

கவிச்சுடர், கல்லொழுவை பாரிஸ்

## நாடுகளும் பாராளுமன்றங்களும்

ஜப்பான் - டயற்
ரஷ்யா - சுப்ரீம் சோவியத்
ஈரான் - மஜ்லிஸ்
இலங்கை - பாராளுமன்றம்
சீனா - தேசிய மக்கள் காங்கிரஸ்
இஸ்ரேல் - கினேசத்
இந்தியா - லோக்சபா
ஆப்கானிஸ்தான் - சோரோ
பிரித்தானியா - பாராளுமன்றம்

## வானவில் ஏன் அரை வட்டமாக இருக்கிறது?



மழை பெய்தபின் சூரியனுக்கு எதிர் திசையில் ஏழு வண்ணங்களுடன் அரை வட்ட வடிவில் காணப்படும் ஒளிவட்டமே வானவில் என்று அழைக்கப்படுகிறது. மழை பெய்தபின் வானில் நீர்த்திவலைகள் அதிகளவில் காணப்படும். சூரியனில் இருந்து வெளிப்படும் வெள்ளை ஒளிக்கதிர்கள் அந் நீர்த்திவலைகளில் பட்டு சிதறடிக்கப்பட்டு, ஏழு வண்ணங்களாக பிரிகிறது.

உண்மையில் நீர்த்திவலைகளால் சிதறடிக்கப்படும் சூரியனின் ஒளியானது, வட்ட வடிவத்திலேயே வானவில்லை உண்டாக்குகிறது. இருப்பினும் வானவில்லின் கீழ்ப்பகுதி தொடுவானத்தின் கீழே நம்மால் பார்க்க இயலாதபடி மறைந்து விடுவதால் மேலே உள்ள அரை வட்டப்பகுதி மட்டுமே நமது கண்களுக்கு புலப்படுகிறது. எனவே தான் வானவில் அரைவட்ட வடிவில் நமக்கு தோற்றமளிக்கிறது.

## ஐவகை

**ஐம்பூதம்**
மண், நீர்,
நெருப்பு, காற்று,
ஆகாயம்

**ஐம்பொறி**
கண், காது, நா, மூக்கு, மெய்

**ஐம்பால்**
ஆண்பால், பெண்பால்,
பலர்பால், ஒன்றன்பால்,
பலவின் பால்



சங்குகளின் ஓடுகள் பலம் மிக்கவை. எளிதில் உடைக்க முடியாதவை. எனவே சங்குகளின் வேதியியல் கட்டமைப்பை அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிலைய ஆராய்ச்சியாளர்கள் பரிசோதனை செய்தனர். அவற்றின் மூன்று அடுக்குகள் கொண்ட கட்டமைப்பும் வேதியியல் அம்சங்களும் தான் அவற்றுக்கு பலத்தைத் தருவதாக ஆய்வுகள் மூலம் அவர்கள் கண்டறிந்தனர். உடலை காக்கும் தலைக் கவசம், கேடயம் போன்றவற்றை தயாரிக்க சங்குகளின் வேதியியல் அமைப்புள்ள பொருட்களாய் தயாரிக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



## படைப்பாளன் தண்டனையைப் பார்

இடி விழுவான்களே இரக்கமற்ற அரக்கர்களே
அடிவிழுந்து துடிக்கும் அகதிகளை - முடிவின்றி
மேலும் அடிக்காதீர் மேலவனின் சாபம்
சூழுமே உம்மைத் தொடர்ந்து

காட்டு விலங்குகள் மேல் காட்டுங்கருணையது
நாட்டின் குடிகளின் மேல் நாம் காணோம் - ஓட்டி
அழிந்தார் புலிகள் அவர்களை வரலாறு
பழித்தே உரைக்குமிந்தப் பார்

பலநூறு வருடங்கள் பரம்பரை தலைமுறையாய்
நிலமெமக்கே உரித்தென்று நீரறிந்தும் - பலங்காட்ட
ஆட்சியிலிருப்பவர்கள் அநியாயம் செய்வாரேல்
சூழ்ச்சி செய்வான் இறைவனெனச் சொல்

நீதி செய்யும் தலைவர்களை நிலத்தில் உயர்த்திடுவாய்
சாதி மதமென்று தன்னலமாய் - பேதமுடன்
நடப்பார்க் கிழிவுண்டாம் நாவிலமே தூற்றும்
படைப்பாளன் தண்டனையைப் பார்.

முடிதுறந்த முனிவனைவன் முழுநிலமும் நலம்வாழ
படிமீது செய்த பணியை - அடியொற்றி
வாழும் பெரியோர் வழி தேடும் அகதிகளைச்
சூழும் துயர் தீர்க்கும் துணை






## யாசிப்பு



நேசிக்கின்ற ஒவ்வொர் இதயமும்
யாசிக்கின்ற ஒவ்வொரு
பாத்திரங்கள் தான்

அதில் எதிர் பார்ப்பதோ
அன்பினை மட்டும் தான்

மயாஸா பாஸில், கஹட்டோவிட்ட



## நிலைப்பாடு ஒன்றுதான்

பேசும்பேனாவால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் அறிவோம். படித்தோர் மட்டுமல்லாது, பாமரர் கூட பேசும் பேனாவைப் பார்ப்பதாகவும் அறிய முடிகிறது. அந்த வகையில் கடந்த வார பேசும் பேனாவின் கருத்துக்களுக்கு ஒத்தடம் கொடுக்கும் வகையில் மற்றொரு கருத்து, கத்தான்குடியிலிருந்து கடித உருவில் வந்துள்ளது. (வாசகர் பார்வைக்காக கடிதம் பிரசுரமாகிறது)

பிரச்சினை அதுவல்ல. பேசும் பேனாவின் சொல்லோவியங்கள் அல்லது கருத்தோவியங்கள் வெறும் பொழுது போக்குக்காகவோ அல்லது கலை இலக்கியங்களுக்காக மட்டுமோ வரையப்பட்டவையல்ல, கல்வி, விளையாட்டு, விஞ்ஞானம், தொழில் நுட்பம், வர்த்தகம், போக்குவரத்து, சினிமா, நாடகம் ஏன் செல் போனைப் பற்றிக் கூட பேசும் பேனா பேசியிருக்கிறது. அரசியலுக்குள்ளும் நுழைந்திருக்கிறது. பாலியல் வன்புணர்வு, ஆண்களின் காமவெறியினால் விழுகின்ற கொலைகள், கொள்ளைக்காரர்கள் சமூகத்துரோகிகள் பற்றியெல்லாம் பேசியிருக்கிறது பேனா.

கெட்டவற்றை தூற்றுகின்ற அதேவேளை நல்லவற்றை (உடனடியாகப்) பாராட்டவும் தயங்குவதில்லை பேனா. பேனாவின் கருத்தை ஏற்றுக் கொள்வோரும் உளர்; எட்டித்தள்ளுவோரும் உளர்; எரிச்சலடைவோரும் உளர்.

ஆனால் பேனா முன்வைக்கும் கருத்து அதனது தனிப்பட்ட (தனித்துவமான) கருத்தேயாகும். அதற்குப் பல விமர்சனங்கள் இருக்கலாம். அதற்கெல்லாம் அஞ்சப் போவதுமில்லை பேனா. அஞ்சியதுமில்லை. பூமாலையையும் பொல்லடியையும் சமமாகவே மதிக்கிறது பேனா.

- கலை

**சென்ற வாரத் தொடர்ச்சி...**

# வாழ்வோரை வாழ்த்துவோம் தோன்றிய வரலாறு


விருது பெற்று, மேடைவிட்டிறங்கிய ஒரு கலைஞர் இவ்வாறு கூறினார். 'ஒரு கலைஞன் என்ற வகையில் என் வாழ்நாளில் இப்படியொரு மகிழ்ச்சியை நான் அடைந்ததில்லை. கமராக்களின் ஒளி வெள்ளத்திலே திணறிப்போய்விட்டேன். நான் ஒரு ஜனாதிபதியாக மேடையில் நிற்பது போன்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது'

விருதாளர்கள் அவர்களது குடும்பத்தினர், மந்திரிப் பிரதானிகள் ஆகியோர் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அறுசுவை உணவை அருந்தியபடி மேசையொன்றில் அமர்ந்திருந்த அந்தப்பாடகி 'இசைக்கோகிலம்' இறக்காமம் மீரா உம்மா, அருகிலிருந்தவரிடம் கேட்டார் 'இது யாருடைய ஹோட்டல்; விருந்து கொடுப்பவர் யார்?' என்று விடை கிடைத்த மறுகணமே இழுத்துவிட்டார் ஓர் ஆலாபனையை. கணீர் என்ற கம்பீரக் குரலில் கே.பி. சுந்தராம்பாள், ஜி.கே. பட்டம்மாள் ஆகியோரின் சாயல் மீராஉம்மாவின் குரலில் தொனித்தது.



முதலாம் விருது விழாவையொட்டி ஒரு கனதியான சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. பெறுமதிமிக்க கட்டுரைகளை உள்ளடக்கிய அம்மலரில், விருது பெறும் அனைவரினதும் சுருக்கமான வாழ்க்கைக்குறிப்பு இரு மொழிகளிலும் இடம்பெற்றிருந்தன. அழகிய முகப்போவியத்துடன், சித்திர, எழுத்தணி, புகைப்பட அலங்காரங்களுடன் ஓர் ஆவணக்களஞ்சியமாக மலர் அமைந்திருந்தது. இலக்கிய, ஊடகஜாம்பவான்களைக் கொண்ட ஓர் ஆசிரியர் குழாம் மலரைத் தயாரித்திருந்தது.

விழா முடிந்ததும் ரன்முத்து ஹோட்டலில் (தற்போது உடைக்கப்பட்டு விட்டது) நடைபெற்ற இராப்போசன விருந்து பிரமாதமாக இருந்தது.



'ரன்முத்து ஹோட்டலின் அதிபதி ஏ. டபிள்யூ எம். அமீரே.....' என்று தொடங்கி என்ன வெல்லாமோ பாடினார் அந்த இறக்காமத்து வானம்பாடி.

எல்லாம் நிறைவு பெற்றதும் ஹோட்டலில் வைத்தே விருதாளர்கள் தங்கள் குடும்பத்தாருடனும் அமைச்சருடனும் சேர்ந்து புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர்.

**புள்ளட்டுப் போர்வீட்ட கலைஞனின் மேனியில் பொன்பட்டுப் போர்த்திய** முதலாவது முஸ்லிம் கலைஞர் விருது விழா ஒரு கண்கொள்ளாக் காட்சியெனில் அது மிகையாகாது.

ஏனைய மூன்று விழாக்களைப் பற்றி கூறுவதெனில் தனி நூல் ஒன்றுதான் எழுத வேண்டும்.

(முற்றும்)

**வாசகர் கடிதம்**

கடந்த 02ஆம் திகதி நவமணி வார இதழில் பேசும்பேனா பகுதியில் 'எங்கே தேடுவேன் பணத்தை' என்னும் தலைப்பில் நல்லதொரு விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தீர்கள். சமூகத்தின் சிந்தனைக்கு இவ்விடயத்தை விட்டிருந்தீர்கள். ஊர்ப்பிரமுகர்கள் தத்தம் பகுதி, பரீட்சைத் திறனாளிகளை கௌரவித்த விடயத்தை செல்வந்தர்களின் கவனத்திற்கு தெரிவித்திருந்தீர்கள்.

அந்த வகையில் காத்தான்குடி நஸீலா பௌண்டேசன் (NASEELA FOUNTATION) அமைப்பு கடந்த ஐந்து வருடகாலமாக க.பொ.த. உயர்தரத்தில் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதியினை வழங்கி வருகின்றது. இவ்வருடம் சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ, 8ஏ பெறுபேறுகளைப் பெற்ற, வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த நாற்பது மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு மாதம் 2000 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கி வருகிறது. அவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த மாதம் 19ஆம் திகதி இடம்பெற்றது. இவ்வைபவத்தில் 2017/2019 மாணவர்கள் 40 பேரும் 2016/2018 மாணவர்கள் 40 பேரும் இப்பணத்தினைப் பெற்றார்கள். ஆரம்ப நிகழ்வில் இரண்டு மாதங்களுக்கான கொடுப்பனவு ஒவ்வொரு மாணவர்களுக்கும் ரூபா 4,000 வீதம் வழங்கப்பட்டது.

அத்துடன் 2016/2018 வருட மாணவர்களில் பாடசாலை தவணைப் பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு மாணவரைத் தெரிவு செய்து ஊக்குவிப்புப் பரிசாக தலா 5,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது. இன்றுவரை 240 மாணவர்கள் அந்நிதியினைப் பெற்று பயனடைந்துள்ளனர். பயனடைந்து வருகின்றனர். இவர்களில் பலர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கல்வியைத் தொடர்கின்றனர்.

ஏ.எல்.எம். சித்தீக்
ஓய்வுபெற்ற அதிபர்
காத்தான்குடி

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து முஸ்லிம் தலைமைத்துவம் உருவாக வேண்டும்

## முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் ஏ.ஆர்.எம்.ஏ காதர்

(மபாஸ் சனூன்)

இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு சிறந்த தலைமைத்துவம் ஒன்று வழங்குகின்ற தலைமை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்துஉருவாகவேண்டும் என்று கனவு காணுகின்றேன். இன்றைய முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம் சமூகத் தைநாட்டாற்றில் கைவிட்டுள்ளன. அவர் களுக்கு முக்கியம் பதவிகளும் சலுகை களும் மட்டுமே என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக ஸ்தாபக உபவேந்தர் பேராசிரியர் ஏ.ஆர்.எம்.ஏ காதர் குறிப்பிட் டார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற இப்தார் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் உரையாற்றியஅவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்துக்கானகாரணம் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸாகும். இலங்கையின் தென்கிழக்குப் பிரதேசத்தில் காணப்ப டுகின்றகலை,கலாசாரம்,சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கி லேயே இப்பல்கலைக்கழகம் உருவாக் கப்பட்டது. ஆரம்பத்தில் இதில் மூன்று பீடங்களேகாணப்பட்டன. தற்போது இப்பல்கலைக் கழகத்தில் ஐந்துபீடங்கள் இருப்பது இதன் வளர்ச்சியைக் காட்டு கிறது. அதுமகிழ்ச்சிஅளிக்கிறது. அன்று இதில் இளம் விரிவுரையாளர்களாக இருந் தவர்கள் இன்றுமுக்கியமானவளவாளர் களாகமாறியுள்ளனர்.

முஸ்லிம் சமூகத்துக்குசிறந்த தலை மைத்துவம் வழங்கியஒருசிரேஷ்ட தலைவர் மர்ஹூம் ஏ. எச். எம். அஷ்ரப் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இலவச ஸஹர் உணவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கொழும்பு - பெரிய வைத்தியசாலையில் நோயாளருக்கு உதவியாளராக தங்கி இருக்கின்றவர்களுக்கு ஸஹர் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நிதா ஸ்தாபனத்தின் இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தி, இலவச ஸஹர் உணவு தேவைப்படும் உதவியாளர்கள் யாரும் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். இதேவேளை, இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஸஹர் நேரத்தில் கடமை புரியும் முஸ்லிம் ஊழியர்களுக்கு நிதா ஸ்தாபனத்தின் மூலமாக முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் எம். இஸட். அஹமத் முனவ்வர் பணிபுரியும் காலத்தில் ஸஹர் உணவு விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தொடர்புகளுக்கு -**

கொழும்பு பெரிய வைத்தியசாலை ஊழியர் ஆப்தீன் 071 - 4468991

கொழும்பு பெரிய வைத்தியசாலை ஓய்வு பெற்ற முன்னாள் அதிகாரி அப்துல் றஹ்மான் 075 - 5576610

# சிங்கள பாடகர் உதய பிரியந்த காலமானார்

பிரபல சிங்கள பாடகர் பிரின்ஸ் உதய பிரியந்த வியாழனன்று தமது 47 ஆவது வயதில் காலமானார்.

ஒரு வருட காலமாக நோய் நிலைமை களினால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொழும்பு வைத் தியசாலையில் இவர் காலமாகியுள்ளார்.

பிரபலமான சிங்கள பாடகராக திகழ்ந் துள்ள இவர், தனது கடைசி காலங்களில் மகன்மாரின் அரவணைப்பிலேயே இருந் துள்ளார்.

# சிறுநீரக நோயாளிகளின் மாதாந்த கொடுப்பனவு அதிகரிப்பு

சிறுநீரக நோயாளிகளுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மாதாந்தக் கொடுப்பனவுத் தொகை ரூபா 3000 வில் இருந்து ரூபா 5000 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 20000 பேருக்கு தற்போது அரசாங்கத்தினால் இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

# வடமாகாண சர்ச்சைகள் தொடர்பில் முதல்வரின் விசேட விசாரணைகுழு சிறந்தது

## அமைச்சர் மனோ



வடமாகாண சர்ச்சைகள் தொடர்பில் முதல்வர் விக்னேஸ்வரன் விசேட விசாரணைக்குழுவொன்றை அமைத்துள்ளமையானது சிறந்த விடயமாகும் என்று தேசிய நல்லிணக்க மற்றும் சகவாழ்வு அமைச்சரான மனோகணேசன் தெரிவித்தார்.

அத்தோடு, தனக்கு வடமாகாண சபை குறித்து கருத்து வெளியிட தார்மீக உரிமையுண்டு என்றும் குறிப்பிட்டார்.

இதுவிடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் மிகவும் பிரபல மாகாணசபைகள், வட மாகாண சபையும், கிழக்கு மாகாணசபையும் ஆகும். இப்படியான வடமாகாண சபை குறித்து பேசவும் எனக்கு உரிமையுள்ளது. மத்திய அரசு அமைச்சர் என்ற உரிமையில் மாத்திரம் அல்ல. அதாவது, மஹிந்த ஆட்சியில் அவர் வடக்கு தேர்தலை நடத்தாமல், காலம் தள்ளிக்கொண்டே போன போது, அதை நடத்த வேண்டும் என்று இங்கிருந்து அழுத்தமாக போராடியவர்களில் நான் ஒரு முன்னணியாளன். இந்நிலையில், இந்த சர்ச்சைகள் தொடர்பில் முதல்வர் விக்கினேஸ்வரன் ஒரு விசாரணை குழுவை நியமித்து அறிக்கையை பெற்று நடவடிக்கை எடுத்துள்ளமையானது நல்ல முற்போக்கான நடவடிக்கையாகும்.

தனி ஒரு நாட்டை கோரிய உங்களுக்கு, ஒரு மாகாணசபையையே பரிபாலிக்க முடியவில்லையா என தெற்கில் எழும் கூச்சலுக்கு உரிய பதிலை தரும் பொறுப்பு முதல்வரிடம் இருக்கின்றது என்றார்.

# 10 ஆம் திகதியிலிருந்து காலநிலையில் மாற்றம்

நாட்டின் சில பிரதேசங்களில் இடைக்கிடையே பெய்யும் மழை எதிர்வரும் 10 ஆம் திகதி பின்னர் தற்காலிகமாக குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேலும் கிழக்கு, சப்ரகமுவ, தெற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் 10 ஆம் திகதிக்கு முன்புள்ள நாட்களில் இடைக்கிடையே மழை பெய்யும் என்றும் அத்திணைக்களம் குறிப்பிட்டது.

# அகில இலங்கை சமாதான நீதவான்



கஹட்டோவிட்டவைச்சேர்ந்த அதிபர் எம்.ஐ.எம். ரிஸான் அகில இலங்கை சமாதான நீதிவான நியமிக்கப்பட்டுள்ளார். அத்தனகல்லை மஜிஸ்திரேட் நீதவான் எஸ்.ஏ.ஐ.என் அரவீர முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தற்போது அல்லமுல்ல சாஹிரா மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பணிபுரியும் இவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் எம்.எஸ்.எம். எல்.எம். இல்யாஸின் புதல்வராவார்.

# இப்தார் நிகழ்வு

மள்வானை கராபுகஸ் சந்தியில் அமைந்துள்ள 'மள்வான ஜும்ஆ மஸ்ஜிதின்' வருடாந்த இப்தார் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (11)பள்ளிவாசல் தலைவர் எம்.எப்.எம் இம்ரான் தலைமையில் நடைபெறும்.

இத்தினத்தன்று மாலை 5.00 மணிக்கு அஷ் ஷேஃ லபர் இஸ்லாமிய குடும்பம் என்ற தலைப்பில் விசேட சொற்பொழிவாற்றுவார். பெண்களுக்கான பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# இமாம் ஷாபிஈ நிறுவனத்தின் உயர் கல்வி மாணவர்களுக்கான புலமைப் பரிசில்





கஹட்டோவிட்டாவில் இயங்கும் கல்விக்கும் அபிவிருத்திக்குமான இமாம் ஷாபிஈ நிறுவனத்தின் உயர் கல்வி மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்குதல், வறியவர்களுக்கான உலர் உணவுப் பொதி விநியோகம் மற்றும் அனாதைச் சிறுவர்களுக்கான நிதி உதவி வழங்குதல் போன்ற நிகழ்வுகள் (08) நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்விக்கும் அபிவிருத்திக்குமான இமாம் ஷாபிஈ நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ. முஜீப் கபூரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் அஷ்ஷெய்க் எம்.எம். முஹம்மத் சிறப்புப் பேச்சாளராகவும், மேல் மாகாண சபை உறுப்பினர் ஷாபி ரஹீம் விசேட அதிதியாகவும், ருகுணு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தம்மிக ஜயசிங்க சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், உயர் கல்வியில் படிக்கும் 50 மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் புலமைப் பரிசில் உதவியும், 17 ஏழைக் குடும்பங்களுக்கு தலா 45 ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவியும், 110 உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வைபவத்தில் கிராமத்தின் பள்ளிவாயல்களின் தலைவர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 1850 கிராம அதிகாரி பதவிகளுக்கு 18,000 பேர் பரீட்சைக்கு தோற்றினர்

## விரைவில் நியமனம்; வஜிர அபேவர்தன

1850 கிராம உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உள்துறை அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இந்த வெற்றிடங்களுக்காக கடந்த செப்டம்பர் மாதத்தில் 18000 பேர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

ஜே.வி.பி தலைவர் அநுர குமார பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் நாட்டிலுள்ள 14022 கிராம அதிகாரிகள் பிரிவில் 5700 கிராம அதிகாரி பிரிவுகள் சேதத்துக்குள்ளாகியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# ஈரானின் தாக்குதலுக்கு அஸ்வர் கண்டனம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஈரான் பாராளுமன்றத்தின் மீதும் ஆயத்துல்லாஹ் கொமைனியின் அடக்கஸ்தலத்தின் மீதும் தாக்குதல் நடைபெற்ற சம்பவம் எம்மையெல்லாம் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என முன்னாள் முஸ்லிம் விவகார அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச்.எம். அஸ்வர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈரான் பாராளுமன்றம் தாக்கப்படுவதை கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

முஸ்லிம் உலகை இல்லாமல் ஒழிப்பதற்கு சர்வதேச யஹூதிப் பட்டாளம் எவ்வளவு மும்முரமாக பணியாற்றி வருகின்றது என்பது இதிலிருந்து நன்கு புலனாகின்றது.

எனவே இந்தப் புனித ரமழான் மாதத்தில் உலக முஸ்லிம் நாடுகளுக்கும் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம்பள்ளிவாசல்களான புனித தளங்களுக்கும் பாதுகாப்புக்காக வேண்டி நாம் துஆ கேட்க கடமைப்பட்டுள்ளோம். - என்றார்.

# பேருவளையில் இலவச கண் பரிசோதனை முகாம்

ஜம்இய்யதுஷ் ஷபாபின் ஏற்பாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் புத்தளம் குவைத் வைத்தியசாலையில் இலவச கட்ரக் (Cataract ) கண் சத்திர சிகிச்சை பெற்றவர்களின் கண்களை பரிசோதனை செய்யும் வைத்திய முகாம் ஞாயிற்றுக் கிழமை (11) மு.ப 10 மணி முதல் 12 மணி வரை பேருவளை காலி வீதி (மறக்கலா வத்தை) லாரா வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேருவளை , காலி , வெலிகாமம் , மாத்தறை , களுத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கட்ரக் சிகிச்சை பெற்றவர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு இலவசமாக கண்களை பரிசோதனை செய்து கொள்ள முடியும்.

மேற்படி முகாமில் விசேட வைத்தியர்கள் கலந்து கொண்டு பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதனால் கண் சத்திர சிகிச்சை பெற்றவர்கள் உரிய நேரத்தில் சமூகமளித்து தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் தேவையேற்படின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான மிர்ஸாக் பளீல் (077 2263692) உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.







ரெலோ இயக்கம் மற்றும் சிவன் அறக்கட்டளை நிறுவனமும் இணைந்து சீரற்ற கால நிலை மாற்றத்தினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட புலத்சிங்கள மக்களுக்கான வெள்ள நிவாரண உலருணவு வழங்கி வைக்கும் நிகழ்வு புலத்சிங்கள மில்லேகந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ரெலோ இயக்கத்தின் தலைவரும், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும் மற்றும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குனர் கனேஸ்வரன் வேலாயுதம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு உலருணவு வழங்கி வைப்பதைப் படங்களில் இங்கு காணலாம்.

(குருநாகல் இக்பால் அலி)


சிரேஷ்ட மனநல ஆலோசகர் துணைத்தலைவர், இலங்கை உளவள ஆலோசக நிபுணர்களின் சங்கம், இலங்கை மன்றம் பிரதித் தலைவர் போதைப்பழக் கத்துக்குட்பட்டோருக்கான தேசிய மனவள ஆலோசனை சபை

அஸ்ஹர் அன்ஸார்
M.S Psych (Ind), A.D.Psycho.C (SL), D.Psy.C (SL), D.Y.T (Ind), FRSPH (UK)


## மன நலமும் ஆலோசனையும்

# உடல்சார்ந்த தண்டனை

தொடர் 186

★ எமக்கு வேண்டாத வேலைகள் பிள்ளைகள் செய்வதைக் காணும் போதும் அவர்களைத் தண்டிக்கிறோம்.

★ தவறான வேலைகள் செய்வதைக் காணும்போதும் அவர்களைத் தண்டிக்கிறோம்.

★ நாம் ஒப்படைத்த வேலைகளை செய்யாதபோதும் பிள்ளைகளைத் தண்டிக்கிறோம்.

வீட்டில், சூழலில், பாடசாலையில் என பல இடங்களில் பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் தண்டிக்கப்படுகிறார்கள்.

★ தண்டிக்காமல் பிள்ளைகளை வளர்க்க முடியாது.

★ இப்பவே அடித்து பயம்காட்டாவிட்டால் பிறகு கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும்.

★ நல்லா அடிச்சித்தான் வளர்க்க வேண்டும்.

என்று சொல்கின்றவர்களும் நம்மில் இருக்கவே செய்கின்றனர்.

எப்படி இருப்பினும் பிள்ளைகள் ஏதோ ஒருவகையில் தண்டிக்கப்படத்தான் செய்கின்றனர். நோவினையான அல்லது வெறுப்பு உண்டாகின்ற முறைகளில் பிள்ளைகளைத் தண்டிக்கின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

தண்டிப்பதில் உடல் சார்ந்த, சொல் சார்ந்த தண்டனை முறைகள் காணப்படுகின்றன.

**உடல் சார்ந்த தண்டனை முறைகள்**

★ கன்னத்தில் அறைதல்
★ காதுகளை முறுக்குதல்
★ முதுகிற்கு அடித்தல்
★ பிடறியில் அடித்தல்
★ பிரம்பு, கம்பு, தும்புத்தடியால் அடித்தல்
★ இடுப்பில் அணியும் பட்டியால் அல்லது
★ கையில் அகப்படும் ஏதாவது ஒரு பொருளால் எறிதல்

போன்ற முறைகளில் தண்டித்தல் உடல் சார்ந்த தண்டிப்பு முறைகளாகும்.

**சொல்சார்ந்த தண்டனை முறைகள்**

★ உறத்துக்கத்துதல்
★ ஏசுதல்
★ கேலி செய்தல்
★ மற்றவர்கள் முன் இகழ்ந்துரைத்தல்
★ குறைசொல்லுதல்
★ மோசமான சொற்களால் ஏசுதல்
★ தூசனமான சொற்களால் ஏசுதல்
★ உன்னோடு இறக்கம் இல்லை என்று சொல்லுதல்
★ உன்னால் சரியான பிரச்சினை என்று சொல்லுதல்

போன்ற முறைகள் பயன்படுத்தப்படுவது சொல் சார்ந்த தண்டனை முறைகளாகும்.

பிள்ளைகளை மிகவும் மோசமான முறைகளில் தண்டிக்கின்ற சம்பவங்களை நாம் இன்று நாட்டில் பல பாகங்களில் இருந்தும் கேள்விப்படுகிறோம்.

★ காயங்கள் ஏற்படும் அளவிற்கு அடித்தல்
★ நெருப்பினால் சுடுதல்
★ உண்ண உடுக்க கொடுக்காதிருத்தல்
★ அடித்து வீட்டைவிட்டு துரத்துதல்

போன்ற பல சம்பவங்கள் நிகழ்வதை கேள்விப்படுகிறோம். இவ்வாறு எமக்கு தெரியவராத, வெளிவராத எத்தனையோ சம்பவங்களும் இருக்கலாம். சில தண்டனை முறைகளினால் கடுமையாக மனமுடைந்துபோய் பிள்ளைகள் தற்கொலை செய்துகொண்ட சந்தர்ப்பங்களையும் செவியுற்றிருக்கிறோம்.

உடல் சார்ந்த தண்டனை முறைகள் பயன்தரும் என்று சொல்பவர்களைப் போன்று பயன்தராது என்று சொல்பவர்களும் இருக்கிறனர். அடித்தால் திருந்துவான், அடித்தால் பயப்படுவான் என்று நாங்கள் நினைத்தாலும் தண்டனைக்கு உள்ளாகும் பிள்ளையின் சிந்தனையிலும் நடத்தையிலும் பல எதிர்மறையான மாற்றங்கள் ஏற்பட அது காரணமாக அமைகின்றது என்பதை நம்மில் அனேகர் புரிந்துகொள்வதில்லை.

ஒரு பிள்ளை தண்டிக்கப்படும்போது அந்தத் தண்டனையை பிள்ளையால் தாங்க முடியாதுபோனால், தான் பயனற்றவன், தன்னில் ஏதோ பிழை அல்லது குறை இருக்கிறது. அதனால் நான் மிகவும் மோசமாக உபசரிக்கப்படுகிறேன் என்ற எண்ணம் பிள்ளையின் சிந்தனையில் உருவாக தொடங்கும். பிள்ளைகள் மோசமானவர்கள் என்று எண்ண ஆரம்பித்தால் அவர்கள் மோசமானவர்களாகவே செயற்பட ஆரம்பிப்பார்கள். அதனால் அவர்களின் செயற்பாடுகள் மேலும் அதிருப்தியையும் கோபத்தையும் ஏற்படுத்தக்கூடியனவாகவே அமைந்துவிடும்.


பெற்றோர்கள் பிள்ளைகளை மீண்டும் மீண்டும் தண்டிக்க ஆரம்பிக்கும் பொழுது அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் பயனற்றதாகவும் மோசமானதாகவுமே வெளிவரும். இதனால் அவர்களின் சிந்தனையிலும் நடத்தையிலும் ஒரு நச்சுவட்டம் உருவாக ஆரம்பிக்கும். இந்த நச்சுவட்டம் பிள்ளையின் சிந்தனையில் தொடர்ந்து சுழன்றுகொண்டே இருப்பதுடன் அது செயற்பாட்டில் வெளிவரவும் ஆரம்பிக்கும்.

பிள்ளைகளின்

★ சிந்தனை மோசமாக இருந்தால் உணர்வுகள் மோசமாக இருக்கும்

★ உணர்வுகள் மோசமாக இருந்தால் செயற்பாடுகள் அசிங்கமாக வெளிவரும்

சிலகாலம் கழிந்தபின் பெற்றோரையே எதிர்த்து நிற்கக்கூடிய பிள்ளைகளாக மாறவும் வாய்ப்புண்டு. எனக்கே நீ ஏச வந்துவிட்டாயா?, எனக்கு கை







நீட்டுகிறாயா? என்று சில பெற்றோர் பிள்ளைகளை கேட்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

கடுமையாகவும் காரமாகவும் உபசரிக்கப்படும் பிள்ளையிடமிருந்து நல்ல பழக்கங்களை எதிர்பார்க்க முடியாது. தண்டிக்கப்படாமல் தன்னைக் காத்துக்கொள்வதற்காகவேண்டி சில சமயம் தன்னை நல்ல பிள்ளையாக காட்டிக்கொள்ள முயற்சிப்பான்.

உடல் தண்டனைகளை கொடுத்து பெற்றோர் பிரச்சினை தீர்ப்பதற்கு முயற்சிக்கிறார்கள் என்றால் வன்முறையை முன் உதாரணமாக பிள்ளைகளுக்கு காட்டிக்கொடுக்கிறார்கள் என்றே பொருள் கொள்ளலாம். இந்தப் பெற்றோரின் நடைமுறையினை பிள்ளைகளும் என்றோ பின்பற்றுவார்கள்.

உடல் சார்ந்த தண்டனை முறைகளை பெற்றோர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் உபயோகிக்கும் போது பிள்ளைகள் மற்றவர்களுடனான பிரச்சினைகளின்போது வன்முறையாக நடந்துகொள்ளவே முயற்சிப்பார்கள். உடல்சார்ந்த தண்டனைகள் மூலம் பிள்ளைகளை ஒரு போதும் சீர்திருத்த முடியாது. அது தற்காலிகமான ஒரு பிரதிபலனைத்தந்தாலும் மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தி நீண்டகாலத்திற்கு மிகவும் ஆபத்தான நிலையில் வாழ்வதற்கு வழிவகுக்கும்.

அடித்தால்தான் ஒரு வேலையை செய்வான் என்று சில பெற்றோர் கூறுவதை நாம் கேட்டிருப்போம். பிள்ளை அடிக்கப்படும் போது வன்முறைக்கும் அழுத்தத்திற்கும் தலைசாய தன்னை பழக்கப்படுத்திக்கொள்கிறான். ஒரு விடயத்தை அடைந்துகொள்ள அழுத்தம், அல்லது உடல்வலு பாவிக்கப்படவேண்டும் என எண்ண ஆரம்பிக்கிறான். யாராவது தனக்கு தொந்தரவாக இருக்கும்போது அவரை அடிக்கவேண்டும் என்ற எண்ணமும் சிலசமயம் அவ்வாறு செய்யவும் முற்படுவான். தொடர்ந்து அடித்து பிள்ளைகளை வளர்ப்பதால் எதிர்காலத்தில் பிழையான, சமூகம் அங்கிகரிக்காத வாழ்வு முறையை தம் வாழ்வில் ஏற்படுத்திக்கொள்ள காரணமாகக்கூட அமைந்துவிட முடியும்.

பிள்ளைகளுக்கு உடல்சார்ந்த தண்டனைகள் கொடுப்பதால் அவர்கள் பெற்றோர் மீது வெறுப்பு, விரோதம், முரண்பாடு, பகைமை போன்ற குணங்களை வளர்த்துக்கொள்வதுடன் என்றோ ஒருநாள் அவற்றை வெளிப்படுத்தவும் முயற்சிக்கலாம். திரும்பத்திரும்ப அடித்து அதட்டி வளர்க்கும் போது பிள்ளைகள் தைரியமற்றவர்களாகவும் கோழைத்தனமுள்ளவர்களாகவும் மாறவும் முடியும். அவர்களின் எண்ணங்கள், உணர்வுகள், செயற்பாடுகள், சமூக உறவுகள் போன்றன பாதிக்கப்பட்டு அடக்கப்பட்ட ஆளுமையுடையவர்களாகவும் மாறிப்போகலாம்.

உடல்சார்ந்த தண்டனை பிள்ளைகளின் நடத்தைகளில் சரியான மாற்றத்தை ஏற்படுத்த உதவாது. பயம் காரணமாக குறிப்பிட்ட கொஞ்ச நேரத்திற்கே அமைதியாக இருக்க முற்படுவர். ஆனால் செய்த தவறை மீண்டும் செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. பிற்காலத்தில் வேறு விதமான முறைகளில் அதன் தாக்கம் வெளிவர முடியும்.

தாயின் அலுமாரியிலிருந்த ஒரு தொகைப்பணத்தை 12 வயது நிரம்பிய மகன் திருடியிருந்தான். அது அவன் தந்தைக்கு அறியக்கிடைத்ததும் அவர் பிரம்பினால் கடுமையாக அவனை அடித்தார். அந்த நேரத்திலிருந்து அலுமாரியை ஏறிட்டும் பார்க்கவில்லை. நன்றாக அடித்ததனால் மகன் திருந்திவிட்டான் என்று தந்தை நம்பினார். பிரம்பால் அடித்ததிலிருந்து அவன் அலுமாரியை ஏறிட்டுப்பார்க்காததும் அலுமாரியிலிருந்த பணத்தை எடுக்காமல் விட்டதும் உண்மைதான். பிரம்பால் அடித்து திருடுவதை நிறுத்திவிட்டதை ஒரு வெற்றியாக அவனது தந்தை கருதி சந்தோசம் அடைந்திருக்கிருக்கலாம். ஆனால் வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தி அவன் தேவையை நிறைவேற்றிக் கொள்ளமாட்டான் என்பதற்கு என்ன உறுதிகொடுக்க முடியும். அவன் தாய் அவனிடம் பணம்கொடுத்து கடைக்குப்போய் பொருட்கள் எடுத்துவருமாறு சொல்லும் போது மிகுதிப் பணத்திலிருந்து சில ரூபாய்களை எடுத்துக்கொள்ளலாம். அல்லது நண்பர்களின் பணத்தை திருடலாம். ஒரு குற்றத்திற்காக ஒரு பிள்ளை தண்டிக்கப்படும் பொழுது அந்தக்குற்றத்தை அதே முறையில் மீண்டும் செய்ய முற்படமாட்டான். அவன் உள்ளம் வேறுவிதத்தில் சிந்திக்க ஆரம்பிக்கும். மாற்று வழிகளைக் கண்டுபிடித்து அந்தக்குற்றத்தை செய்ய முற்படுவான்.

ஒரு பிள்ளை தொடர்ந்து உடல்ரீதியான தண்டனைக்கு உட்பட்டால் அவன்

★ உடலைப்போன்று உள்ளமும் கடுமையாகப் பாதிக்கப்படும்

★ அவன் நடத்தைகள் வன்முறையாக வெளிப்பட ஆரம்பிக்கும்

★ கல்வியில் ஆர்வம் குறைந்து பின்தங்கிய நிலைக்கும் தள்ளப்படுவான்

★ மற்றவர்களின் அன்பையும் மதிப்பையும் அங்கீகாரத்தையும் பெற முடியாதவனாக மாறிவிடலாம்

உடல் தண்டனைகளுக்கு உட்படும் பிள்ளைகள் கூச்சம், வெட்கம், வெறுப்பு போன்ற உணர்வுகளால் பாதிக்கப்பட்டு உறக்கத்தில் மோசமான கனவுகள் காணுதல், திடுக்கிடுதல், பசியின்மை, ஒதுங்கியிருத்தல், தாழ்வுணர்வு போன்றன ஏற்பட்டு மனதால் அவதிப்படும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவான்.

---

## வாரம் ஒரு நோய்

# முள்ளந்தண்டு - மூளை வீக்கம்

முள்ளந் தண்டு - மூளை வீக்கம் என்பது ஒருவரின் முள்ளந்தண்டு மற்றும் மூளையை சுற்றியுள்ள திரவத்தில் ஏற்படும் தொற்று நோயாகும். இது மூளை-முள்ளந்தண்டுத் திரவம் அதாவது செரிபரமுள்ளிய திரவம் அல்லது CSF என்று அழைக்கப்படும்.

முள்ளந்தண்டு - மூளை வீக்கம்), சிலவேளைகளில் முள்ளந்தண்டு வீக்கம் (ஸ்பைனல் மெனின்ஜைடிஸ்) என்றும் அழைக்கப்படுகிறது.

வழக்கமாக, 2 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தண்டு - மூளை வீக்கம் நோயின் பின்வரும் அறிகுறிகள் காணப்படும்: கடும் காய்ச்சல், தலைவலி, கழுத்து விறைப்பு, இந்த அறிகுறிகள் உண்டாகி, அதிகரிப்பதற்கு, சில மணி நேரங்கள் அல்லது 1 முதல் 2 நாட்கள் எடுத்துக் கொள்ளலாம்.

முள்ளந்தண்டு - மூளை வீக்க நோயின் வேறு அறிகுறிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கலாம்:

வயிற்றில் அசௌகரியம்(குமட்டல்)

வாந்தியெடுத்தல்

பிரகாசமான வெளிச்சத்தைப் பார்க்கும் போது அசௌகரியமாக உணர்தல்

குழப்பம்

தூக்கிரை தன்மை

நோய் அதிகரித்துக்கொண்டு போகும் போது, நோயாளிகள் எந்த வயதிலிருந்தாலும் வலிப்பு வரலாம்.

குழந்தைகள் மற்றும் 2 வயது வரையுள்ள பிள்ளைகள்

குழந்தைகளில் நோய் வித்தியாசமாக இருக்கும். முள்ளந்தண்டு - மூளை வீக்க நோயுள்ள குழந்தைகளுக்கு பின்வரும் அறிகுறிகள் இருக்கலாம்:

அதிகமாக அசையவில்லை அல்லது அதிகமானதைச் செய்யவில்லை

எரிச்சல் அல்லது விபரீதமாக நடந்துகொள்ளுதல்

வாந்தி எடுத்தல்

சரியாக தாய்ப்பால் குடிப்பதில்லை


காய்ச்சல், தலைவலி, மற்றும் கழுத்து விறைப்பு போன்ற, குழந்தைகளுக்கு இல்லாத அறிகுறிகள் வளர்ந்த பிள்ளைகளுக்கு இருக்கலாம். அவர்களுக்கு இந்த அறிகுறிகள் இருந்தால், சாதாரணமான நடத்தையிலிருந்து அவற்றை வித்தியாசப்படுத்திப் பார்ப்பது கடினமாக இருக்கலாம்.

தொற்றுநோய் அதிகரித்துக் கொண்டே போகும்போது, எந்த வயது நோயாளியாயிருக்கும் வலிப்பு வரலாம். உங்கள் பிள்ளைக்கு முள்ளந்தண்டு - மூளை வீக்க நோய் இருக்கலாம் என்பதாக நீங்கள் நினைத்தால், உடனே அவனை மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள்.

உங்கள் பிள்ளைக்கு மேலே விபரிக்கப்பட்ட அறிகுறிகள் இருந்தால், உடனே அவனை மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள். கூடிய விரைவில் நோயைக் கண்டுபிடித்துச் சிகிச்சை செய்வது மிகவும் முக்கியம்.

பல வகையான பக்றீரியல் முள்ளந்தண்டு-மூளை வீக்க நோய்கள் இருக்கின்றன. அன்டிபயோடிக் மருந்துகள், சிலவகையான நோய்கள் பரவாமலும் மற்றவர்களுக்கு தொற்றாமலும் தடுக்கலாம். இதன் காரணமாக, முள்ளந்தண்டு-மூளை வீக்க நோய்க்கு எந்த வகையான பக்றீரியா காரணம் என்பதை தெரிந்து கொள்வது முக்கியம்.

முதுகுக் தண்டு-மூளை வீக்க நோய் மற்றவர்களுக்கும் பரவலாம்.




சில வகையான பக்றீரியாக்கள் முள்ளந்தண்டு - மூளை வீக்க நோய் தொற்றிக் கொள்ளும் தன்மையுடையவை. என்றால் அது மற்றவர்களுக்கும் பரவலாம். தொற்றுநோயுள்ள ஒருவரின் வாய் அல்லது மூக்கிலிருந்து வரும் சளியை மற்றவர் தொடும்போது பக்ரீரியா பரவும். முள்ளந்தண்டு-மூளை வீக்க நோய் பரவும் வழிகளுள் சில பின்வருமாறு:-


இருமல், முத்தமிடுதல், ஒரே கிண்ணத்தில் குடித்தல்.

முள்ளந்தண்டு-மூளை வீக்க நோய், சாதாரண தடிமல் அல்லது காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் போல் எளிதாகப் பரவாது. அதாவது, முள்ளந்தண்டு - மூளை வீக்க நோயுள்ள ஒருவரின் சுவாசத்திலிருந்து உங்களுக்கு முள்ளந்தண்டு - மூளை வீக்க நோய் பரவாது. தடுப்பூசிகள் சில வகையான முதுகுக் தண்டு-மூளை வீக்க நோய்களைத் தடுக்கலாம்.

முக்கிய குறிப்புகள்

முள்ளந்தண்டு-மூளை வீக்கம் என்பது மூளையில் மற்றும் முள்ளந்தண்டுப் பகுதியிலுள்ள திரவத்தில் ஏற்படும் தொற்று நோயாகும்.

முதுகுத் தண்டு-மூளை வீக்க நோயில் அநேக வகைகள் உண்டு.




பெரும்பாலும் பக்றீரியல் முதுகுத் தண்டு-மூளை வீக்க நோய்க்கு அன்டிபையோடிக் மருந்து கொடுக்கப்படுகிறது. சிலவகையான முள்ளந் தண்டு - மூளை வீக்க நோய்கள் மற்றவர்களுக்குப் பரவக்கூடும்

முதுகுத் தண்டு-மூளை வீக்க நோயுள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர்களும் அன்டிபயோட்டிக் சிகிச்சை எடுத்துகொள்ள வேண்டும்.

சிலவகையான முள்ளந்தண்டு - மூளை வீக்க நோய்களை தடுப்பூசி போட்டுக் கொள்வதன் மூலம் தடுக்கலாம்.

★★★





# அழிவுகளும், அனர்த்தங்களும் ஒரு சிந்தனை

- உஸ்தாத் எம்.ஏ.எம்.மன்ஸூர்

ஜப்பான் உலகில் பொருளாதார பலத்தாலும், அறிவு பலத்தாலும் முன்னணியில் நிற்கும் ஒரு நாடு. ஆனால் அந்த நாட்டின் உண்மை நிலை என்ன? கீழே தரும் தகவல்களை அவதானியுங்கள்.

ஜப்பானின் நிலப் பரப்பு 1,45,902 சதுர மைல், இந்த நிலப் பரப்பில் 73% மலைகள். எனவே வாழ வசதியான நிலப் பரப்பு 39,393 சதுர மைல் மட்டுமே.

உலகின் எரிமலைகளில் 10% ஆனவை ஜப்பானிலேயே உள்ளன. அதாவது 107 எரிமலைகள். ஒவ்வொரு வருடமும் 1500 நில நடுக்கங்கள். சூறாவளிக் காற்று, ராட்சத அலைகள், பனிப்புயல்கள் அடிக்கடி. மார்ச் 11 2011 ஜப்பானையே சிதறடித்த சுனாமியின் தாக்கம். பல இடங்களில் 24 அடிக்கு மேல் உயர்ந்த கடல். புகுஷிமா அணுமின் நிலையம் வெடித்தமை, 235 பில்லியன் டொலர்களுக்கு மேல் சேதம்.

தொழில் உற்பத்திக்கு தேவையான இயற்கை வளங்கள் ஜப்பானில் மிகக் குறைவு. அரிசி, கோதுமை, சோளம், சோயா என்ற எல்லாவற்றிக்கும் வெளிநாடுகளை நம்பியிருத்தல்.

இரண்டாம் உலகமகாயுத்தத்தில் உடைந்து சிதறிப் போன நாடு ஜப்பான். ஆகஸ்ட் 1945 அணு குண்டு வீச்சுக் குட்பட்ட ஹிரோஷிமா, நாகசாகி நகர்கள் நாசமாயின.

இவ்வளவும் இருந்தும் ஜப்பான் இன்று உலகில் முன்னணியில் நிற்கும் ஒரு நாடு. எப்படி இது சாத்தியமாகியது? கீழ்வரும் இரண்டு திருமறை வசனங்களையும் அவதானிப்போம்:

அல்லாஹ்தான் அவன் கட்டளைப் படி கப்பல் ஓடுவதற்காகவும், அவனது அருளைத் தேடுவதற்காகவும் கடலை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். அத்தோடு நீங்கள் நன்றி செலுத்துவீர்கள் என்பதற்காகவும் அவ்வாறு ஆக்கினான். அத்தோடு உங்களுக்கு வானங்கள், பூமியிலிருப்பவற்றை வசப்படுத்தியுள்ளான். அனைத்தும் அவனிடமிருந்தேயாகும். நிச்சயமாக இதில் சிந்திப்பவர்களுக்கு அத்தாட்சிகள் உள்ளன. (ஸூரா அல் ஜாதியா 45 12, 13)

யார் உலக வாழ்வை விரும்புகிறார்களோ அங்கே அவர்களது செயல்களுக்கான விளைவுகளை நாம் பூரணமாகக் கொடுப்போம். அவர்களுக்கு குறை வேற்படுத்தப் பட மாட்டாது. (ஸூரா ஹூத் 11:15)

இவ்விரு வசனங்களும் இரண்டு கருத்துக்களை விளக்குகின்றன:

வானங்கள் பூமியில் உள்ளவை மனிதனுக்குக் கட்டுப் பட்டுப் பணி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு ஒரு உதாரணம் கடல். அங்கு கப்பலை ஓர் விட்டுக் கடலை மனிதன் பணியச் செய்தான். கடலை நன்கு ஆய்ந்து விளங்கிக் கொண்ட போது அதனை எவ்வாறு கட்டுப்படுத்திக் கொள்வது என மனிதன் புரிந்து கொண்டான். முற்றிலும் இவ்வாறே பிரபஞ்சப் பொருட்கள் மனிதனின் கட்டுப்பாட்டில் வரக் கூடியவாறே அமைந்துள்ளன. அதனைச் சாதிக்க மனிதனுக்கு அல்லாஹ் அறிவைக் கொடுத்துள்ளான்.

மறுமையை மறந்து உலகத்திற்காக வென்றே உழைத்தாலும் அத்தகைய மனிதர்களுக்கு அல்லாஹ் உலக விளைவைக் கொடுக்கவே செய்கிறான். இதில் இறை நம்பிக்கையாளன், நம்பிக்கையற்றவன் என்ற வேறுபாடு கிடையாது.

ஜப்பான் இவ்விரு வசனங்களின் பொருளின் படி மிகச் சரியாக இயங்கியது. அதன் காரணமாக வளமற்ற நிலத்தில் பல அபாயங்களுக்கு மத்தியில் வாழ்ந்த போதும் ஜப்பான் மக்கள் உன்னத நிலையில் வாழ்கிறார்கள்.

அழிவுகள், அனர்த்தங்களின் போதெல்லாம் பௌதீக வாழ்வொழுங்கில் நாம் என்ன தவறு விட்டோம்; ஒரு முறை அழிவால் பாதிக்கப்பட்டால் அடுத்த முறை எம்மைக் காத்துக் கொள்ள என்ன செய்யலாம் என்ற சிந்தனை எமக்கு மிக அடிப்படையானது. அதாவது பௌதீக உலகை வசப் படுத்திக் கொள்ளல், கட்டுப் படுத்தி எமக்கு பணி செய்யுமாறு ஆக்கிக் கொள்ளல் எவ்வாறு என்ற அறிவு உலக வாழ்வின் போது மிக அடிப்படையானதாகும்.

உலக வாழ்வு ஒரு சோதனை. இவ்வுலகம் கஷ்டங்கள், துன்பங்களோடு ஓடும் இயல்பைக் கொண்டது. நோய்கள், செவிடு, குருடு, முடம் என்பவை போன்றதுதான் இந்த அனர்த்தங்களும், அழிவுகளும் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.




# யா அல்லாஹ்!

மௌலவி
ஐ.ஏ.காதிர் கான் (தீனி)

யா அல்லாஹ்! நீ அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். நீ படைத்தவன். நாம் படைப்பினங்கள். நீ எங்கள் இறைவன். நாம் உன் அடிமைகள்.

யா அல்லாஹ்! எங்களது தாய் தந்தையர்களின் பாவங்களை மன்னிப்பாயாக. எங்களது கணவன், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள், உற்றார் உறவினர்கள், உலக முஃமின்கள் அனைவரின் பாவங்களையும் மன்னிப்பாயாக!

யா அல்லாஹ்! நாங்கள் தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ, வேண்டுமென்றோ, திட்டமிட்டோ, மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ, இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ, சிறிதோ பெரிதோ, எப்பேற்பட்ட பாவங்களையும் உனது கருணை பார்வையால் மன்னித்து, மேலும் பாவங்கள் செய்யாதவாறு எங்கள் நஃப்ஸை பாதுகாப்பாயாக. மறுமை நாளில் எங்களை நல்லடியார்கள் கூட்டத்தில் சேர்ப்பாயாக!

யா அல்லாஹ்! உள்ளங்களை புரட்டக் கூடியவனே எங்கள் உள்ளங்களை உன் மீது திருப்புவாயாக. கண் இமைக்கும் நொடிப் பொழுதில் கூட எங்களை விட்டு பிரிந்து எங்களை தனிமைப்படுத்தி விடாதே.

யா அல்லாஹ்! நாங்கள் கேட்பதற்கு முன்பாக எங்கள் தேவைகளை நிறைவேற்றுவாயாக.

யா அல்லாஹ்! யாரெல்லாம் எங்களிடம் துஆ செய்ய கோரினார்களோ அவர்களது ஹலாலான துஆக்களை கபூல் செய்வாயாக.

யா அல்லாஹ்! எங்களது சொல்லாலோ செயலாலோ பிறர் மனதை கஷ்டம் கொடுத்திருந்தால் அதற்கு பகரமாக அவை அனைத்தையும் அவர்களுக்கு நன்மைகளாக்கி தருவாயாக.

யா அல்லாஹ்! எங்களது உறவுகளை கொண்டோ செல்வத்தை கொண்டோ எங்களை சோதித்து விடாதே.

யா அல்லாஹ்! உலக முஃமின்கள் அனைவரையும் முடிவு நாள் வரை பாதுகாப்பாயாக. உனது மகத்துவம் தெரியாத மாற்று மத சகோதர, சகோதரிகளுக்கு நேரான ஹிதாயத் வழங்குவாயாக.

யா அல்லாஹ்! எங்களுக்கும், எங்களுடன் இருப்பவர்களுக்கும் பரக்கத் செய்வாயாக. நாங்கள் செல்லுமிடம் எங்கும் வெற்றியை தந்து எங்களது எதிரிகளை தோற்கடிப்பாயாக.

யா அல்லாஹ்! எங்களை அனைத்து வித கஷ்டங்களில் இருந்தும், வேதனையிலிருந்தும், விபத்துகளிலிருந்தும், விஷஜந்துக்களிலிருந்தும், அபாயங்களிலிருந்தும், இயற்கை சீரழிவிலிருந்தும், ஜின் மற்றும் ஷைத்தானின் கெட்ட ஊசலாட்டங்களிலிருந்தும், வறுமையிலிருந்தும், கடனிலிருந்தும், பலாய் முஸிபத்துகளிலிருந்தும், எதிர்பாராத மரணத்திலிருந்தும், கண் திருஷ்டியிலிருந்தும், பாதுகாப்பாயாக.

யா அல்லாஹ்! எங்களது உணவும், உடையும், இருப்பிடமும் ஹலாலானவையாக தருவாயாக. எங்களை உனக்கு நெருக்கமானவர்களாக, உனக்கு பிரியமானவர்களாக மாற்றுவாயாக மார்க்கத்திற்காக உயிரை இழக்கும் அளவுக்கு துணிவையும், மரணத் தருவாயில் கலிமாவை மொழியும் பாக்கியத்தையும் தருவாயாக.

யா அல்லாஹ்! உலக முஃமின்கள் அனைவரையும் தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து பாதுகாப்பாயாக. எங்களை கப்ரின் அதாபிலிருந்தும், நரக நெருப்பில் இருந்தும் பாதுகாத்து மறுமையில் ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் எனும் மேன்மையான சுவர்க்கத்தை எங்களுக்கு வழங்குவாயாக.

யா அல்லாஹ்! முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நெருக்கத்தையும் எங்களுக்கு மறுமையில் வழங்குவாயாக. எங்களது ஆகுமான துஆக்களை கபூல் செய்வாயாக. இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் ''துஆ'' கேட்டு, அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக்கொள்வோமாக! ஆமீன்!

***

# ஏன் இந்த சோதனை?

ஏற்றமிக்க சமூகமாய்
வெற்றிகளையீனும் வாழ்ந்த எமக்கு
ஏன் இந்த சோதனை?

எம்மையும் ஏழுலகையும்
எழிலாய் படைத்தவன்
எல்லாம் பொதிந்திருக்கும்
ஏற்றமிகு அல்குர்ஆனில்
எடுத்தோதுகின்றான் இவ்வாறு

என் வழியை மறந்து நீங்கள்
எதிரியாம் ஷைத்தானை பின்பற்றினால்
எதிர்பாராது சோதிப்பேன்
என அச்சமூட்டி எச்சரிக்கின்றான்

ஏகனாம் அல்லாஹ்வின்
எழிலார்ந்த அருள்மறையை
ஏற்று நாம் நடக்காது
எம் இஷ்டம் போல் வாழ்ந்தோம்

எந்தம் நபி அவர்கள்
எமக்கருளிய அருளுரைகளை
எடுத்தாள மறந்து நின்றோம்

ஏகனும் அவன் தூதரும்
எம்மை நேர்வழிப்படுத்துவதற்காய்
ஏவியவைகளை பின்பற்றாது நாம்
எதையெதையோ வணக்கமென
எந்நாளும் செய்திட்டோம்

ஏற்றமாய் எமைப் படைத்தவனின்
ஏவல் விலக்கல்களை
ஏற்று நாம் நடக்கவில்லையெனில்
எக்காலத்தோடு ஓடுகின்ற வெள்ளத்தில்
எதுமற்ற காய்ந்த சருகுகளாய்
எளிதாய் அடித்துச்
செல்லப்படுவோமென
எச்சரித்த எமதருமை நபி அவர்கள்

எண்ணங்களை தூய்மையாக்கி
ஏக இறைவனுக்கு
எதனையும் இணையாக்காமல்
எல்லாம் வல்லவனை என்
எண்ணத்தில் நிலைநிறுத்தி வாழ்ந்
தால்
எவ்வித அச்சமுமின்றி
ஏற்றமுடன் நாம் வாழலாமென
ஏகனின் தூதர் எமக்கு எடுத்துரைத்தார்

- மலாய் கவி டிவாங்ஸோ

# ரமழான் கால தஃவா

- உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத்

தஃவா என்பது, இஸ்லாத்தின் அடிப்படைத் தூதை முன்வைக்கின்ற அதேநேரத்தில், அவ்வக்கால சவால்களுக்கு முகம் கொடுப்பதும் அவ்வக்கால பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கான தீர்வை வழங்குவதுமாகும். இந்த வகையில் உலக நிலவரத்தை வைத்துப் பார்க்கின்றபோது பொதுவாகவும் இலங்கை சூழலை வைத்துப் பார்க்கின்றபோது குறிப்பதாகவும் இக்கால எமது தஃவாவில் இஸ்லாத்தின் அடிப்படையான செய்தி முக்கியத்துவம் பெற வேண்டிய தேவையும் அவசியமும் இருப்பதுபோல முன்னுரிமை பெற வேண்டிய மற்றும் சில அம்சங்கள் உண்டு. அவ்வாறு முக்கியத்துவம் பெற வேண்டிய மூன்று அம்சங்களை அடையாளப்படுத்தலாம்.

ஒன்று, சமூக ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது. இரண்டாவது, இனங்களுக்கிடையான சகவாழ்வின் அவசியத்தை வலியுறுத்துவது. மூன்றாவதாக இளம் தலைமுறையினை பண்பாடு உள்ளவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் வளர்த்தெடுப்பதன் அவசியத்தை முன்வைப்பது. இம்மூன்று அம்சங்களும் எமது அடிப்படையான தஃவா முயற்சிகளோடு சேர்ந்து முக்கியத்துவம் பெற வேண்டியவையாகும்.



**சமூக ஒற்றுமை**

முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழக் கூடிய இலங்கை போன்ற ஒரு நாட்டில், பல்வேறு சவால்களுக்கும் அறைகூவல்களுக்கும் முகம் கொடுக்கின்ற இக்கால கட்டத்தில் இன்றியமையாத ஓர் அம்சம்தான் சமூக ஒற்றுமை. இஸ்லாமிய இயக்கங்கள், ஜமாஅத்துகள், அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள் அனைத்திற்கு மத்தியிலும் பரஸ்பர புரிந்துணர்வு கட்டியெழுப்பப்பட வேண்டும். அனைவரும் ஓர் அணியில் ஒரு தலைமைத்துவத்தின்கீழ் இணைந்து செயற்பட வேண்டும். இதில் எவரையும் புறந்தள்ளக்கூடாது. அரசியல் தலைமைகள், உலமாக்கள், சிவில் தலைமைகள், தஃவா சார்ந்த தலைமைகள் அனைவரையும் ஒன்றாக இணைத்துக் கொண்டு ஐக்கியமாக, ஒற்றுமையாக செயல்படுவதன் அவசியம் பரவலாக வலியுறுத்தப்பட வேண்டும். ரமழான் கால தஃவா நிகழ்ச்சிகளில் நிகூடிய முக்கியத்துவம் பெறக்கூடிய ஒரு தலைப்பாக இது மாற வேண்டும்.

**இனங்களுக்கிடையிலான சகவாழ்வு**

இது அடுத்து முக்கியத்துவம் பெற வேண்டிய முக்கிய அம்சமாகும். குறிப்பாக, இன்றைய சூழ்நிலையில் எவ்வளவு தூரம் இது முக்கியத்துவம் பெற வேண்டும் என நான் சொல்லி விளங்க வேண்டிய வசியமில்லை. ரமழான் கால தஃவாவிலே இதற்கு நியாயமான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என நினைக்கிறேன். அந்த வகையில் ரமழான் கால தஃவா நிகழ்ச்சிகளில் சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கோடு பரவலான நிகழ்வுகள் இடம்பெற வேண்டிய தேவை அவசியம் இருக்கிறது. குறிப்பாக, இந்த கருப்பொருள் தொடர்பாக முஸ்லிம் அல்லாதவர் மத்தியில் சில வேலைத் திட்டங்களை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ரமழான் காலத்தை இதற்குப் பொருத்தமான காலமாக நாம் பயன்படுத்த முடியும்.

அதேவேளை, முஸ்லிம்கள் மத்தியில் நாம் மேற்கொள்ள வேண்டிய சில பணிகளும் இருக்கின்றன.

முஸ்லிம் அல்லாதவர் மத்தியில் மூன்று அம்சங்களை முக்கியத்துவப்படுத்த வேண்டும்.

01. முஸ்லிம்கள் பற்றி நிலவுகின்ற தப்பபிப்ராயங்களை களைவதற்கான முயற்சி

02. இஸ்லாம், முஸ்லிம்கள் பற்றி முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை அடையாளம் கண்டு களைவதற்கான முயற்சி.

03. சமூக நல்லிணக்கம் பற்றி, பிற சமயத்தவரோடு நல்லுறவோடு வாழ்வது பற்றி இஸ்லாம் சொல்கின்ற உடன்பாடான போதனைகள் பெரும்பான்மை சமூகத்திற்கு முன்வைக்கப்படும் முயற்சி.

அடுத்து இந்த நாட்டின் மேம்பாட்டுக்காக முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் எத்தகைய பங்களிப்புகளை செய்து வந்திருக்கிறார்கள் என்பதும் முன்வைக்கப்பட வேண்டும்.

அடுத்து முஸ்லிம்கள் மத்தியில் சமூக நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் பற்றி பரவலான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதற்கு ரமழான் காலம் மிகப் பொருத்தமான காலம். பரவலான தஃவா நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்ற காலம். மஸ்ஜித் பயான்கள், ஹதீஸ் மஜ்லிஸ்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், மாநாடுகள், ஒன்றுகூடல் நிகழ்ச்சிகள், குத்பாக்கள் அதேபோன்று எமது பத்திரிகை வானொலி, இணையதளம், சமூக ஊடகம், இலத்திரனியல் ஊடகம், அச்சு ஊடகம் மட்டுமன்றி ஏனைய ஊடகங்களுக்கூடாகவும் பிற சமயத்தவர்களோடு பிற இனங்களோடு இலங்கை போன்ற பல்சமய மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் நாம் எவ்வாறு நல்லுறவை வளர்த்துக் கொண்டு வாழ வேண்டும் என்ற கருத்து பரவலாக வலியுறுத்தப்பட வேண்டிய தேவை இந்த கால கட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக இருக்கிறது.

குறிப்பாக, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுடைய ஒத்துழைப்புக்கும் ஒருங்கிணைப்புக்குமான அமைப்பு வெளியிட்டுள்ள இலங்கை வாழ் சமூகங்களுக்கிடையிலான சக வாழ்வு தொடர்பான பிரகடனத்தில் முஸ்லிம் அல்லாதோருடனான உறவின்போது நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டிய சில அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை கடைப்பிடிப்பதன் மூலம் சமூக நல்லிணக்கத்தைத் தோற்றுவிப்பதற்கான நல்லதொரு சூழல் இலங்கையில் உருவாகும்.

**இளம் தலைமுறையினரை வழி நடத்தல்**

இளம் தலைமுறையினை ஒழுக்க ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் வழிநடத்துவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும் ரமழான் கால நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும்.

இதில் குறிப்பாக, இளைஞர், யுவதிகள் மற்றும் சிறார்களைக் குறிப்பிட்டாலும் பொதுவாக வியாபாரிகள், துறைசார் நிபுணர்கள், புத்திஜீவிகள் மட்டத்திலும் அவரவர் துறை சார்ந்த தர்மங்களை, பண்பாடுகளை, விழுமியங்களைப் பேணுகின்ற வகையில் பரவலான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

ரமழான் காலத்தில் வழமையான பாரம்பரிய சர்ச்சைகளை அலட்டிக் கொண்டிருக்காமல் அவற்றைத் தவிர்த்து, மேற்கூறிய மூன்று அம்சங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதே நேரம், வழமைபோல ஆன்மிகம், வணக்க வழிபாடுகள் சார்ந்த அம்சங்கள் உரிய முக்கியத்துவத்தை பெறத் தவறக்கூடாது.

பொதுவாக ரமழான் காலத்தின் தஃவா நிகழ்ச்சிகள் பல மடங்கு அதிகமாக இடம்பெறுகின்றன. பள்ளிவாசல்களில் நடைபெறுகின்ற நாளாந்த பயான்கள், பல மணி நேர இஸ்லாமிய நிகழ்ச்சிகள், இணையதளம், பேஸ்புக் மற்றும் முஸ்லிம் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஏனைய பருவ வெளியீடுகளிலும் ஏராளமான இஸ்லாமிய அம்சங்கள் இடம்பெறும். இவை தவிர இஸ்லாமிய அமைப்புகள் நடத்துகின்ற இஸ்லாமிய நிகழ்ச்சிகள் போன்ற அனைத்தினூடாகவும் இவ்வாறான அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது எல்லா வகையிலும் பொருத்தமானது இன்றியமையாததும்கூட.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று தஃவா என்பது அடிப்படையான இஸ்லாத்தை முன்வைப்பது போல் அவ்வக்கால சவால்களுக்கு முகம்கொடுப்பதும் அவ்வக்கால பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதுமாகும் என்பதனை மீண்டும் நினைவுபடுத்துகின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ் ஊடாக மக்கள் இதன் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்ள வழி செய்வது போல அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் ஏனைய முஸ்லிம் அமைப்புகள் ஒன்றாக இணைந்து இந்த ரமழான் காலத்து தஃவா நிகழ்ச்சிகளை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக ஒரு வழிகாட்டலை உலமாக்கள், தாஇகள் உட்பட இஸ்லாமிய இயக்கங்கள், அமைப்புகள், மீடியாக்கள் அனைத்திற்கும் வழங்க வேண்டும். இவ்வாறான விடயங்களுக்கு அழுத்தம் கொடுத்து ரமழான் கால தஃவா நிகழ்ச்சிகளை அமைத்துக் கொள்வது நல்லது என்பது வலியுறுத்தப்படுமாயின் இம்முறை ரமழானை விளைத்திறன் மிக்கதாகவும் விளைதிறனாகவும் அமைத்துக்கொள்ள முடியும் இன்ஷா அல்லாஹ்.

# கவிக்கோவின் கலை இலக்கிய சமூகப்பணிகள் ஒரு கண்ணோட்டம்

## கடந்த வெள்ளியன்று காலமான கவிக்கோ அப்துர் ரஹ்மான் நினைவாக



கலாபூஷணம் இலக்கிய வாரிதி மருத்துவக்
கலாநிதி தாஸிம் அகமது
(ஸ்தாபகத் தலைவர் வலம்புரி கவிதா வட்டம் – கொழும்பு)

1960 களில் தமிழ்க் கவிதை மூலம் இலக்கியப் பிரவேசம் செய்த கவிக்கோ அவர்கள் பால்வீதி (1974) கவிதைத் தொகுதியின் மூலம் ஒரு சோதனைப்படைப் பாளியாக தன்னைக் காட்டிக் கொண்டார். தமிழில் ஹைகூ, கஜல் ஆகிய பிற மொழிக் கவிதைகளை அறிமுகம் செய்ததிலும் பரப் பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவராவார்.

பன்மொழிப் புலமை வாய்க்கப் பெற்ற தனால் தமிழ்க் கவிதைகளில் புதிய வடி வங்களைக் கொண்டு வந்தவர். வாசகப் பரப்பில் இதனால் அதிகம் அதிகம் நேயர்க ளைத் தமதாக்கிக் கொண்டவர் வாணியம் பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். விரிவுரை யாளர்,பேருரையாளர், பேராசிரியர் எனப் படிப்படியாக உயர்ந்து 20 ஆண்டுகள் தமிழ்த் துறையின் தலைவராகப் பணியாற் றியவர். எழுதிய நூல்கள் 42, கவிதைத் தொகுப்புகள் 13,(பால்வீதி தொடக்கம், பாலை நில வரை)

பாலைநிலா நபிகள் நாயகத்தின் வரலாறு கூறும் காவியமாகும். முன்னோட்டப்பிர திவில் நாம் வழமையாய் அறிந்திராத சில தகவல்களை கவியாக்கம் செய்துள்ளார். நுட்பமாக எழுதப்பட்ட அக்காவியம் முழுமையாக வெளிவந்தால் அதன் சிறப்பு விளங்கும்.

முஸ்லிம்களின் இசைப்பாடல் மரபுகளை உலகறியச் செய்யும் முனைப்பில் துணிந்து செயல்பட்டு வருபவர் கவிக் கோ. தாகூரின் இத்ரா (2005) எனும் மொழி பெயர்ப்பு நூலையும்,புதுக்கவிதையில் குறியீடு (1989) கம்பனின் அரசியல் கோட்பாடு- (1990) ஆகிய ஆய்வு நூல்களையும் வெளியிட்டு, குணங்குடியார் பாடற்கோ வையைப் பதிப்பித்துள்ளார். 15க்கு மேல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதி 50க்கு மேல் ஆய்வுச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி யுள்ளார். மே 2009 முதல் 2011 வரை தமிழ் நாடு வக்ஃப்வாரியத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

### கவிக்கோவின் சமய நல்லிணக்க செயற்பாடுகள்

பாரத நாடு பல சமய நெறிகளைப் பின்பற்றும் மக்களைக் கொண்டது. சைவம், சமணம், வைணவம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் போன்ற சமய நெறிகளில் தமிழ் இலக்கியப் படைப்புகள் உள்ளன. இம் மதங்களின் தொடர்ந்த ஈடு பாடும் தேடலுடன் கூடிய ஆழ்ந்த அறிவும் கொண்டவராகத் திகழ்பவர் கவிக்கோ அவர் கள். அதே போன்று புராண இதிகாசங்களை யும் கசடறக் கற்றுத் தேர்ந்தவர் இவர். சமய ஞான இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்ற வர். குறிப்பாக திருமூலர்:, குணங்குடியார், பீர்முகம்மது அப்பா, மஸ்தான் சாகிபு போன்ற ஞானிகளின் பாடல்களையும் அவர்தம் இறை நேச ஈடுபாடுகளையும் மக்கள் மத்தியில் எடுத்துரைப்பதன் மூல மும், வேத புராணங்களின் சொற்பொழிவு மூலமும் மத நல்லிணக்கத்தை தமிழகத்தில் பரப்பக்கூடிய ஆற்றலும் மக்கள் அபி மானமும்; உடையவராக கவிக்கோ விளங் குகிறார்.

ஒரு முறை இலங்கை இராமகிருஷ்ணமி ஷனில் ஏற்பாடாகி இருந்த சிலப்பதிகாரத் தொடர் சொற் பொழிவைத் தனியொரு வராக எட்டு நாட்கள் சொற் பொழிவாற்றி பிரமிப்பூட்டிய சாதனையாளர் கவிக்கோ அவர் கள்.



கொழும்புத் தமிழ்ச் சங்கத் தில் இலங்கை கம்பவாரிதி அவர்களின் தொடர் சொற் பொழிவு 2014 மேமாதம் 15,16,17,18 ஆகிய நான்கு தினங்களாக நடைபெற்றது. நானும் அதில் கலந்து கொண்டேன். சமயம்சார் தலைப் புகளாக மாணிக்கவாசகர் பற்றியும் பெரிய புராணம் சேக்கிழார் பற்றியும் கம்பவாரிதி உரையாற்றுகையில் இந்து சமயத்தை மிக மிக ஆழமாகவும் தெளிவாகவும் அறிந்து வைத்திருக்கும் அறிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் என்று மண்டபம் நிறைந் திருந்த மக்கள் மத்தியில் கூறும்போது உண்மையில் நான் என்னை மறந்தேன். ஏனெனில் எனது மானசீகக் குரு கவிக்கோ அப்துல் ரகுமான் ஆவார்.

### கவிக்கோவும் தமிழும்

முத்தமிழ் சித்து நிறைந்த வித்தகர் கவிக்கோ அவர்கள் கவிக்கோ தமிழுக்குக் கிடைத்த வரம்தமிழனின் கவுரவம் என்று பலரும் பாராட்டும் தகுதியும் வேறு எவ ரிடமும் இல்லா தனித் தன்மையும் கொண் டவர் கவிக்கோ. சொல் புதிது சுவை புதிது சோதி மிகு நவ கவிதை புதிது என்ற பார தியின் பாடுபொருளைப் போல் கவிக்கோ தமிழில் புதிய புதிய பரிசோதனைகளை அறிமுகப்படுத்தியவர். அதற்கு அவரது பன் மொழிப் புலமையும் காரணம் எனலாம். ஆங்கிலம் உருது சமஸ்கிருதம் போன்ற இன்னோரன்ன மொழிகளின் பயிற்சியும் தேர்ச்சியும் தமிழுக்குப் புதிய வடிவங்க ளைக் கொண்டு வர உதவின.

கவிக்கோவின் எழுத்துக்கள் (கவிதை, கட்டுரை, ஆய்வுரை, நூல் நயவுரை, அரங்கியல், மொழிபெயர்ப்பு போன்ற வை) தமிழில்பல புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளன. ஆதாரமாக அவற்றை அவரது படைப்புகள் பற்றிய ஏனையவர்களின் ஆய் வுகளுக்குள் நுழையும் போது நாம் அறிந்து கொள்ளலாம். அவரது படைப்புலகம் அலாதியான அனுபவங்களைத் தரவல்லது. கவித்துவமும் செழுமையுமிக்க சொல்லாட் சியுடன் கூடிய இருசீர்க்கவிதைகள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இறைவனைத் தேடும் இலக்கிய ஞானி கவிக்கோவின் படைப்புக்களுள் நான் படித்தவற்றுள் பிடித்தவைகள் ஏராளம் அவற்றுள் கவிக்கோவின் மூன்று கவிதைகள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அக்கவிதை கள் மூன்றினுள்ளும் இறைவனைத் தேடி திருப்தியடையாத இறைவனின் படைப் பாக அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். அக்கவிதைகள் தமிழின் இறுக்கச் சுருக்க வெளிப்பாட்டுக்கு அரிய எடுத்துக்காட் டாக இருக்கின்றன. ஒரு கவிதை 1999ம் ஆண்டு சென்னையில் இஸ்லாமிய இலக்கி யக்கழகம் நடத்திய அகில உலக இஸ்லாமி யத் தமிழ் இலக்கிய மாநாட்டு சிறப்பு மலரில் வெளிவந்த திரியிலே உனைத் தீபமாய் ஏற்றுவாய் (1999 சி றப்புமலர் - பக் 1) அடுத்த கவிதை 2002 ஒக்டோபர் மாதம் இலங்கையில் கொழும் பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டுச் சிறப்பு மலரில் வெளி வந்த சோதி வீதி (பக் 257) மூன்றாவது கவிதை 2007இல் சென்னையில் நடை பெற்ற 7வது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டுச் சிறப்பு மலரில் இடம்பெற்ற ஒன்றினாமல் ஒன்றுமில்லை எனும் தலைப்பில் வெளிவந்தது.

இம்மூன்று கவிதைகளுக்குள்ளும் அவர் இறைவனைத் தேடும் பாங்கில் என் மனம் ஈர்க்கப்பட்டு நானும்

(15 ஆம் பக்கம் பார்க்க)

---

# உடல் பருமனா? உணவில் இருக்கு தீர்வு



ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள்தான் முக்கியம். கொழுப்பு, கார்போஹைட் ரேட், புரதங்கள், விட்ட மின்கள், தாதுஉப்புக்கள், நார்ச்சத்து, நீர்ச்சத்து போன்ற அனைத்தும் நிறைந்த சமச்சீர் உணவுகள்தான் உடலுக்கு அவசியம். எனவே, மூன்று வேளை உணவில் இவை அனைத்தும் சமச்சீராக இருக்கிறதா என்பதை உறுதி செய்யுங்கள்.

இன்று பெரும்பாலான வீடுகளில் தினசரி மூன்று வேளையும் அரிசி உணவு களையே உண்கிறார்கள்.

உடல் உழைப்பு இல்லாமல் கார்போஹைட்ரேட் நிறைந்த அரிசி உணவுகளையே உண்ணும்போது உடலில் தேவையற்ற கொழுப்பு உருவாகி, தொப்பை ஏற்ப டுகிறது. எனவே தினமும் மூன்று வேளையும் அரிசி என்பதை சிறிது மாற்றலாம். சிறுதானியங்களை உண வில் சேர்ப்பது நல்லது. சி றுதானியங்களில் புரதங்கள், விட்டமின்கள், நுண்ணூட் டச்சத்துக்கள் அதிகம் என்ப தால் சமச்சீரான மெனுவை உருவாக்க சிறுதானியங்கள் உதவும்.

செரிமானம்தான் உடல் ஆரோக்கியத்தின் முதல்படி. எனவே உங்கள் உணவில் செரிமானத்தை மேம்ப டுத்தும் உணவுகள் இருக் கட்டும். நார்ச்சத்து நிறைந்த பழங்கள், காய் கறிகள் உடலில் உள்ள தேவையற்ற கழிவை வெளியே கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மேலும், நார்ச்சத்து கலோ ரியே இல்லாதது. சாப்பிட் டால் பசியுணர்வும் நீங்கும். எனவே, இயன்றவரை நார்ச்சத்து நிறைந்த உணவு களை உடலில் சேருங்கள். தயிர் செரிமானத்தின் நண் பன். தயிரில் புரோபயாட் டிக் எனப்படும் உடலுக்கு நன்மை செய்யும் பாக்டீரியா நிறைந்துள்ளன. இதனால், செரிமான மண்டலம் மேம்ப டும். நாள் ஒன்றுக்கு சராசரி யாக இரண்டு முதல் மூன்று லீட்டர் தண்ணீர் பருக வேண்டியது அவசியம்.

# கூந்தலுக்கு எண்ணெய் அவசியம்...



கூந்தல் உலர்வதைத் தவிர்த்து, பாதுகாப்பு கொடுத்து கூந்தலை பலப்படுத்து கிறது எண் ணெய்.

தலையில் எண்ணெய் தேய்க்கும் பழக் கம் நம்மிடையே தொன்று தொட்டு இருந்து வருகிறது. பல ஆயிரம் ஆண்டுக்கு முன்பும் தலைக்கும், உடம்புக்கும் எண் ணெய் தேய்க்கும் பழக்கம் இருந்ததற்கான வரலாறும் உள்ளது.

தேங்காய் எண்ணெய் மற்றும் நல்லெண் ணெய் இந்த இரண்டு எண்ணெய்களுமே தலைக்கு தேய்ப்பதற்கு சிறந்தவை யாகும்.

நல்லெண்ணெய் மற்றும் தேங் காய் எண்ணெய்யில் கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம் மற்றும் இரும்புச்சத்து உள்ளது. நல்லெண்ணெயில் உள்ள விட்டமின் ஈ முடி சிதைவதை தடுக்கிறது.

முடி செம்பட்டையாக உள்ள வர்கள் நல்லெண்ணெய் தேய்த் தால் செம்பட்டை குறைய வாய்ப்பு உள்ளது. பொடுகுள்ளவர்களுக்கு எண் ணெய் தேய்த்தால் அரிப்பு குறையும்.

# ஷோர்ட் பிரட் குக்கீஸ்

### தேவையான பொருட்கள்

கோதுமை மா - 1 கப் ,பட்டர் - 1/2 கப், ஐசிங் சுகர் - 1/2 கப் ,வெனிலா எசென்ஸ் - 1 தேக்கரண்டி.

### செய்முறை

பட்டரை பீட்டரால் நன்கு அடித்து, அதனு டன் ஐசிங் சுகர் மற்றும் வெனிலா எசென்ஸ் சேர்த்து மீண்டும் நுரைக்க அடிக்கவும். இப்போது கோதுமை மாவை சேர்த்து மெதுவாக பிசைந்து சப்பாத்தி மா பதத்திற்கு கொண்டு வரவும். பிசைந்த மாவை 30 நிமிடங்கள் குளிர்ப்சாதனப்பெட்டியில் வைக்கவும். 30 நிமிடங்களுக்கு பின் கோதுமை மா தூவி 1/4 இன்ச் தடிமன் சப்பாத்தியாக தேய்த்துக் கொள்ளவும். விருப்பமான வடிவத்தில் கட் செய்யவும். பேக்கிங் டிரேயில் 1 இன்ச் இடைவெளி விட்டு பிஸ்கெட்டுகளை அடுக்கி வைத்து, 170 டிகிரி செல்சியஸ் ப்ரீ ஹீட் செய்யப்பட்ட அவனில், 10 நிமிடங்கள் 170 டிகிரி செல்சி யஸில் பேக் செய்து ஆறிய பின்பு எடுத்து உண்ணவும்.





பா.மலரம்பிகை

# மகளிர் மட்டும்

## பெற்றோரின் சண்டை குழந்தைகளை பாதிக்கும்



கணவன் மனைவி சண்டை விட்டு கொள்ளும் போது அதிகமாக பாதிக்கப்படு வது குழந் தைகள் தான். அம்மா அப்பா ஏன் இப்படி சண்டை போடுகி றார்கள். ஏன் எல்லா அப்பா அம்மா மாதிரியும் நம்ம அப்பா அம்மா இல்லையே என ஏங்கி தவிப்பார்கள்.

பெற்றோர்கள் விவாகரத் துக்கு பின் தாய் அல்லது தந்தையுடன் அனுப்பி வைக்கப்படுகின்றனர். அப்போது கட்டாயம் கற்றுவிட்டார நபர்களால் அவர்களது மனம் புண்படுத் தப்படுகிறது. குழந்தையின் மனதில் பல குழப்பங்கள் தனது குடும்பத்தை பற்றி ஏற்படும்.

அது குழந்தைக்கு மன அழுத்தத்தை தரும். இத னால் குழந்தைகள் தனது வாழ்வினை எதிர்கொள் வதே சிரமமாக அமையும்.

---




**நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி**

ரமழான் முபாறக் பரிசு மழை

| போட்டி - 01 | போட்டி - 02 |
|---|---|
| (திங்கள் – வெள்ளி) | (வெள்ளிக்கிழமை) |
| 1ஆம் பரிசு : உம்ரா போதி<br>2ஆம் பரிசு : மடிக் கணனி<br>3ஆம் பரிசு : கணனி<br>22 ஆறுதல் பரிசுகள் | கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும் |

### போட்டி நிபந்தனைகள்

- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜுலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியான அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி - ஜுலை 15, 2017

1. ரமழான் மாதத்தின் சிறப்பு குறித்த 02 ஹதீஸ்களைக் தருக?
2. 'திருமறையின் தோற்றுவாய்'எனக் குறிப்பிடப்படும் சூரா எது?
3. ''ரோம அரசு வீழ்ந்து விட்டது'', ''பாரசீக அரசு வீழ்ந்துவிட்டது''என நபி (ஸல்) எச்சந்தர்ப்பத்தில் கூறினார்கள்?
4. ரமழானுக்கு அடுத்த படியாக உள்ள சிறப்பு நோன்பு எது?
5. நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்நாளில் எத்தனைமுறை ஹஜ் செய் தார்கள்? அதன் ஆண்டினையும் தருக?

போட்டி 2

அனாதைகளின் மக்களுக்கு உதவுவதும் இஸ்லாமும்

நவமணி **போட்டி - 10**
**09.06.2017 - வெள்ளிக்கிழமை** நவமணி

பெயர் :...............................................

முகவரி :...............................................

தொலைபேசி :...............................................

தே.அ.அ. இல.:...............................................

கையொப்பம் :...............................................

Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரித் - 0772604964, அஷ்ஷெய்க் றிஷாத் 077 2415415

## பேச்சுவார்த்தை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

புனையப்பட்ட கட்டுக் கதைகள் ஊடாக கட்டார் தேசத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்தி, அதன் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்புக்கள் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நெருக்கடிகளுக்கான உண்மையான காரணங்கள் இருந்திருப்பின், வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் கூட்டங்களில் கலந்துரையாடப் பட்டிருக்க வேண்டும், ஜி.சி.சி. யின் கடைசி அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த பிரச்சினைகள் தொடர்ப்பில் எதுவும் பேசப் படவில்லை. குறிப்பாக அண்மையில் ரியாத் நகரில் நடைபெற்ற அரபு-அமெரிக்க உச்சி மாநாட்டில் கூட இந்த பிரச்சினைகள் தொடர்ப்பில் சுட்டிக் காட்டப் படவில்லை.

இணைய திருடர்கள், கட்டாரின் உத்தியோகப் பூர்வ செய்தி தளத்தில் அத்து மீறி நுழைந்து கட்டார் தேசத்துக்கு எதிராக பரப்புரை செய்த புனையப்பட்ட செய்தியை தொடர்ந்தே எமது நாட்டுக்கு எதிரான வளைகுடா நாடுகளின் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. எனினும் அந் நாடுகளுக்கு எதிராக கட்டார் அரசு எந்த விதமான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இந்த நெருக்கடிகள் தொடர்ப்பில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்த இருந்த அமீர் அஷ் ஷேய்க் தமீம் பின் ஹமத் ஆல் தானி, பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப் படவேண்டும் என்பதற்காக, குவைத் அமீர் அஷ் ஷேய்க் சபாஹ் அஹ்மத் அல் சபாஹின் வேண்டுகோளுக்கு இணங்க தனது உரையை பிற்போட்டார்.

ஒருதலைப் பட்சமாக மேற்கொள்ளப் பட்டுள்ள இந்த நடவடிக்கைகள், வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளில் வசிக்கும் மக்களை பிணைக்கும் குடும்ப உறவுகளில் பாரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. எனவே இந்த பிரச்சினைகள், ஒருவர் மற்றவரின் அபிப்பிராயங்களை மதித்து ஓரே மேசையில் அமர்ந்து பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமாக தீர்க்கப் பட வேண்டும் என மேலும் கட்டார் அமைச்சர் வலியுறுத்தினார்.

இது தொடர்ப்பில் அநேகமான சகோதர மற்றும் நட்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் பேசப் பட்டது, அவர்கள் அனைவரும் இந்த பிரச்சினைகளை சுமுகமாக தீர்ப்பதற்காக தமது பங்களிப்பினை நல்குவதாக உறுதி அளித்தனர்.

அரபு உலகம் பாரிய சவால்களையும், யுத்தங்களையும் எதிர்நோக்கியுள்ளன. பயங்கர வாதத்தின் காரணமாக பாரிய அளவில் உயிர் இழப்புக்களை நாம் சந்தித்துள்ளோம். யமன், சிரியா, லிபியா உள்ளிட்ட நாடுகள் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றன. இந்நிலையில் இந்த சவால்கள் எம்மை ஒற்றுமைப் படுத்துவதை தவிர்த்து, வளைகுடாவின் ஒரு நாட்டுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பில் நாம் ஆச்சரியம் அடைகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வளைகுடா மக்கள் ஓரே கலாச்சாரம் மற்றும் குடும்ப உறவுகள் மூலம் பின்னிப்பிணைந்துள்ளனர். இந்நிலையில் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் கட்டார் மீது தனது மேலாதிக்கத்தை செலுத்தி, அதன் உள் விவகாரங்களில் தலையிடும் செயலை அங்கீகரிக்க முடியாது.

பிராந்திய நாடுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மூலம் கட்டார் பாதிப்படையாமல் அடிப்படை வளங்களை வழங்குவதற்கான மற்றும் நாட்டு மக்களினதும், இங்கு தொழில் புரிவோரினதும் இயல்பு வாழ்கை வழமைபோன்று இயங்குவதற்கும், கட்டார் அமீரின் ஆலோசனைக்கு இணங்க மூலோபாய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன எனவும் கட்டார் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அமெரிக்கா மற்றும் ஏனைய மேற்கத்திய நாடுகளில் இருந்து சில வளைகுடா நாடுகளின் தூதுவர்கள் ஊடாக அண்மைக் காலமாக கட்டார் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப் படுகின்ற முரண்பாடுகளை தூண்டுகின்ற மற்றும் நாட்டின் பெயரை களங்கப் படுத்துகின்ற ஊடக பிரச்சாரங்கள் தொடர்ப்பில் தனது கவலையை தெரிவித்த கட்டார் அமைச்சர், இது ஜி.சி.சி.யின் அடிப்படை சாசனம் மற்றும் சமூக ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணான செயற்பாடாகும் எனவும் சுட்டிக் காட்டினார்.

பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கல் உள்ளிட்ட கட்டார் தேசத்திற்கு எதிரான பல்வேறு ஊதிப்பெருப்பிக்கப்பட்ட போலி குற்றச் சாட்டுக்கள் மேற்கத்திய நாடுகளில் உள்ள வளைகுடா நாடுகளின் தூதுவர்கள் ஊடாகவே அண்மைக் காலமாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## மருதானை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

த பேர்கர் கோர்ணர் என்ற ஹோட்டல் கடந்த ஒரு வாரகாலமாக மூடப்பட்டிருந்த நிலையில், திடீரென தீப்பற்றி எரிந்ததாக அயலவர்கள் தெரிவித்தனர்.எனினும், கேஸ் சிலிண்டர் வெடிப்போ அல்லது மின்சார கசிவு ஏற்பட்டிருக்கவில்லை என ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான ஹோட்டலுக்கு அருகில் 12.30 மணியளவில் சந்தேகத்திற்கு இடமாக 3 இளைஞர்கள் நின்றமையும், இவ் வர்த்தக நிலையத்திற்கு அருகில் நடமாடியதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த ஹோட்டலில் இருந்து தீ பரவலாக பரவத் தொடங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த தீயணைப்புப் படையின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது.

மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கவிக்கோவின்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எதிலும் எங்கும் இறைவனைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அக் கவிதைகள் மூன்றும் என்னுள் எப்பொழுதும் இருந்து கொண்டு என்னை அனுதினமும் இறை தியானத்தில் ஈடுபட வைத்துக் கொண்டிருக்கின்றன.

கவிஞர் அப்துல் ரகுமானின் படைப்புகள் மெய்மையியல், தொன்மம், படிமம் போன்ற கூறுகளை அடக்கியிருக்கின்றன. இந்து மதத்தத்துவம், சூஃபித் தத்துவம் ஜென் தத்துவம்,இஸ்லாமியத் தத்துவம் என்று தன் மதங் கடந்த பார்வையில் இன்று கவிஞர்களின் அரசனாக கவிக்கோவாகத் திகழ்கிறார் என்று க. வடிவுக்கரசி கூறி மகிழ்கிறார். (அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஏழாம் மாநாட்டு சிறப்புமலர் - 2007 - பக் 228) அவர் மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர்.புதுக் கவிதையின் மலர் பார்த்தவர் எனப் புகழாரம் சூட்டப்பட்டவர். இவருக்குக் கிடைத்த ஏராளமான விருதுகள் இவரால் விருதுகள் பெற்றன.

பழந்தமிழ் இலக்கியத் தேடல், பக்தி இலக்கிய ஈடுபாடு ஞான இலக்கிய ஞானம், மேல்நாட்டுப்பிற மொழி இலக்கிய ஒப்பீடு, மொழி பெயர்ப்பு இலக்கியம், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவுள்ள இணையில்லா இமயமாய் கவிக்கோ அவர்கள் திகழ்கிறார். இப்பேரறிஞருடன் பழகக் கிடைத்ததும், அவரைப் படிக்கக் கிடைப்பதும் அவர் பற்றி எழுதக் கிடைத்ததும் எனக்குக் கிடைப்பதும் நான் பெற்ற பேறாகும்.

## சம்பியன் கிண்ண...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தக்கவைத்துக் கொண்டுள்ளது. அவ்வணி பங்குபற்றிய முதல் போட்டியில் பாகிஸ்தான் அணியை 124 ஓட்டங்களால் வீழ்த்தியதுடன், வியாழக்கிழமை(08) இலங்கையுடனான போட்டியில் வெற்றிபெறும் பட்சத்தில் அவ்வணி அரையிறுதிக்கு நேரடியாகத் தகுதிபெறும். எனினும், சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் உலகின் முதல் நிலை ஒருநாள் அணியான தென்னாபிரிக்காவுடன் புதன்கிழமை(07) நடைபெற்ற போட்டியில் டக்வர்த் லூவிஸ் முறைப்படி பாகிஸ்தான் அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கான இடத்தை உறுதிசெய்துள்ளது.எனவே அவ்வணி எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள பி பிரிவின் இறுதி லீக் ஆட்டத்தில் இலங்கை அணியை வீழ்த்தினால் அரையிறுதிக்கு நேரடியாகத் தெரிவாகும் அதேவேளை, இந்தியாவுடன் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றால் திகரப் புள்ளிகள் படி அரையிறுதிக்குத் தெரிவாகும் அணிகள் தீர்மானிக்கப்படும். இந்திலையில், இலங்கை அணி ஏற்கனவே தமது முதல் போட்டியில் தென்னாபிரிக்காவிடம் தோல்வியைத் தழுவியதுடன், இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணியுடன் நடைபெறுகின்ற 2 போட்டிகளிலும் வெற்றிபெற்றால் மாத்திரமே அவ்வணி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும். எனவே பி பிரிவின் பெரும்பாலும் இந்தியாவுடன் தென்னாபிரிக்கா அல்லது பாகிஸ்தான் அணிகளில் ஏதாவதொரு அணி அரையிறுதிக்குத் தகுதிபெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது.எனினும், இன்று(09) முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரின் கடைசி 4 லீக் ஆட்டங்களுக்கும் மழை குறுக்கிட்டால் நிச்சயம் அரையிறுதி வாய்ப்பை எதிர்பார்த்துள்ள அணிகளுக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை கொடுக்கும் என்பதுடன், திகரப் புள்ளிகள் காரணமாக பின்னடைவை எதிர்நோக்கியுள்ள அணிகளுக்கு இது வரப்பிரசாதமாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்திலை இம்முறை சம்பியன் கிண்ண போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி 14ஆம் திகதி கார்டிப்பிலும், 2ஆவது அரையிறுதிப் போட்டி எட்ஜ்பெஸ்டனிலும் நடைபெறவுள்ளதுடன், இறுதிப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி கென்னிங்டன் ஓவல் மைதானத்திலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சகல சமூகத்தாலும் மதிக்கப்பட்ட தலைவர் அலவி மௌலானா



மேல் மகாண ஆளுநராகவும் அமைச்சராகவும் தொழிற்சங்கங்க தலைவராகவும் பணிபுரிந்த மர்ஹூம் அஷ்ஷெய்கு அலவி மௌலானாவின் முதலாண்டு நினைவு தினம் இடம்பெறுவதையிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

இந்நாட்டில் சகல துறைகளிலும் முன்மாதிரியாக திகழ்ந்த ஒரு அரசியல் தலைவராக அலவி மௌலானாவை குறிப்பிடலாம். சமய விடயங்களில் உள்நாட்டு வெளிநாட்டு மார்க்க பெரியார்கள் உலமாக்கள் மற்றும் அனைவராலும் கௌரமவாக மதிக்கப்பட்டார். சுன்னத் ஜமாஅத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டார்.

தொழிலாளர் வர்க்கத்திற்காக என்றும் குரல் கொடுத்த அவர் ஒருமுறை சிறைவாசமும் சென்றார். இறக்கும் வரை நடைபெற்ற ஒவ்வொரு மேதினத்திலும் தனது வயது முதிர்ச்சியையும் பார்க்காது ஊர்வலமாக சென்றதை பலர் இன்றும் நினைவு கூருகின்றனர். முஸ்லிம் சமூகம் பிரச்சினைகளை எதிர்கொண்ட போது குறிப்பாக பலஸ்தீன்,அல்அக்ஸா தொடர்பாக போராட்டங்களை முக்கிய பங்கு வகித்தார். மர்ஹூம் நியாஸ் மௌலவியும் அவருக்கு துணையாக நின்றது எம்மால் மறக்கமுடியாது.

அரசியலில் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பலப்படுத்துதல் முக்கிய பங்காற்றினார். சந்திரிக்கா அரசில் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சராகவும் ஊடகப் பிரதி அமைச்சராகவும் பணிபுரிந்ததோடு மேல் மாகாண ஆளுநராகவும் நியமிக்கப் பட்டார். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலும் அவர் மேல் மாகாண ஆளுநராக பணிபுரிந்தார். இலங்கையில் ஆகக்கூடுதலான காலம் ஆளுநராக பணிபுரிந்த சாதனை அலவி மௌலானாவுக்கே உள்ளது.

அலவி மௌலானா கட்சி, இன , மத பேதங்களை பார்க்காது தன்னை நாடி வரும் எவரையும் முகம் சுளிக்காமல் சேவைகளை வழங்கிய ஒரு தலைவராவார்.

தர்கா நகரிலே 3 வருடங்களுக்கு முன் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்களின் போது தனது இயலாமையும் பார்க்காது இரவு பகலாக விழித்திருந்து அம்மக்களுக்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தார்.

அலவி மௌலானா நாட்டில் சகல மதத்தலைவர்களால் போற்றப்பட்ட ஒருவராவார். மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற அவர் தான் கொண்ட கொள்கையை ஒரு போதும் மாற்ற விரும்பாதாவர். ஆட்சி மாறிய போது புதிய அரசில் பதவிகள் வழங்குவதற்கு தயாரான போதும் தான் கொண்ட கொள்கையிலிருந்து விலகாமலிருந்த ஒரு தலைவராவார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க , சந்திரிக்கா குமாரதுங்க மஹிந்த போன்ற தலைவர்களுடன் நெருங்கி செயற்பட்ட அலவி மௌலானா என்றும் வெள்ளை நிற ஆடை அணிவது போன்று அவரது மனமும் வெள்ளையாகவே இருந்தது.

ஏ.ஓ. முஹர்ரிஸ்

## கட்டார் மீது...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

என எச்சரித்துள்ளது ஐக்கிய அரபு அமீரகம்.

இஹ்வான்கள் மற்றும் ஈரானுக்கான ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து கட்டார் மாறிக்கொள்ளாத வரை கட்டாருடனான உறவில் எவ்வித முன்னேற்றமும் வரப் போவதில்லையென சுட்டிக்காட்டியுள்ள அமீரகத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர் அன்வர் கர்கேஷ், அடுத்த கட்ட நடவடிக்கையாக பொருளாதாரத் தடை அமையும் எனவும் கட்டார் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

2014ம் ஆண்டு, இக்குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கட்டார் வளைகுடா நாடுகளுக்கான கூட்டுறவு அமைப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. எனினும், பேச்சுவார்த்தைகளின் மூலம் வாக்குறுதிகளின் அடிப்படையில் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில் மீண்டும் அண்மையில் ட்ரம்ப் மத்திய கிழக்கு விஜயம் மேற்கொண்டதைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை முதல் அரபு நாடுகளுக்குள் முறுகல் நிலை தொடர்கிறது.

கட்டாரின் ஈரான் ஆதரவு நிலைப்பாடு பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக இருப்பதாக பஹ்ரைன் சுட்டிக்காட்டியிருக்கும் அதேவேளை தம் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் கட்டார் நிராகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## கட்டார்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்டார் நாட்டுக்கான விமான சேவையினால் இலங்கைக்கு பாரியளவு நிதி கிடைக்கப் பெற்றது. இந்நிலையில், அந்நாட்டில் எழுந்துள்ள நெருக்கடி நிலைமையானது இன்னும் அதிகரிக்குமாயின், அந்நாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் திரும்பி விட வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். இதனால், இலங்கையின் அந்நியச் செலாவணி வீழ்ச்சியடையக் கூடிய அபாயம் காணப் படுகின்றது.

ஒரு லட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்கள் கட்டாரில் உள்ளனர். கடந்த 2 வருடங்களில் சவுதிக்கு அடுத்தபடியாக அதிகமான இலங்கையர்கள் தொழிலுக்காக கட்டார் நாட்டுக்கே சென்றுள்ளனர். இப்படியிருக்கையில், இலங்கைக்கு ஏற்படவுள்ள தாக்கத்தைக் குறைக்க துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## திருமலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (04.06.2017) அதிகாலை 4.00 மணியளவில் பள்ளிவாசலின் ஒரு பகுதிக்கு தீ வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து திருகோணமலை துறைமுகப் பொலிஸின் நிலையப் பொறுப்பதிகாரி ரொசான் திமித் அலத்கமகே தலைமையிலான விசேட குழுவின் தீவிர விசாரணையின் போதே மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நாசகார செயலுக்குப் பின்னணியில் மற்றும் பலர் இருக்கலாமென பொலிஸார் சந்தேகிப்பதுடன் அவர்களையும் மிக விரைவில் கைது செய்து நீதமன்றம் முன் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இராஜதந்திர...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஷிமைஹ் அல்-மர்ரி, மேற்படி இராஜதந்திர உறவுகள் துண்டிப்பு மற்றும் இதனுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள சில தடைகள் காரணமாக பல்வேறு சர்வதேச மனித உரிமை உடன்பாடுகள் பாரதூரமாக மீறப்படுவதாக குறிப்பிட்டார்.

சர்வதேச சமூகம், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஆகியவை இவ்விடயத்தில் தலையிட்டு மேற்படி நாடுகளினால் மீறப்படுகின்ற மனித உரிமை மீறல்களை உடனடியாக நிறுத்த முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் கல்வி, சுகாதாரம், தொழில், வர்த்தகம், சுதந்திரமான நகர்வு, குடும்ப உறவுகள், அசையும் அசையா சொத்துக்கள் சார்ந்த பல முறைப்பாடுகள் தற்பொழுது கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை பெற்று உரிய தரப்புக்களின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக 24 மணிநேரமும் இயங்கும் முறைப்பாட்டு மையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, வளைகுடா நாடுகளில் திருமண உறவுகளை கொண்டுள்ளோர் மீது பல் வேறு நெருக்குவாரங்கள் இடம்பெறுவதாகவும், தொழில் வர்த்தகம் சட்டபூர்வமாக அசையும் அசையா சொத்துக்கள், கம்பனிகள், கல்வி என பல்வேறு துறைகளிலும் ஈடுபாடு கொண்டுள்ளோர் அந்த நாடுகளில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு வேண்டப்பட்டுள்ளதால் பாரிய உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகவும் கலாநிதி அலி பின் ஷிமைஹ் அல்-மர்ரி குற்றம் சாட்டியுள்ளார்.

திருமண உறவுகளின் படி வளைகுடா நாடுகளில் தாய் ஒரு நாட்டவராகவும் தந்தை ஒரு நாட்டவராகவும் அல்லது பிள்ளைகள் ஒரு நட்டவராகவும் இருப்பதனால் அவர்கள் மீது பயணத்தடை அல்லது நாட்டை விட்டு வெளியேற்றல் போன்ற கெடுபிடிகளும் இடம்பெறுவதாக முறையீடுகள் கிடைத்துள்ளமை குறித்தும் கட்டார் தேசிய மனித உரிமைகள் ஆணையம் கவலை வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் கொள்கை அமைச்சின் குழந்தைகள் செயற்பாடு அறிக்கையின் 2016 தரவுகளுக்கு அமைவாகவே மேற்படித் தகவல்கள் வெளிவந்துள்ளன.

குறித்த ஆய்வானது 2016 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, இந்த ஆய்வில் பிள்ளைகளின் புள்ளி விபரத் தகவல்கள், பாடசாலை கல்வி, பொருளாதார நடவடிக்கைகள், சுகாதாரம், பாதுகாப்பு, பெற்றோரினால் பெறப்படும் தகவல்கள், பல்வேறு தொழில்கள் மற்றும் கிராமத்தினால் வழங்கப்படும் வசதிகளினால் தங்கியுள்ள குழந்தைகள் உள்ளிட்ட பல்வேறுத் தகவல்கள் திரட்டப்பட்டன.

நாட்டில் சனத்தொகையின் அடிப்படையில் நூற்றுக்கு 4.6 வீதமான 5 தொடக்கம் 17 வரையான வயதுகளில் 4 இலட்சத்து 57ஆயிரத்து 1,442 பிள்ளைகள் உள்ளனர். அவர்களில் பாடசாலை செல்வது 4,118,741 பிள்ளைகளாகும் என்றும் நூற்றுக்கு 9.9 வீத பிள்ளைகள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது 4 இலட்சத்து 52 ஆயிரத்து 661 பிள்ளைகள் இடைநிறுத்தியுள்ளனர் எனவும் 51,249 பிள்ளைகள் ஒருநாளேனும் பாடசாலைக்கு சென்றதில்லை எனவும் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலுள்ள பிள்ளைகளே பாடசாலை செல்லாத பிள்ளைகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர். அத்தோடு, அவர்களோடு தோட்டப்புறங்களில் வாழும் பிள்ளைகளும் இப் பட்டியலில் அடங்குகின்றனர்.

பெற்றோர்களால் பிள்ளைகள் அவதானிக்கப்படாமை, தாய் வெளிநாட்டில் இருத்தல், தந்தை வெளிநாட்டில் இருத்தல் அல்லது குடும்பத்தை பிரிந்துசெலல், தாய் மற்றும் தந்தை வேறு திருமணம் செய்தல், குழந்தைகள் வீட்டு சிறையில் இருத்தல், குற்றச்செயல்கள், தொழில்களில் பிள்ளைகள் ஈடுபடுதல் உள்ளிட்ட காரணங்களாலே பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகின்து என்றும் அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.தெஹிவளையைச் சேர்ந்த 33 வயதான சுசன் குமார என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

நுகேகொட, விஜேராம சந்தியில் உள்ள முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான லெதர் மற்றும் காபட் வகைகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்று திங்கட்கிழமை நள்ளிரவு தீயிட்டு எரிக்கப்பட்டதுடன், இதனால் 12.5 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.எனினும், குறித்த சம்பவத்தை நேரில் கண்டவரின் வாக்குமூலத்தை மிரிஹான பொலிஸார் பெற்றுக்கொண்டதுடன், விசேட விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

இதனையடுத்து மஹரகம, ஹைலெவல் வீதியில் உள்ள முஸ்லிம் வர்த்தகரொருவருக்கு சொந்தமான சப்பாத்துக் கடை மீது செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 2.41 மணியளவில் இனந்தெரியாத நபரொருவரினால் தீவைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த கடையின் முன்பகுதி மாத்திரமே சிறியளவில் தீப்பற்றியுள்ளதுடன், பொருட்களுக்கு எந்தவொரு சேதமும் ஏற்படவில்லை. தெஹிவளையினைச் சேர்ந்த மொஹமட் அஸ்லம் என்ற வர்த்தகரொருவருக்கு சொந்தமான மஹரகம நோலிமிட் ஆடையகத்துக்கு எதிர் திசையிலுள்ள ஜஸ்ட் போ யூ என்ற சப்பாத்துக் கடையே இவ்வாறு இனந்தெரியாத நபரொருவரால் எரியூட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த இரு சம்பவங்களின் சி.சி.ரி.வி காட்சிகளின் உதவியுடன் விசாரணைகளை மிரிஹான பொலிஸ் நிலையத்தின் விசேட பொலிஸ் பிரிவு மற்றும் இரகசிய பொலிஸார் மேற்கொண்டதுடன், இதன்மூலம் சந்தேகநபரை கைது செய்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை அண்மையில் மஹரகம பிரதேசத்தில் தீ வைக்கப்பட்ட முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான நான்கு வியாபார நிலையங்களுக்கும் தீ வைத்தவர் குறித்த நபர் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்நிலையில் குறித்த நபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதுடன் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. குறித்த நபர் தற்போது பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டு பல்வேறு கோணங்களில் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# கொமர்ஷல் வங்கியின் இத்தாலி நாணயமாற்று இல்லத்தின் முகவர் நிலையம் வெரோனாவில் நியமனம்




இத்தாலியில் நாணய பரிமாற்றத்துக்காகச் செயற்படும் கொம்மெக்ஸ் ஸ்ரீலங்கா SRL என்ற முற்று முழுதும் கொமர்ஷல் வங்கிக்கு சொந்தமான துணை நிறுவனம் இத்தாலியின் வெரோனாவில் உள்ள எவர் கனெக்ட் டிராவல்ஸ் அன்ட் டுவர்ஸ் நிறுவனத்தை அந்த நகரின் அங்கீகரிக்கப்பட்ட தனது முகவர் நிலையமாக நியமித்துள்ளது. வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ்.ரெங்கநாதன், டிஜிட்டல் வங்கிப் பிரிவின் தலைவர் பிரதீப் பந்துவெல்ல ஆகியோர் வெரோனாவில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்து கொண்டனர்.




# Mobitel வழங்கும் தரவுகளை பரிசளிக்கும் புதிய சேவை




இலங்கையின் தேசிய தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான மொபிடெல், எப்போதும் தனது வாடிக்கையாளர்களின் நலன்களில் அக்கறை செலுத்துவதில் முன்நிற்கும் பிரபலமான நிறுவனம். தொடர்ந்து மொபிடெலின் வாடிக்கையாளர்சேவைகள் , மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வருகையில் தற்போது மற்றுமொரு புதிய சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. முதன்முறையாக மொபிடெலின் Pre-Paid வாடிக்கையாளர்களுக்காக தரவுகளை (Data) பரிசளிக்கும் புதிய முறையை ஆரம்பித்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மொபிடெல் Pre-Paid வாடிக்கையாளர், தமது செயற்பாட்டிலுள்ள தரவுகளின் ஒரு பகுதியை இன்னுமொரு மொபிடெல் Pre-Paid வாடிக்கையாளருக்கு வழங்கலாம்.

இந்த புதிய திட்டமானது தரவுப் பயன்பாட்டினை அதிகரிப்பதன் மூலம் அதிக பயனர்களை ஈர்ப்பதற்கும் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துவதற்கும் பயன்படுகின்றது.

அத்துடன் தற்போது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் Broadband சந்தையின் வளர்ச்சியை மேலும் அதிகரிக்க செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தரவுகளை பரிசளிக்கும் சேவையானது, Pre-Paid வாடிக்கையாளர்களின் தரவுகளில் குறைந்தபட்சமாக 250MB முதல் அதிகபட்சமாக 10GB வரையான தரவுகளானது 7 நாட்களுக்குள் பாவிக்கப்பட வேண்டும். காலை அல்லது பகல் நேரத்தில் இந்த சேவையை அமுல்படுத்த DGD என்று பதிவு செய்து , சிறு இடைவெளிவிட்டு, தரவுகளை பெறுபவரின் கையடக்கத்தொலைப்பேசி இலக்கத்தை பதிவு செய்து , சிறு இடைவெளிவிட்டு, தரவுகளின் அளவினை குறிப்பிட்டு 170 என்ற இலக்கத்திற்கு அனுப்பவேண்டும் (Type DGD < Space> <receiver's mobile number< Space> 250MB& SMS to 170).

இரவு நேர தரவுகளாயின் DGN என்று பதிவு செய்து, சிறு இடைவெளிவிட்டு, தரவுகளை பெறுபவரின் கையடக்கத்தொலைப்பேசி இலக்கத்தை பதிவு செய்து, சிறு இடைவெளிவிட்டு தரவுகளின் அளவினை குறிப்பிட்டு 170 என்ற இலக்கத்திற்கு அனுப்பவேண்டும் (Type DGN< Space> <receiver's mobile number< Space> 250MB& SMS to 170). இந்த சேவையை அமுல்படுத்த 2 ரூபாய் கட்டணத்துடன் அம்மாதத்திற்கான பிரயோகத்தைகான வரியும் அறவிடப்படும்.

தரவுப்பரிசளிப்பு திட்டமானது வாடிக்கையாளர்களின் தேவைகளை சரியாக பூர்த்தி செய்யும் திட்டமாகும். கசந-கயனை வாடிக்கையாளர்கள், தங்களது பயன்படுத்தாமல் விட்ட தரவுகளை தமது அன்புக்குரியவர்களுக்கு பரிசளிக்கலாம்.

# கொமர்ஷல் வங்கி, யுனைட்டட் மோட்டர்ஸ் இடமிருந்து திகைப்பூட்டும் புதிய லீசிங் ஊக்குவிப்புக்கள்




யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து டிரக்குகள் மற்றும் பல் வண்டிகளை கொமர்ஷல் வங்கியின் லீசிங் ஊடாக கொள்வனவு செய்யும் தனிநபர்கள் அல்லது வர்த்தக நிறுவனங்களுக்கு கவர்ச்சிமிக்க அனுகூலங்கள் கிடைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பியுஸோ வகை சார்ந்த டிரக்குகள் மற்றும் இலங்கையில் யுனைட்டட் மோட்டர்ஸ் ஊடாக விற்பனை செய்யப்படும் பல் வண்டிகள் என்பனவற்றுக்கு கொமர்ஷல் வங்கியூடான குறைந்த வட்டி வீத லீசிங் மற்றும் ஒரு லட்சம் ரூபா கழிவு முற்றிலும் இலவசமான மூன்று பராமரிப்புச் சேவைகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்த ஊக்குவிப்புத் திட்டம் இரு நிறுவனங்களாலும் இணைந்து அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஊக்குவிப்பு காலம் 2017 ஜூலை 31 வரை செல்லுபடியாகும். கொமர்ஷல் வங்கியின் நாடு முழுவதும் உள்ள கிளைகள் ஊடாக இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் திட்டத்தின் ஊடாக வாங்கப்படும் வாகனங்களுக்கு யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனம் ஒரு வருடம் அல்லது ஒரு லட்சம் கிலோமீற்றர் உத்தரவாதத்தை வழங்கும். லீசிங்குக்கான வாடகை ஐந்தாண்டு காலத்துக்கு ஒவ்வொரு ஒரு லட்சத்துக்கும் 2337.16 என்ற குறைந்த பட்ச தொகையில் தொடங்குகின்றது. வெளியிடப்படும் லீசிங் வாடகை குறைப்பின் பிரகாரம் மூன்று மற்றும் நான்கு ஆண்டுகளுக்கான கசிங்களும் உறுதி செய்யப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது. இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழான லீசிங் உடன்படிக்கைகளை வங்கி துரிதமாகச் செய்து கொடுக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு (SMEs) இத்தகைய ஊக்குவிப்பின் மூலம் நன்மைகள் பல கிடைக்கின்றன. அதேபோல் பெரிய வர்த்தகங்கள் தங்களது வாகன அணியை விரிவாக்கிக் கொள்ளவும் பழைய வாகனங்களை அப்புறப்படுத்தி புதியவற்றை இணைத்துக் கொள்ளவும் சந்தையைத் தூண்டவும் இவை உதவும் என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம். வெற்றிகரமான லீசிங் ஊக்குவிப்புத் திட்டங்களில் கொமர்ஷல் வங்கி இதற்கு முன்னரும் யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனத்துடன் இணைந்துள்ளது. இந்த புதிய ஒத்துழைப்பிலும் அதேபோல் பல நன்மைகளை நாம் எதிர்ப்பார்க்கின்றோம் என்று அவர் மேலும் கூறினார்.




# சம்பத் வங்கியின் Green Invento இனால் இலங்கை பல்கலைக்கழகங்களிடமிருந்து சூழலுக்கு நட்பான புத்தாக்கங்களுக்கு அழைப்பு




நிலைபேறான எதிர்காலத்துக்கு தன்னை அர்ப்பணித்துள்ள சம்பத் வங்கி Green Inventor போட்டியை அறிமுகம் செய்துள்ளது. கண்டுபிடிப்பாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு தொடர்பாக தமது திறமைகளையும் ஆக்கங்களையும் வெளிப்படுத்தக்கூடிய ஒரு கட்டமைப்பாக இது அமைந்துள்ளது.

நாட்டின் முன்னணி நிதிசார் நிறுவனமாக 30 வருடங்களை கொண்டாடும் சம்பத் வங்கி, உள்நாட்டின் தீர்வுகள் மற்றும் புத்தாக்கங்கள் போன்றவற்றை நாட்டுக்கு வழங்கும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது. இலங்கையில் சூழல் பாதுகாப்பான கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை தயார்ப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ள இந்த போட்டியின் மூலமாக பட்டம் பயிலும் மாணவர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பாக அமையும். இந்த போட்டியின் அடிப்படை இலக்கு புத்தாக்கத்தில் 3R கொள்கையை பின்பற்றியதாக அமைந்திருக்கும் (Reduce, Re-use and Recycle).

இறுதிப்போட்டிக்கு தெரிவாகும் போட்டியாளர்களுக்கு சம்பத் வங்கியினால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சிப்பட்டறை ஒன்றில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என்பதுடன், முழுமையான பயிற்சிகள் வழங்கப்பட்டு திட்டத்தை எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்பது குறித்த விளக்கங்களும் இறுதிப் போட்டியில் பங்கேற்பதற்கு முன்னதாக அவர்களுக்கு வழங்கப்படும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் பல்கலைக்கழகங்களின் பீடாதிபதி அல்லது திணைக்களங்களின் தலைமை அதிகாரி ஊடாக வங்கிக்கு 2017 ஜூலை 14ம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலும், விண்ணப்பப்படிவங்களை 'Sampath Green Inventor' கூட்டாண்மை நிலைபேறாண்மை அலகு, சம்பத் வங்கி பி.எல்.சி, இல. 110, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 2 எனும் முகவரிக்கு தபால் மூலமாக அல்லது நேரடியாக அனுப்பி வைக்க முடியும் அல்லது greeninventor@sb.sampath.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கலாம்.

சம்பத் வங்கியின் கூட்டாண்மை இணையத்தளமான http://www.sampath.lk/en/sustainability அல்லது வங்கியின் Facebook பக்கமான www.facebook.com/sampathbankplc ஊடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், 0765 88 66 50 எனும்; உடன் தொடர்பு இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

# ஹமீடியாவின் தனித்துவமிக்க பல்வேறு சலுகைகளுடன் ரமழானுக்கு தயாராகுங்கள்

புனித ரமழான் மாதத்தில் ஹமீடியா அளிக்கும் தனித்துவமிக்க பன்முக சலுகைகள், இந்த பருவகாலம் முழுவதும் நீங்கள் சிறப்பான ஆடையணிவதற்கு ஏதுவாக்கின்றது. தொடர்ச்சியாக நாட்டின் பெஷன் துறையில் எல்லைகளின் உச்சத்தை தொடும் இலங்கையின் ஆண்கள் ஆடைகளுக்கான முன்னணி நிபுணத்துவ நிறுவனமான ஹமீடியா, இந்த ரமழான் பருவகாலத்தினை என்றும் மறக்காத வகையில், தமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சலுகைகள், அனுகூலங்கள் மற்றும் விசேட ஆடைத்தொகுப்புகளை அளிக்கும் வகையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது.




தெரிவுசெய்யப்பட்ட தயாரிப்புகள் மீது 30வீத கட்டணச்சலுகை பெறுங்கள்: வாடிக்கையாளர்கள் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீது, நாடளாவிய ரீதியிலுள்ள ஹமீடியா காட்சியறைகளில் 2017 ஜூலை 11ம் திகதி வரை 30வீத சேமிப்பினை பெற்றுக்கொள்ள முடியும் ரமழான் பருவகாலத்தில் வாடிக்கையாளர்கள் முன்கூட்டியே தமது கொள்வனவுகளை மேற்கொண்டு, நவநாகரீக ஆடைகளை இப்போதே கொள்வனவு செய்து வைத்துக் கொள்ள முடியும். அதியுன்னத துணிவகைகளை கொண்டு தனிப்பயனாக்க முறையில் தைக்கப்பட்ட வடிவமைப்புகள் மற்றும் அழகூட்டல்களுடன் கூடிய ஹமீடியாவின் ஆடைத்தொகுப்புகள், வாடிக்கையாளர்கள், ரமழான் புனித காலத்தில் ஒவ்வொரு சமய மற்றும் குடும்ப நிகழ்வுகளிலும் கம்பீரம் மற்றும் அழகியலுடன் விளங்குவதற்கு துணை புரியும் என்றால் மிகையில்லை மிகச்சிறந்த தொகுப்புகளை கொள்வனவு செய்யுங்கள்: ரமழான் புனித மாதமானது, சமய அனுஷ்டானங்களை மேற்கொள்தல், குடும்பத்தினர் நண்பர்களுடன் நேரத்தை செலவு செய்தல் ஆகியவற்றுக்கான மாதமாகும்.

இந்த ரமழான் பருவகாலத்தில் ஹமீடியா ஆறு ஆடைப்பொதிகள் மற்றும் அணிகலன்களை ஒரு தொகுப்பாக கொள்வனவு செய்யும் வசதியை அமைத்துக்கொடுத்துள்ளது. இந்த பொதிகளில் ஷேர்ட்கள், காற்சட்டைகள், டெனிம்கள், சாரன்கள் மற்றும் காலணிகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் உள்ளடங்குகின்றன.

வாடிக்கையாளர் ஒருவர் குறித்த பொதியினை கொள்வனவு செய்ய உத்தேசிப்பாராயின், குறித்த பொதியில் உள்ள முக்கிய பொருள் ஒன்றின் மீது 25வீத கட்டண விலக்கினை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராகின்றார். இந்த வழங்கலானது, வாடிக்கையாளர்கள், ஒன்றுக்கொன்று தேவையான முக்கிய மற்றும் துணைப்பொருட்களை ஒரு தொகுப்பாக கொள்வனவு செய்ய வழியமைக்கின்றது. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான இந்த பொதி சலுகை வழங்கலானது ஜூன் 11ம் திகதி வரை கிடைக்கும்.




# சம்பியன் கிண்ண அரையிறுதிக்கு தகுதிபெறும் அணி எது?

■ பீ.எம்.எம் றிஷாட்

உலக ஒருநாள் தரப்படுத்துதலில் முதல் எட்டு இடங்களை பிடித்துள்ள அணிகள் மோதும் 8ஆவது ஐ.சி.சி சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் கடந்த முதலாம் திகதி இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகிய நாடுகளில் ஆரம்பமாகியது.எவ்வாறெனினும் இம்முறை கிண்ணத்தை கைப்பற்றி தமது பலத்தை நிரூபிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் குதித்திருக்கும் இவ் எட்டு அணிகளும் வலிமைமிக்க எதிரணிகளுடன் போட்டியிட்டு கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டிய சூழ்நிலையில் போட்டியிட்டு வருகின்றது.

இந்நிலையில் உலக டெஸ்ட் சம்பின்ஷிப் தொடரை நடத்துவதற்கு ஐ.சி.சி நடவடிக்கை எடுத்தபோது 2013ஆம் ஆண்டுக்குப்பிறகு இப்போட்டித் தொடரை இடைநிறுத்தவும் ஐ.சி.சி தீர்மானித்தது.ஆனால் 2014 முற்பகுதியில் இத்தீர்மானத்தை கைவிட்டு மீண்டும் சம்பியன் கிண்ணப் போட்டிகளை நடத்துவதற்கு ஐ.சி.சி ஏகமனதாக தீர்மானித்தது.

பொதுவாக 50 ஓவர் உலகக்கிண்ணப் போட்டிகள் ஒரு மாதகாலம் வரை நீடிக்கும். ஆனால் இப்போட்டித் தொடர் வெறும் 2 வாரங்களைக் கொண்ட குறுகிய போட்டி அட்டவணையுடன் இடம்பெறுகின்ற காரணத்தால், ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறுவது இவ் அணிகளுக்கு முக்கியமாக கருதப்படுவதுடன், போட்டித் தொடரின் விறுவிறுப்பையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.ஆனால் இங்கிலாந்தில் நிலவி வருகின்ற சீரற்ற காலநிலை இம்முறை போட்டித் தொடருக்கு மிகப் பெரிய பின்னடைவை கொடுத்துள்ளது.குறிப்பாக உலகின் முதல்நிலை ஒருநாள் அணிகளாக விளங்குகின்ற அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு மழையால் குறுக்கீடு காரணமாக அரையிறுதிக்கான வாய்ப்பை பெற்றுக் கொள்வதில் தடுமாறி வருகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது.

இதன்படி, ஜூன் முதலாம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில், ஏ பிரிவில் போட்டிகளை நடத்தும் இங்கிலாந்து அணி பங்களாதேஷ் அணியை வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தது.அதேபோல நியூசிலாந்து அணியுடனான 2ஆவது போட்டியில் இங்கிலாந்து அணி 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, அரையிறுதிக்குத் தெரிவாகிய முதல் அணியாக இடம்பிடித்தது. எனவே இங்கிலாந்தில் இதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு சம்பியன் கிண்ண போட்டிகளிலும் இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து அணி முன்னேறிய போதிலும், அவ்வணியால் கிண்ணத்தை கைப்பற்ற முடியவில்லை. சொந்த மண்ணில் இரண்டு தடவைகள் கோட்டைவிட்ட இங்கிலாந்து அணிக்கு சாதகமான மற்றும் உகந்த காலநிலையில் சொந்த மண்ணில் மீண்டுமொரு வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.அதே பிரிவில் அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டு இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டன.எனினும் பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் பந்துவீச்சில் ஆதிக்கம் செலுத்தி 183 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு மறுபடியும் மழை காரணமாக ஏமாற்றமே மிஞ்சியது.இதன் காரணமாக குறித்த போட்டியிலும் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டன. எளிய இலக்கு இருந்தும் மழையால் ஆட்டம் தடைப்பட்டதால் அவுஸ்திரேலிய ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில், 2006ஆம் ஆண்டு சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் அறிமுகமான பங்களாதேஷ் அணி சுமார் 11 வருடங்களுக்குப் களமிறங்கி முதற்தடவையாக அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப்பை பெற்றுக் கொள்ளும். இதன்படி இன்று(09) நடைபெறவுள்ள லீக் போட்டியில் பங்களாதேஷ் அணி நியூசிலாந்தை தோற்கடித்தால் அரையிறுதிக்குத் தகுதி பெறுகிற வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.மாறாக நியூசிலாந்து பங்களாதேஷை வென்றால் சனிக்கிழமை(10) நடைபெறவுள்ள ஏ பிரிவின் கடைசி லீக் போட்டியில் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டி முடிவுகளின் படி ஏ பிரிவில் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் அணி உறுதியாகும். அவுஸ்திரேலிய அணி இப்போட்டியில் வெற்றிபெற்றால் அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை பெற்றுக்கொள்வதுடன், நியூசிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகள் தொடரிலிருந்து வெளியேறும். இதே வேளை, இம்முறை போட்டித் தொடரிலும் தமது ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்ட நடப்புச் சம்பியனான இந்திய அணி பி பிரிவில் முதலிடத்தை

(15 ஆம் பக்கம் பார்க்க)